பெரியார் மாவட்டம் ஊரும் பேரும்

இரா. சி. சென்னியப்பன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010-தமிழ்நாடு

பெரியார் மாவட்டம் ஊரும் பேரும்

இரா.சி. சென்னியப்பன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் .

ISBN : 81-7090-389-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 328

திருவள்ளுவராண்டு 2038 - மார்கழி - திசம்பர் 2007

நூல்	:	பெரியார் மாவட்டம் ஊரும் பேரும்
ஆசிரியர்	:	இரா.சி. சென்னியப்பன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாறு
பதிப்பு	:	முதற்பதிப்பு 2007
பக்கம்	:	354
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 60 ஜிஎஸ்எம்
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. **110/-**
படிகள்	:	1,200
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010, இந்தியா.

முனைவர் சி. சுப்பிரமணியம்

துணைவேந்தர்

அணிந்துரை

சோழர் காலத்தில் சேர நாட்டின் ஒருபகுதியான கொங்கு நாடு, கொங்கு மண்டலம் எனப் பெயர் பெற்றது. வடக்கில் தலை மலை, தெற்கில் பழநி மலை, மேற்கில் வெள்ளியங்கிரி, கிழக்கில் குளித்தலை ஆகியன கொங்கு நாட்டின் எல்லைகளாக உள்ளன. பண்டைய வடகொங்கு நாட்டின் பெரும்பகுதியை இன்றைய பெரியார் மாவட்டமாகக் காண்கிறோம். இத்தகைய பெரியார் மாவட்டத்தின் ஊரும் பேரும் பற்றிய ஆய்வு நூல் வெளிவருவது கண்டு பெருமகிழ்ச்சி கொள்கிறேன். ஆராய்ச்சி அறிஞர் திரு இரா.சி. சென்னியப்பன் அவர்கள் அரிதின் முயன்று இதனை உருவாக்கி அளித்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியதாகும்.

கொங்கு நாட்டு ஊர்ப்பெயர் ஆய்வு குறித்து திரு சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களின் பங்களிப்பிற்குப் பின் வெளிவரும் இந்நூல் குறிப்பிடத்தக்கதாகும். கொங்கு நாட்டிற் குரிய தனி இயல்புகள், வரலாற்றுப் பின்னணி, இடைக்காலம் தொடங்கி ஏற்பட்டுள்ள கொடியேற்றங்கள் ஆகியவற்றை இவர் குறிப்பாக ஆராய்ந்துள்ளார். ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள ஊர் களின் பழமை மற்றும் பெருமை பற்றி இவர் குறிப்பிட்டிருப்பது வருங்கால ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுடையதாகும் என நம்புகிறேன்.

சமூக வளர்ச்சியின் சின்னங்களே ஊர்ப் பெயராகியுள்ளன என்பதும் ஒரு கூற்று. அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் செய்த அறச்செயல்களின் அழியாச் சின்னங்கள் பிரமியம், பிரமதேசம், மங்கலம், சூலைக்கல் காடு, தேவத்தானக்காடு என ஊர்ப் பெயர் களாயின. சோளக்காடு, எள்ளுக்காடு என விளைபொருள்களும் ஊர்ப்பெயர்களாயின. மக்களின் தொழில்களைச் சுட்டியும் ஊர்ப்

பெயர்கள் தோன்றியுள்ளன. பாளையம், புதூர், வலசு எனப் பல சிறப்புப் பெயர்களும் குறிப்பிடத்தக்கன. இவற்றை இந்நூலில் விரிவாகக் காணலாம்.

கொங்கு நாட்டின் பல வட்டங்களிலுள்ள ஊர்ப் பெயர்களை முறையாக ஆய்வு செய்த முழுமையான இந்நூலினை வழங்கியுள்ள அறிஞர் திரு இரா.சி. சென்னியப்பன் அவர்களின் பெரு முயற்சிகள் மேன்மேலும் சிறக்க வாழ்த்தி மகிழ்கிறேன். இதை அழகுறப் பதிப்பித்த பதிப்புத்துறை இயக்குநருக்கும் பதிப்புத்துறையினருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

(சி. சுப்பிரமணியம்)

நன்றியுரை

'தமிழகம் ஊரும் பேரும்' என்ற நூல் இவ்வாய்வுரை எழுதத் தூண்டுகோலாயிருந்தது. 1976ஆம் ஆண்டு நடைபெற்ற கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கிற்காக ''ஈரோடு வட்டம் ஊரும் பேரும்'' என்ற தலைப்பில் கட்டுரையாக்கினேன். அதன் தொடர்பாக நாடோறும் எனதுள்ளத்தில் எழுந்த எண்ணங்களை நிறைவேற்றும் முகமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மானியம் கொடுத்து ஆய்வுப்பணியைத் தொடர வாய்ப்பளித்தமை என் பணிக்கு ஊன்றுகோலாய் அமைந்தது.

'பெரியார் மாவட்டம் ஊரும் பேரும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்ய வாய்ப்பளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேன்மைமிகு வ.அய். சுப்பிரமணியம் அவர்களுக்கும் விரிதமிழ் இயக்குநர் திருமிகு முருகரத்தினம் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

இவ்வாய்வுப் பணியைச் செய்யப் பெரிதும் உதவிய தொல்பொருள் துறைப் பதிவாளர் திரு இரா. பூங்குன்றன், எம்.ஏ., அவர்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை ஆராய்ச்சியாளர் திரு புலவர் செ. இராசு, எம்.ஏ., அவர்களுக்கும் என் நன்றி. மேலும் எனக்குத் தேவையான நூல்களைத் தங்கள் பள்ளி நூலகத்திலிருந்து கொடுத்துதவிய கலைமகள் கல்வி நிலைய நிர்வாகி செல்வி எம். முத்தையா, பி.ஏ.,பி.டி., அவர்களுக்கும் நன்றி.

களப்பணியில் உதவிபுரிந்த கோபி வைரவிழா மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு புலவர் வி.பி. சுப்பிரமணியம், எம்.ஏ.,பி.எட்., அவர்களுக்கும் தாராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு புலவர் கே.எம். இப்ராஹிம், எம்.ஏ.,பி.எட்., அவர்களுக்கும் நன்றி. எமது எழுத்துப் பணியில் உதவிய எமது பள்ளித் தமிழாசிரியர் திரு புலவர் எஸ். மாரிமுத்து, பி.லிட்., அவர்களுக்கும் நன்றி. பெரியார் மாவட்டத்தின் நிலப் படத்தை வரைந்து உதவிய எமது பள்ளி ஓவிய ஆசிரியர் திரு ஜெ. ஞானஜேக்கப் அவர்களுக்கும் நன்றி.

பள்ளிப் பணிகளினூடே இவ்வாய்வுப் பணியை ஊக்குவித்த எமது பள்ளித் தாளாளர் திரு சுந்தர்ராஜ் வில்லியம் அவர்களுக்கும், தலைமையாசிரியர் திரு ஜெ.ஈ. தங்கையா, எம்.ஏ.,எம்.எட்., அவர்களுக்கும் உதவித் தலைமையாசிரியர் திரு பி.எஸ். தங்கதுரை, எம்.ஏ.,பி.டி., அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

புலவர் இரா.சி. சென்னியப்பன்

பொருளடக்கம்

	பக்கம்
அணிந்துரை	
நன்றியுரை	
முன்னுரை	1
கொங்கு நாடு	5
கொங்கு நாட்டு வரலாற்றில் ஊர்ப் பெயர்கள்	19
பழமைமிகு பெரியார் மாவட்டம்	33
பொதுக் கூறுகள்	43
ஈரோடு வட்டம்	77
காங்கயம் வட்டம்	97
கோபி வட்டம்	109
சத்தியமங்கலம் வட்டம்	115
தாராபுரம் வட்டம்	119
பவானி வட்டம்	133
பெருந்துறை வட்டம்	141
முடிவுரை	153
பயன்பட்ட நூல்கள்	159
பிற்சேர்க்கை (ஊர்ப்பெயர் அகரநிரல்)	165

முன்னுரை

தமிழக ஆய்வாளர்கள் ஊர்ப் பெயர்களை ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தாமல் இருந்தனர். இத்துறையில் முதன் முதலில் கவனம் செலுத்தியவர் தமிழறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் அவர் 1946 - ஆம் ஆண்டு 'தமிழகம் ஊரும் பேரும்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அதற்குப் பின் சுமார் 30 ஆண்டுகள் ஊர்ப் பெயரைப் பற்றி எழுதும் ஆர்வம் இல்லாமல் இருந்தது. கொங்குநாட்டு வரலாற்றைப் பற்றி ஆய்வதே தம் பணியாகக் கொண்ட சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் "இந்திய பூகோள இதழ் (Indian Geographical Journal) என்ற பத்திரிகையில் கொங்கு நாட்டு ஊர்களைப் பற்றி ஒரு சிறு கட்டுரை வரைந்தார். அது 1930 - ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் எஸ்.நடேசன் என்பவரும் 'கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்களைப்' பற்றி கட்டுரை எழுதியுள்ளார். 1970-80 ஆம் ஆண்டுகளில் ஊர்ப் பெயராய்வில் அறிஞர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர்.கேரளப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்கள் தம்முடைய முதுகலைப் பட்டத்தில் ஒரு பகுதியாக "சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்" என்ற தலைப்பில்

ஆய்வு செய்துள்ளார். கேரளப் பல்கலைக் கழகத்தில் 'சங்க கால ஊர்ப் பெயர்களைப்' பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சமீபத்தில் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் பண்டாரகர் பட்டத்திற்கு 'மதுரை மாவட்ட ஊர்ப் பெயர்களைப்' பற்றி ஆய்வு செய்துள்ளனர். சமீப ஆண்டுகளாக நடைபெறும் அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்குகளில் ஊர்ப் பெயர்களைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சில மலர்களிலும் இதழ்களிலும் சில கட்டுரைகள் ஊர்ப் பெயராய்வு பற்றி வெளியிடப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் ஆய்வில் நிறைஞர் (M.Phil) பட்டத்திற்காக 41 ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. அவ்வாய்வேடுகள் அனைத்தும் பாண்டி மண்டலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பற்றிய ஆய்வேடுகள் ஆகும். ஊர்ப் பெயராய்வில் ஆய்வாளர்கள் கவனம் மேலும் அதிகரித்துள்ளது. அதன் விளைவே1978 ஆம் ஆண்டு 'இந்திய ஊர்ப் பெயராய்வுக் கழகம்' (Place names Society of India) என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது. இக்கழகம் தனது முதல் இதழை 1979 ஆம் ஆண்டு வெளியிட்டது.

பொதுவாகத் தமிழ் நாட்டு நிலைமை இவ்வாறு இருக்க, கொங்கு நாடு ஊர்ப் பெயராய்வில் முன்னணியிடம் பெற்று உள்ளது. முதன் முதலில் ஊர்ப் பெயராய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதி கொங்க நாடுதான். 1930 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பகுதியின் சில ஊர்ப் பெயர்கள் ("Some Place Names in Coimbatore Region") என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் கொங்கு நாட்டு ஊர் மற்றும் நகரப் பெயர்களைப் பற்றிய பகுப்பாய்வு ("An Analysis of the names given in Towns and Villages in Kongu Nadu") என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் கொங்க நாட்டில் உள்ள ஊர்ப் பெயர் முடிவுகளை விரிவாக ஆய்வு செய்துள்ளார். அக்கட்டுரை இவ்வாய்விற்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

சி.எம். இராமச்சந்திரன் செட்டியாருக்குப் பின் ‘கொங்கு மண்டலச் சதகம்’ என்ற நூலை வெளியிட்ட முத்துச்சாமிக் கோனார் அவர்கள் சதகத்தில் வரும் கொங்கு நாட்டூர்களைப் பற்றி விரிவான வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார். அதற்குப்பின் டாக்டர் நாச்சிமுத்து அவர்களின் ‘ஊர்ப் பெயராய்வுகள்’ கொங்குநாட்டைப் பற்றியே அமைந்துள்ளன. அவர் எழுதிய கட்டுரைகளும் கொங்கு நாடு பற்றியே அமைந்துள்ளன. அவருக்குப்பின் காலஞ்சென்ற புலவர் சு. வேலுச்சாமி அவர்கள் புலவர் செ. இராசு,(கல்வெட்டுத் துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம்) அவர்கள், வே.இரா. துரைசாமி அவர்கள் ஆகியோர் கொங்குநாட்டு ஊர்களைப் பற்றிச் சில கட்டுரைகள் எழுதியுள்ளனர். சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்குகளில் கொங்கு நாட்டு ஊர்களைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் கொங்குநாட்டு ஊர்களைப் பற்றி எழுதிய கையெழுத்துப் பிரதி ஒன்று பேரூர் கல்லூரி நூலகத்தில் உள்ளது. சென்ற ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தமிழகத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் ஆய்வு செய்யக் குழு ஒன்று அமைந்துள்ளது.

சென்ற ஆண்டிலிருந்து நீலகிரியில் “ஆராய்ச்சி “என்ற பெயரில் ஒரு பத்திரிகை வருகிறது. அப்பத்திரிகை நீலகிரி வாழ் படுகர் என்ற பழங்குடி பற்றிய ஆய்வுகளை வெளியிட்டு வருகிறது. அப்பத்திரிகையில் ஊர்ப் பெயராய்வும் விரிவாகச் செய்யப்பட்டுள்ளது. படுகர்களுக்கும்,இந்தியாவின் மேற்குக் கரைப்பகுதி ஊர்களுக்கும், ஆப்கானிஸ்தான்,ஈரான்,ஈராக் ஆகிய பகுதி ஊர்களுக்கும் தொடர்பு இருப்பதாக அவ்வாய்வில் சொல்லப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் உள்ள ஊர்களைப் பற்றியும் விரிவாக ஆய்வு செய்துள்ளனர்.

ஊர்ப் பெயர் ஆய்வுக்கான முயற்சி நடைபெற்ற போதும் இன்னும் அத்துறை குழந்தை நிலையில்தான் உள்ளது. ஊர்ப் பெயர் ஆய்வுகளைச் செய்யும் முறைகள் பற்றி மேநாட்டவர்கள் கண்டறிந்து

ஆய்வு செய்து வருகின்றனர். ஆனால் தமிழ் நாட்டில் அத்தகைய ஆய்வியல் முறைகள் உருவாக்கப்படவில்லை. ஆகையால், இதுவரையில் தமிழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்த ஊர்ப் பெயர் ஆய்வுகளை மனதில் கொண்டு பெரியார் மாவட்ட ஊர்ப் பெயர்களை ஆய்வு செய்ய முயன்றுள்ளேன். இவ்வாய்வில் கொங்கு நாட்டிற்குரிய தனி இயல்புகள், வரலாற்றுப் பின்னணி, மத்திய காலம் தொடங்கி ஏற்பட்டுள்ள குடியேற்றங்கள் ஆகியன கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வட்டத்திலும் பழமையும் பெருமையும் மிக்க ஊர்களைத் தனியாகக் குறிப்பிட்டுள்ளேன். ஏனையவை பொதுப்பெயர் விகுதியால் இடம் பெறும் ஊர்களாக கணக்கில் கொண்டு ஆய்வு செய்துள்ளேன். இவ்வாய்விக்குக் கிடைத்த சான்றுகள் சில நேரில் கண்டறிந்து செய்ய வேண்டியவை பல, என்னால் இயன்றளவு முயன்று ஆய்வு செய்துள்ளேன்.

கொங்குநாடு

சோழர்காலத் தமிழ்நாட்டில் பெரிய மண்டலங்கள் இருந்தன. அவை தொண்டை மண்டலம்,நடுமண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம், கொங்குமண்டலம் ஆகியன. சங்க காலத்தில் சேர நாடு முக்கிய பகுதியாகக் குறிப்பிடப்பட்டாலும்,சேரமண்டலம் என்ற பெயர் இல்லை. [1] சோழர் காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாடு கொங்கு மண்டலம் எனப் பெயர் பெற்றது.[2] வரலாற்று ஆசிரியர்கள் மண்டலங்களைப் பிரித்தற்கான காரணத்தை ஆய்ந்து கூறும்போது அவை பிரிக்கப்பட அரசியல் நிர்வாகத் தேவையே காரணம் என்று கூறினர்.[3] மரபு வழி வந்த வரலாற்று ஆசிரியர் அனைவரும் இக்கருத்தினையே பின்பற்றி எழுதினர். ஆனால், சமீபகாலத்திய ஆய்வுகள் மண்டலம் பிரிப்பதற்குக் காரணம் நிர்வாகத் தேவை மட்டும் அல்ல என்பதை வலியுறுத்துகிறது.[4] ஒவ்வொரு மண்டலமும் தனக்கேயுரிய வேளாண்மைப் பொருளாதாரம், பருவநிலைகள் போன்றவற்றைக் கொண்டிலங்குகின்றது. இவையே மண்டலங்கள் பிரிப்பதற்கு அடைப்படைக் காரணங்கள் ஆகும். ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒவ்வொரு விதமான விளைபொருட்கள் சிறப்புற்றிருந்தன.[5] தொண்டை மண்டலத்தை எடுத்துக் கொண்டால்

அங்கு நன்செய்ப்பயிர்களும்,புன்செய்ப் பயிர்களும் சம பங்கில் விளைவிக்கப்பட்டன. சோழ மண்டலத்தில் நன்செய்பயிர் மிகுதியாயும், புன்செய்பயிர் குறைவாயும் விளைவிக்கப்பட்டது. கொங்கு மண்டலத்தில் புன்செய்பயிர் மிகுந்தும் நன்செய்பயிர் குறைந்தும் விளைவிக்கப்பெற்றது. இதுபோலவே மற்ற மண்டலங்களும் அவற்றுக்கேயுரிய விளை பொருட்களைக் கொண்டிருந்தன. இவ்வாறு மண்டலப் பிரிவுக்குக் காரணமாக அமைந்தவை. வேளாண்மைப் பொருளாதாரமும், பருவ நிலையுமேயாகும்.

ஐந்து மண்டலங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கொங்கு மண்டலம் தனக்கேயுரிய தனி அலாதியான பண்பாட்டுக் கூறுகளைப் பெற்று விளங்குகிறது. சங்ககாலம் தொட்டு இப்பகுதி வரலாற்றினை ஆழ்ந்து ஆய்வு செய்யும்போது வியப்பைத் தரும் பல தனிக் கூறுகளும் பண்டைத் தமிழரின் பண்பாட்டுச் செல்வங்களும் ஆய்வாளர்களுக்குப் புலப்படாமல் போகா கொங்கு மண்டலத்தின் அரசியல் வரலாறு ஒரே சீராக அமையாமல் வீழ்ச்சி எழுச்சிகளுடன் இருப்பினும் மக்கள் வாழ்க்கையில் தொடர்ச்சியான போக்கு இன்று வரை நிலைபெற்றுள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் தனி அலாதியான பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் வழிபாடுகளையும் கொண்டிருந்தனர். அதற்கு ஆயவாளர்கள் கூறும் காரணம் கொங்கு நாட்டின் பூகோள அமைப்பே ஆகும்.

தமிழகத்தில் பிற மண்டலங்களுக்குத் தனித் தெளிவான எல்லைகள் கூறப்பட்டது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் ஆகும்.[6] அதேநிலைதான் கொங்கு மண்டலத்திற்கும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கொங்கு மண்டலச் சதகம் கொங்குநாட்டில் நாற்புற எல்லைகளை வரையறுத்துக் கூறுகின்றது.[7] சதகம் மட்டுமல்லாமல் மரபு வழிவந்த பாடல்களும் சில மாற்றங்களுடன் இந்த எல்லைகளைக் குறிப்பிடுகின்றன. வடக்கில் தலைமலை

எல்லை, தெற்கில் பழநிமலை எல்லை,மேற்கில் வெள்ளியங்கிரி எல்லை, எல்லை; கிழக்கில் குளித்தலை எல்லை ஆகும். மற்றொரு பாடல் வடக்கு எல்லை பெரும்பாலை எனக் குறிப்பிடுகிறது.[8] வாலசுந்தரக் கவிஞர் தமிழகத்தில் கிழக்கெல்லை மதுக்கரை எனக் கூறியுள்ளார். சதகத்துக்கு முன்பு கொங்குநாட்டின் எல்லைகள் அரசர்களின் ஆதிக்க சக்தியைப் பொறுத்து நிலையற்றிருந்தன. பாண்டியர் காலச் செப்பேடுகள் கொங்குநாட்டை கொங்கு என்றும், மழகொங்கு என்றும் குறிப்பிட்டுகின்றன.[9] ஆனால் அக்கால இலக்கியங்கள் கொங்கு என்றும் மழகொங்கு என்றும் குறிப்பிடுகின்றன.[10] கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சாசனங்கள் வடகொங்கு, தென்கொங்கு என்று இருபெரும் பிரிவுகளைச் சுட்டுகின்றன.[11]

உண்மையில் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கும் பெரியார் மாவட்டம் பண்டைய வடகொங்கு நாட்டின் பெரும்பகுதியைத் தன்னுள் அடக்கியுள்ளது. வடகொங்கு நாட்டில் உள்ள பாரியூர்[12] விசயமங்கலம்[13] சுகலூர்[14] மொடச்சூர்[15] ஆகிய ஊர்களில் எழுதப்பட்ட ஒரே வாசகத்தைக் கொண்ட கல்வெட்டுக்கள் வடகொங்குநாட்டுப் பகுதியை வரையறுத்துக் கூறுகின்றன. அக்கல்வெட்டுகள் கோனேரின்மை கொண்டான் என்ற மன்னன் காலத்தில் வெளியிடப்பட்டன.

1. ஸ்ரீ பரகேசரி ஸ்வஸிரி ஸ்ரீ திரி புவன சக்ரவத்திகோனே ரின்மை கொண்டாந் வடகொ

2. ங்கில் நரையனூர்னாட்டு அடிக்கீழ்த்தள மாநராஜ ராஜபுரமும் பொங்கலூர் கானா

3. டும் தென்கரை நாடு மண்டநாடும் தலையூர் நாடும் வடகரை மணலி நாடும் காம

4. னாடும் கிழக்கனாடும் வெங்கலன ாடும் தட்டையூர் னாடும் வடகரை மிடைப் புழுதினாடும் காங்க

5. யனாடும் வீரசோழவளனாடும் வலுப்புக்கானாடும் குறுப்பு நாடும் வடபரிசார நாடும் காஞ்சி

6. க்கவனாடும் பூந்துறைனாடும் கிழப்பரை நாடும் வடகரை னாடும் இன்னாடுகளில்

7. சிவப்பிராமனக் காணியாளக்கும் தாநத்தாற்கும்,[16]

மேலே காட்டப்பட்ட கல்வெட்டில் வடகொங்குப்பகுதியில் 22 நாடுகள் இருந்ததாகச் சுட்டப்பட்டுள்ளன. அவை.1. நரையனூர் நாடு 2. பொங்கலூர்க் கானாடு, 3. தென்கரை நாடு, 4. அண்ட நாடு 5. தலையூர் நாடு, 6. வடகரை மணலி நாடு, 7. காமநாடு 8. கிழங்கநாடு, 9. வெங்கால நாடு, 10. தட்டையூர் நாடு, 11.இடைப்புழுதி நாடு, 12. காங்கய நாடு, 13. வீரசோழ வளநாடு, 14. வலுப்புக்கானாடு, 15. குறுப்புநாடு, 16. வடபாரிசாரநாடு, 17. காஞ்கிக்கூவல் நாடு, 18. பூந்துறை நாடு, 19. கீழ்ப்பரை நாடு, 20. வடகரை நாடு ஆகிய இந்நாடுகளில் வடபாரிசார நாடு இன்றைய கோவை மாவட்டத்தின் அவிநாசி வட்டத்தை உள்ளடக்கியது. அண்டை நாடு பழநி வட்டத்தைச் சேர்ந்தது.வெங்கால நாடு கரூரைச் சுற்றியுள்ள பகுதி. கிழங்க நாடு கரூர்க்கு கிழக்கில் உள்ளது. இவை தவிர்ந்த பிறநாடுகள் பெரியார் மாவட்டத்தின் பகுதியில் அடங்கிய நாடுகள் ஆகும். இவை மட்டுமல்லாமல் ஒடுவங்க நாடு என்ற ஒரு நாடு பெரியார் மாவட்டத்தில் அடங்கியுள்ளது. அது இன்றைய சத்தியமங்கலம் வட்டத்தின் ஒரு பகுதியாகும்.

சோழர் காலத்தில் வடகொங்கு,தென்கொங்கு எனப் பிரித்ததற்கு அரசியல் ஆதிக்கப்போட்டி காரணமாக இருந்திருக்கலாம்.

ஏனெனில், கொங்குச் சோழர் பரம்பரையில் இரண்டு பிரிவினர் இரண்டு பகுதியைத் தனித் தனியே ஆட்சி செய்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன.[17] இவர்களுக்கு இடையில் சண்டைச் சச்சரவுகள் மூண்டதற்கான வரலாற்றுக் குறிப்புக்கள் இலங்கையில் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற நூலில் காணக் கிடைக்கின்றன. அரசியல் முரண்பாடுகள் ஒருபுறமிருக்க இந்தக் கொங்குப் பிரிவிற்கு வேறு அடிப்படையாக காரணம் இருந்திருக்க வேண்டும். அதுவே, இவ்விரு பகுதிகளிலும் இருந்த பொருளாதார உற்பத்தி முறையாகும். வடகொங்குப் பகுதியில் கொங்கு நாட்டாறுகளைத் தடுத்து நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் திறன் சோழர் காலத்தில் காணப்படுகிறது. ஆனால், தென்கொங்கு பகுதியில் ஆற்றங்கரையில் உள்ள நாடுகள் தவிர மற்ற நாடுகளில் வேளாண்மை நிலையற்றதாகவே இருந்தது. பெரும்பாலும் மானாவாரிப் பயிரே செய்யப்பட்டது. இந்த வேறுபாட்டினைச் சுட்டுவதற்கு கொங்கு இருபெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்றைய சேலம் மாவட்டத்தின் ஆற்றூர் ஒழிந்த மற்ற வட்டங்கள் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டன. அவ்வாறு கருதுவதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைக்கின்றன. ஆனால் சமீபத்தில் சில ஆய்வாளர்கள் சேலம் மாவட்டப் பகுதிகளை வட கொங்குநாட்டின் பகுதியாகச் சுட்டுகின்றனர்.[18] உண்மையில் கல்வெட்டுக்கள் இப்பகுதியினை வடகொங்கு நாடு என்று எங்கும் சுட்டவில்லை. பாண்டியர் காலச் செப்பேடுகள் இப்பகுதியை மழகொங்கம் என்று சுட்டுகின்றன. இப்பெயர் கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் வழங்கியது.[19]

கொங்கு நாடு நாற்புறமும் மலைகள் சூழ்ந்த நாடு. சேலம் மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள சேர்வராயன் மலைகள், பெரியார் மாவட்டத்தின் வடக்கில் உள்ள பர்கூர் மலைகள், நீலகிரி, கோவை மாவட்டத்தின் மேற்கில் உள்ள வெள்ளியங்கிரிக் குன்றுகள், ஆணைமலைக் குன்றுகள், திருமூர்த்தி மலை,தெற்கில் கோடை

மலை, கருடன் கோட்டைக் குன்றுகள், கிழக்கில் கொல்லி மலை, பச்சைமலை ஆகியன கொங்கு நாட்டைச் சூழ்ந்துள்ளன. மலையில் கிடைத்த இயற்கை வளங்களைப் பற்றிச் சங்க காலப் புலவர்கள் முதல் கொங்குமண்டலச் சதக ஆசிரியர்கள் வரை விதந்து பேசியுள்ளனர். இம்மலைகளில் மனிதர்களுக்கு உணவாகப் பயன்படும் பழ வகைகள் ஏராளமாகக் கிடைத்தன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை மா,பலா,வாழை ஆகியன. மலைப் பகுதியில் திணை,சாமை போன்ற உணவுப் பொருட்களும் விளைவிக்கப் பெற்றன. இவை மட்டுமல்லாமல் வியாபாரப் பொருட்களாக மிளகு போன்ற வாசனைப் பொருள்களும் பயிர் செய்யப்பட்டன. தேக்கு, அகில் போன்ற மரங்கள் மத்திய தரைக் கடல் நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை மட்டுமல்லாமல் மனிதர்களுக்கு உணவாகப் பயன்படும் மிருகங்கள் இம்மலைப் பகுதியில் நிறைய இருந்தன. மான், முயல், காட்டுப் பன்றி, உடும்பு முதலியவன வாழ்ந்துள்ளன.

சோழர் காலத்தில் வேளாளர்கள் கிழக்கிலிருந்து குடிபெயர்ந்து வந்தபோது கொங்கு நாட்டில் வாழ்ந்த பழங்குடிகளான காவிலியர், பூவிலியர், குறும்பர், இருளர் போன்றோர் மலைப் பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்தனர். இது இன்றும் மேற்குத் தொடர்ச்சி மலையில் பழங்குடி மக்கள் கூறும் கதைகளால் உறுதிப் படுகின்றது.[20] பெரியார் மாவட்டத்தில் மலை வளமும், காட்டுச் செல்வங்களும் கொங்கு நாட்டிலேயே மிகுதியும் கிடைக்கின்றன. இம்மாவட்டத்தை ஒட்டியுள்ள மலைகளில் வாழும், ஊராளிகள், சோலை நாய்க்கர்கள்,குறும்பர்கள் போன்ற பழங்குடியினர் பண்டைய பண்பாட்டினைப் பாதுகாத்து வருகின்றனர்.[21]

சங்க காலம் தொட்டு கொங்கு நாட்டில் பாய்ந்து வரும் ஆறுகளாகக் குறிக்கப்படும் ஆறுகள் வானியாறு, ஆன்பொருநை, காஞ்சி, காவிரி போன்றவை. இவ்வாறுகளில் வற்றாத நீர்வளம் இருந்த காலம் ஒன்றிருந்தது. இது சங்கப் புலவர்களுடைய

பாடல்களால் வெளிப்படுகின்றது. சோழர்கள் காலம் வரை ஆறுகளின் நீர்வளத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்தியது மிகப் குறைந்த அளவிலாகும் அல்லது பயன்படுத்த வில்லையென்றே கூறலாம். சோழர் காலத்திலிருந்து ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, வாய்க்கால் வெட்டி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகின்றது. கொங்கு நாடு முழுவதும் கிடைக்கின்ற சோழர்காலக் கல்வெட்டுக்களில் ஆறுகளின் குறுக்கே அணை கட்டியது பற்றியும் குளம் தொட்டு வளம் பெருக்கியது பற்றியும் பெரிய கால்வாய்கள் வெட்டியது பற்றியும் சுட்டப்படுகின்றன.[22] சோழர் காலத்துக்கு முன் வரையில் ஆறுகள் வேளாண்மைக்குப் பயன்படாவிட்டாலும் பண்டையப் பெரு வழிகளை அமைப்பதற்கு முக்கிய பங்காற்றியுள்ளன.[23] மேலே கூறப்பட்ட ஆறுகளின் கரையோரங்களில் சங்க காலம் தொட்டுப் பெருவழிகள் வழக்கத்தில் இருந்துள்ளன. நொய்யல் நதிக்கரையின் ஓரத்தில் உள்ள வெள்ளலூர், சூலூர், கத்தாங்கண்ணி, திருப்பூர் ஆகிய ஊர்களில் ரோமானியக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[24] கல்வெட்டுத் துறைத் துணைப் பேராசிரியர் புலவர் செ. இராசு அவர்களாலும் காலஞ்சென்ற புலவர் சு. வேலுசாமி அவர்களாலும் கண்டு பிடிக்கப்பட்ட கொடுமணல் என்ற ஊர் நொய்யல் கரையிலேயே அமைந்துள்ளது.[25] இது பண்டைக்கால கொடுமணம் என்பர்.[26] அமராவதிக் கரையில் கலையமுத்தூர்,கரூர் ஆகிய ஊர்களில் உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன.[27] ஆற்றங்கரை ஓரத்திலேயே பெருவழிகள் வியாபாரத் தலங்கள் அமைந்ததற்கான காரணங்களை நம்மால் ஊகித்து அறிந்து கொள்ள இயலவில்லை. கொங்கு நாட்டு ஆறுகள் போக்குவரத்துக்கேற்ற தன்மையுடையன அல்ல. ஆனால், மனிதனுடைய அன்றாடத் தேவைக்குப் பயன்படும் நீரை அளிக்கும் தன்மையுடையன.

கொங்கு நாட்டின் நில அமைப்பு விரிவான வேளாண்மைக்கு உகந்ததாய் இல்லை. தற்காலத்தில் விஞ்ஞானத்தால் வந்த வாய்ப்பு

வசதிகளைக் கொண்டு கொங்குநாடு முழுவதும் உள்ள நிலம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. சென்ற நூற்றாண்டு வரை நிலம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற நூற்றாண்டு வரை வீணாகச்சென்ற ஆற்று நீர் பெரிய அளவில் அணை கட்டித் தேக்கப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆற்று நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் முறை சோழர் காலத்தில் வலிவடைந்த போதிலும் அதனுடைய பரந்து விரிந்த வளர்ச்சியினை நாயக்கர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் தெளிவாகக் காண முடிகிறது. இத்தகைய வசதிகள் இல்லாத பல்லவர் காலத்துக் கொங்கு நாட்டில் புன்செய் வேளாண்மையே மிகுந்திருந்தது. கொங்கு நாட்டு நிலவியல் அமைப்பு ஏற்ற இறக்கம் கொண்ட தன்மையுடையது. இந்த நிலவியல் அமைப்பு மருதநில வேளாண்மைக்கு உகந்ததாயில்லை. வானவெளியில் பறந்து செல்லுவோர் கொங்கு நாட்டைப் பார்க்கும்போது நில அமைப்பு குவியல் குவியலாகத் தோன்றும் காட்சியைக் காண்பர். இந்தக் குவியல் குவியலான அமைப்பே கொங்கு நாடு எனப் பெயர் வருவதற்குக் காரணமாயிருந்தது. இதுபோன்ற நில அமைப்பில் மழையால் விளையும் காட்டு வேளாண்மை தவிர நீரை ஓரிடத்தில் தேக்கி வைத்து வேளாண்மை செய்யும்முறை உகந்தது அல்ல. அதனால் வேளாண்மையில் நன்கு வளர்ச்சியடைந்த சோழர் காலம் ஏற்படும் வரை கொங்கு நாடு மிகுதியும் பயன்படாத பகுதியாகவே இருந்துள்ளது.

சங்க காலத்திற்கு முன் கொங்குநாட்டில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடுதல், கால்நடை வளர்த்தல் ஆகிய தொழில்களைச் செய்து வந்துள்ளனர். இப்பகுதியில் முதுவர், புலையர், இருளர், குறும்பர், வேட்டுவர், கொங்கர், மழவர் போன்ற பழங்குடிகள் வாழ்ந்துள்ளனர். இவர்களில் கொங்கர், குறும்பர் ஆகிய பழங்குடியினர் கால்நடையை வளர்க்கும் தொழிலைச் செய்து வந்துள்ளனர். அகநானூறு[28] பதிற்றுப்பத்து[29] ஆகிய சங்க நூல்களில்

கொங்கரைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் ஆகெழு கொங்கர்,கொங்கர் ஆபரந்தன்ன என்றும் கூறக் காண்கிறோம். கொங்கு நாட்டில் கால்நடை வளர்ப்புச் சிறப்புற்றிருந்த தன்மை இந்நாட்டு வரலாறு முழுவதும் காணக் கிடைக்கின்றது. கரூரில் கிடைத்த நடுகல் ஒரு வீரன் தன் ஆநிரையை மீட்டு மாண்ட வரலாற்றைக் கூறுகின்றது.[30] இந்நடுகல் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் நடப்பட்டது. வடார்க்காடு மாவட்டத்தில் செங்கம் பகுதியில் கொங்கு நாட்டிலிருந்து சென்ற கால்நடை வளர்ப்பாளர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[31] இந்நடுகல் கம்பவர்மனுடைய காலத்தைச் சேர்ந்தது. சோழர் காலத்திலும் அவர்களுக்குப் பின் வந்த விஜய நகர நாயக்கர் காலங்களிலும் ,வேட்டுவர்கள் நிரை கவர்தலும், வேளாளர்கள் மீட்டலும் ஆகிய வேட்டுவர், வேளாளர் சண்டை நடைபெற்றதைச் செவிவழியாகக் கேட்டறியலாம். அதனால் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரையில் கால்நடை வளர்ப்பு இப்பகுதியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த தன்மை புலப்படும். மேலும் கொங்கு நாட்டுப் பகுதியில் பட்டி, பாடி, தொட்டி,தொழு என்ற அடையோடு ஊர்ப்பெயர்கள் முடிவதைக் காணலாம். இப்பெயர்கள் கால்நடை வளர்ப்பாளர்கள் தங்கியிருந்த ஊர்களைச் சுட்டுவனவாகும்.

வேட்டுவர்கள் கொங்கு நாட்டில் பூர்வ காலந் தொட்டு வாழும் குடிகள். இவர்களை "அண்ணன்மார் சாமி கதை "போன்ற நாடோடி இலக்கியங்கள் இவர்களைக் கொங்கர் என்றே அழைப்பதைக் காணலாம். கொங்கு நாட்டில் வாழ்ந்த வேட்டுவர்களைப் பற்றிய குறிப்புக்கள் பதிற்றுப்பத்து முதல் பின்னாளில் வந்த ஓதாளர் குறவஞ்சி வரையிலான தமிழ் இலக்கியங்கள் மிகுதியும் வரக் காணலாம். அவ்விலக்கியங்களில் வேட்டுவர்கள் வேட்டைத் தொழிலுடன் வழியில் போகின்றவர்களைக் கொள்ளையடித்து வாழும் தொழிலையும் செய்து வந்தனர் என்பதும் தெரிகிறது. வேட்டுவர்கள் வாழ்ந்த ஊர் குறிச்சி என்ற அடைமொழியுடன் வரக் காணலாம். கொங்கு நாட்டில் இவ்வடை மொழியுடன் வருகின்ற ஊர்கள்

குறைவாகக் காணப்படுகின்றன. இதுபண்டை நாளில் வேட்டுவர்கள் இந்தப் பகுதியில் உரிமைக் குடிகளாக அருகி வாழ்ந்தார்கள் என்பதை வலியுறுத்துகின்றது. குறும்பர்கள் ஆடுகளை மேய்த்து வாழ்ந்த பழங்குடி மக்களாவர், முதுவர், புலையர், இருளர் போன்ற பழங்குடிகள் காட்டிலும் மலைப்பகுதியிலும் கிடைக்கின்ற காய்,கனி கிழங்குகளையும் உண்டு வாழ்ந்தனர்.

மேலே கூறப்பட்ட பழங்குடி மக்களின் தொழில்கள் ஓரிடத்தில் தங்கி நிலையாக வாழும் தன்மைக்கு உகந்ததாய் இல்லை. அவர்கள் கால்நடை வளர்ப்பில் மேய்ச்சலுக்காகச் சில மாதங்கள் தங்க நேர்ந்தாலும் மேய்ச்சல் நிலம் வேண்டி வேறோர் இடத்திற்குப் பெயர்ந்து செல்ல வேண்டிநேரும். அவர்கள் நீண்ட தூரங்களுக்கு மேய்ச்சல் வேண்டி ஓட்டிச் செல்லும் கால்நடைகள் தங்குவதற்காக ஓரிடத்திற்கு ஓட்டி வந்து தங்குவதுண்டு. அவ்வாறு தங்கிய இடங்களே 'அந்தியூர்' என்றும் 'பொழுதுப்பட்டி' என்றும் 'பெரியபோது' என்றும் பெயரிடப்பட்டன. கால்நடை வளர்ப்பாளர் வாழ்க்கை ஓரளவுக்குத் தங்கும் தன்மை உடையதாயினும் அவர்களுடைய பொதுவான வாழ்க்கை நாடோடித் தன்மை உடையதாயிருந்தது. அதனால் அந்தத் தன்மையை வலியுறுத்தும் ஊர்ப் பெயர்கள் சில ஏற்பட்டன.கால்நடை வளர்ப்பார் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். அதனால் கொங்கு நாட்டில் சோழர்கள் வரும்வரை ஊர்கள் ஏற்படுவதும் மக்கள் நிரந்தர வாழ்க்கை வாழ்வதும் அருகியே காணப்படுகிறது. சோழர் காலத்திக்கு முன்வரை இருந்த ஊர்கள் அனைத்தும் பெருவழிகளின் ஓரத்திலேயே இருந்தன. அவை சங்க காலம் தொட்டு தமிழகத்தில் கிழக்குக் கடற்கரைச் சென்றபோது தங்கிச் செல்லும் இடங்களாகவே இருந்தன. இவ்விடங்கள் பொதுவாக நிலைத்த தன்மையுடைய மக்கள் வாழாத ஊர்களாகவே இருந்தன. பூலாங்குறிச்சியில் கிடைத்த கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று கொங்குநாட்டில் இருந்த பிரமதேயங்களைப் பற்றிச் சுட்டுகிறது. ஆனால், அக்கல்வெட்டு எந்த ஊரையும் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் மத்திய கால இலக்கியங்களிலும் "கொங்கு"[32] என்றும்[33] "கொங்கர் நாடு" என்றும் இப்பகுதி குறிப்பிடப்படுகிறது. கல்வெட்டுக்கள் கொங்குநாடு என்று குறிக்கின்றன.[34] அண்மைக் காலக் கண்டுபிடிப்பான பூலாங் குறிச்சிக் கல்வெட்டு, " கொங்கு நாடு" என்று குறிக்கிறது.[35] பெயரைக் குறிப்பிடுவதில் இலக்கியங்களும், கல்வெட்டுகளும் வேறுபடுகின்றன என்பது வெளிப்படை இலக்கியங்கள், உயர்ந்தோர் வழியாகவும், கல்வெட்டுக்கள் பாமரர் வழியாகவும் வருவதால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம். எது எப்படியிருப்பினும் கொங்கு என்ற பெயர் வரலாற்றாசிரியர்களிடையே பலத்த வாக்குவாதங்களைக் கிளப்பி விட்டிருக்கின்றது.

ஆரோக்கியசாமி, கொங்கு என்ற பெயர் குரு என்பதிலிருந்து வந்ததென்பார்.[36] ஆதாரமாகக் கிட்டில் (Kittel) கூற்றை எடுத்துக் கூறுகிறார்.[37] பண்டைய தமிழ் இலக்கியங்கள் "கொங்கு" என்ற சொல்லிற்கு தேன், மணம், மது என்ற பொருளைக் குறிப்பிடுகின்றன.[38] வரலாற்றாசிரியர்கள் தேன் என்ற பொருளைக் கொண்டு அமைதி அடைகின்றனர். மத்திய காலத்தில் எழுதப்பட்ட "திருமந்திரம்" கொங்கு என்ற சொல்லிற்கு "காடு" என்று பொருள் கூறுகின்றது.[39] கொங்கு என்பதைக் 'கொன்டு எனப்படுத்து' "கொன்" என்பதற்கு வீணான நிலம் எனக் கூறுவர்.[40] கொங்கு என்பது குணக்கு என்ற சொல்லின் அடிப்படையில் வந்ததெனக்கூறி கிழக்கு நாடு எனப் பொருள் கொள்வர் சிலர்.[41] "கோங்கம்" என்ற மலரிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம். நீலகிரியில் வாழும் தோடர்கள் தங்களுடைய வயதினைக் குறிப்பிடும்பொழுது "கொங்கு" என்று கூறுகின்றனர். அவர்கள் மொழியில் 'கொங்கு' என்பது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரைக் குறிப்பதாகும்.[42] கொன்கானத்தைப் பற்றிப் பாடியுள்ள புலவர்கள் "கொல்பெருங்கானம்" என்று பெயர் கூறினர். அந்த வகையில் கொங்கு என்பதும் "கொல்கு" என்பதின் அடியாக வந்ததெனக்

கொள்ளலாம். இவ்வாறு 'கொள்வதில் தவறேதும் இல்லை' என்று சுந்தரர் தேவாரத்தில் வரும் திருமுருகன்பூண்டி பதிகப்பாடலால் உறுதிப்படும்.[43] அவர் கூற்றுப்படி வழிப் போக்கர்களைக் கொன்று கொள்ளை அடிக்கும் தொழிலையே மேற்கொண்டு வாழ்ந்த ஆறலைக் கள்வர் நிறைந்த நாடு கொங்கு நாடு.

அடிக்குறிப்புகள்

1. சோழர் காலக் கல்வெட்டுக்கள் சேரநாட்டை மலைமண்டலம் என்று அழைக்கின்றன. இப்பகுதி தற்போதைய மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கில் உள்ள கேரளம் ஆகும்.
2. A.R.E.P. 1910, No.205
3. The Cholas, Complete Reference
4. System in Thondai Mandalam, Page No.69
5. Ibid
6. கொங்கு மண்டலச் சதகம்
7. கொங்கு மண்டலச் சதகம், உரையாசியர் குறிப்பு
8. கொங்கு மண்டலச் சதகம், வாலசுந்தரக் கவிஞர்.
9. E.P. Ind. Vol. XVII No.16, Page 301.
10. சுந்தரர் தேவாரம்
11. Historical Sketches of Ancient Deccan, Vol.II,

Page 70-73

12. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி.2.

13. A.R.E. 582 of 1905

14. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி.1

15. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்

16. கல்வெட்டுத் துறை

17. Historical Sketches of Ancient Deccan, Vol.II P.70

18. Regional Perspectives

19. E.P. Ind,vol XVII,No.60

20. திரு.ச. வரதராசு (ஆலந்துறை) அவர்கள் இருளர்களிடையில் திரட்டிய நாடோடிக் கதைகள்

21. Caste and Tribes of South India, Vols. III, IV, & VII

22. Epigraphia indica Vol.XXX,P.107

23. Historical Sketches of Ancient Deccan, Page. 63

24. ஆய்வுத்தேன் - கொங்கு நாட்டுக் காசுகள், நடன காசிநாதன்

25. கொடுமணல் இலக்கியங்கள்

26. கொடுமணல் இலக்கியங்கள்

27. ஆய்வுத்தேன் கரூர் (சிறு நூல்)

28. அகநானூறு

29. பதிற்றுப்பத்து பாட்டு 22.

30. கரூர் (சிறு நூல்)

31. செங்கம் நடுகற்கள்

32. புறநானூறு, பா. 373.

33. பதிற்றுப்பத்து, பா. 22

34. செங்கம் நடுகற்கள்

35. The Hindu, May 1979

36. The Kongu Country, Page 1-3

37. The Kongu Country, Ibid,

38. Lexicon Vo.II

39. திருமந்திரம், 2 ஆம் மந்திரம்

40. ஆய்வுத் தேன்

41. சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்,பக்.12.

42. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்

43. மலை மக்கள் மாண்பு

கொங்கு நாட்டு வரலாற்றில் ஊர்ப்பெயர்கள்

கொங்கு நாட்டில் சங்க காலத்தில் காடு கெடுத்து ஊர் ஆக்கும் முயற்சி அருகியே காணப்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட ஊர்களும் ஆற்றங்கரை ஓரங்களில் காணப்பட்டன. சோழநாட்டில் இருந்ததைப் போன்ற பூகோள அமைப்பின்மையும் அம்முயற்சியின்மைக்குக் காரணமாகும். சங்க இலக்கியங்கள் கொங்கர் பற்றி நிறையக் குறிப்பிட்டிருப்பினும் கொங்கு நாட்டு ஊர்களை அதிகம் சுட்டிக் காட்டவில்லை. கொங்கு நாட்டை வெற்றிகண்டு ஆட்சி செய்த சேரர்களைப் பற்றிப் பேசுகின்ற பதிற்றுப்பத்தில் வரும் ஊர்கள் கொங்கு நாட்டூர்களாக இருக்கலாம். மேல்நாட்டு நில நூல் வல்லுநர்கள் குறிப்பிடும் சேரநாட்டூர்களில் சில கொங்கு நாட்டூர்களாக இருக்கலாம். கொங்குப் பகுதியில் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் சில ஊர்களைச் சுட்டுகின்றன. இவை தவிர வடநாட்டு நூல்கள் சிலவற்றில் கொங்கு நாட்டூர்கள் சுட்டப்படுகின்றன.

பதிற்றுப்பத்தில் வரும் ஒகந்தூர், உம்பர்க் காடு, வாகைப் பெருந்துறை, அகப்பா, கொடுமணம் போன்ற ஊர்கள் கொங்கு நாட்டூர்களென ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.[1]

இவற்றுள் கொடுமணல், ஒகந்தூர் ஆகியவை பெரியார் மாவட்டத்தில் உள்ளவை.[2] அகப்பாடல்களில் வரும் ஆமூர் என்ற ஊர் தற்காலத்தில் ஆணூர் ஆகும்.[3] ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த 'கழுவுள்' என்பவன் இப்பகுதியிலிருந்த வேளிர் தலைவன்.[4] நன்றா என்னும் குன்றும் கொங்கு நாட்டகத்தே உள்ளதாகக் கூறுவர்.[5] அகப்பாட்டில் வரும் குழூமூர் என்ற ஊர் கொழுமம் என்று அழைக்கப்படும் ஊராகும் என்பவர் சிலர். வையாவிகுகோ, பேகன் ஆண்ட பொதினி என்பது இன்றைய பழனி ஆகும்.[6]

பெரியார் மாவட்டத்தில் உள்ள பெருந்தலையூர், சங்கப் புலவர் சாத்தனார் வாழ்ந்த பெருந்தலை என்னும் ஊராகும்.[7] ஆய்வாளர்களிடையில் சேரர் தலைநகர் கரூர் என்பதில் கருத்து வேறுபாடு இருந்தாலும் இன்றைய திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூரைச் சங்க காலக் கருவூராகக் கொள்வதில் தவறேதும் இல்லை.[8] சங்க காலத்தவையாகக் கருத்தப்படும் பிராமிச் சாசனங்களில் சில ஊர்கள் சுட்டப்படுகின்றன.[9] கரூர் அருகில் உள்ள ஆர்நாட்டார் மலை பிராமி சாசனத்தில் ஆற்றூர். கருவூர், நல்பியூர் ஆகிய மூன்று ஊர்கள் சுட்டப்படுவதைப் பார்க்கலாம்.[10] இவற்றில் கரூரும் , ஆற்றூரும் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. நல்பியூர் என்ற ஊரைத் தற்காலத்தில் உள்ள நல்லியூர் என்று காலஞ்சென்ற புலவர் சு. வேலுச்சாமி அவர்கள் சொல்லியுள்ளார்.[11] டாலமி குறிப்பிட்டுள்ள சில ஊர்களை கே.எஸ். வைத்தியநாதன் அவர்கள் கொங்கு நாட்டூர்களாகக் காட்டியுள்ளார்.[12] 'கரூர்' தாலமி நில நூலில் சேரர்களுடைய தலைநகரமாகச் சுட்டப்படுகின்றது. இவை மட்டுமல்லாமல் கொங்குநாட்டில் உரோமானியக் காசுகள் கிடைக்கின்ற ஊர்களையும், கொங்கு நாட்டில் சங்க காலந்தொட்டு இருக்கின்ற ஊர்களாகக் கொள்வதில் தவறில்லை. இதுவரையில் கூறப்பட்ட சங்க காலத்து ஊர்கள் அனைத்தும் கொங்கு நாட்டில் உள்ளவைதானா என்பதில் கருத்து வேறுபாடுண்டு. எது எப்படியிருப்பினும் இவ்வூர்கள் இன்றைய தேசியப் பெருவழிகளில்

அமைந்திருப்பதால் அவற்றைச் சங்க கால ஊர்களாகக் கொள்வதில் தவறேதும் இருப்பதற்கில்லை.

சங்க காலத்தில் கொங்கு நாடு பெருவழிகள் நிறைந்த நாடாக விளங்கியது. அப்பெருவழிகள் ஆற்றலைக் கள்வர்கள் மிகுந்த காடுகளினூடே சென்றன. அதனால் வணிகர்கள் தாங்கள் கொண்டு செல்லும் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துத் தங்கிச் செல்வதற்கு சில ஊர்களை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வாறு தங்கிச் சென்ற ஊர்கள் வணிகர்களுக்கு எனப் பாதுகாப்பாக நிற்கும் வீரர்களும் அவர்களைச் சார்ந்திருக்கும் மக்களும் நிறைந்த ஊர்களாக விளங்கின. சங்க காலத்தில் கொங்கு நாட்டில் வாணிகம் தவிரப் பிற தொழில் நடந்ததற்கான சான்றுகள் குறைவு. இங்கு வணிகம் மற்ற பகுதிகளைக் காட்டிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அதனால் சங்க காலக் கொங்கு நாட்டு ஊர்களில் நிறைய காசுகள் கிடைக்கின்றன. இங்கு வேளாண்மை சிறப்புற்றதற்கான சான்றுகள் குறைவு. பழங்குடிகள் வேட்டையாடுவதிலும் வழிப்பறி செய்வதிலும், தங்கள் வாழ்நாளைக் கழித்துள்ளனர். இதுகொண்டு சங்க காலத்தைக் கொங்கு நாட்டூர்களில் வணிகமும், அதனைச் சார்ந்த துணைத் தொழில்களும் நடைபெற்றன என்று கொள்ளலாம்.

சங்க காலத்துக்குப்பின் கி.பி.4ஆம் நூற்றாண்டிலிருந்து வாணிகம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதனால் சங்க காலக் கொங்கு நாட்டுப் பெருவழிகளில் இருந்த ஊர்கள் சீரழிந்தன. கரூர் மட்டும் தன் பழைய புகழ் மங்காமல் காத்துக் கொண்டது. பழைய ஊர்கள் அழிந்தாலும் புதிய ஊர்கள் தோன்றுவதற்கான அறிகுறிகள் அருகியேக் காணப்பட்டன. தற்பொழுது கிடைக்கின்ற செப்பேடுகள் கல்வெட்டுக்கள் ஆகியவை சில ஊர்களைச் சுட்டுகின்றன. அவையும் பண்டைய பெருவழிகளில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சேலம் மாவட்டத்தில் கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அச்சாசனத்தில் கோகர்கிழார் என்பவர் குறிக்கப்படுகிறார்.[13] மிகப் பழமையான கொங்கு

நாட்டூர்களில் கோகரும் ஒன்று . ஆனால் அவ்வூர் இப்போது அழிவுற்றது.

கி.பி. 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கங்க மன்னன் துர்விந்தன் செப்பேடுகளில் ஆலந்தூர், அந்தேரி,பென்னாடகம் ஆகிய ஊர்களை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது.[14] ஆலத்தூர் பெரியார் மாவட்டம் புன்செய் புளியம்பட்டியிலிருந்து அவிநாசி செல்லும் வழியில் உள்ள ஊராகும். அது இப்போது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஊர். அந்தேரி என்பது தற்காலத்திய அந்தியூராகலாம். பென்னாடம், சேலம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். கங்கர் செப்பேடுகளில் வரும் கங்கப் பேரூர் என்ற ஊரை ஆரோக்கியசாமி அவர்கள் கோவைக்கருவில் உள்ள பேரூர் எனக் கருதுவர்.[15] பாண்டியச் செப்பேடுகள் கொங்குனாட்டூர்களைப்பற்றி இடைப்பிற வரலாறாகச் சுட்டுகின்றன. அவை வஞ்சி,அயிரூர், ஆயிரவேலி, கொங்கர், பேரூர், புகழையூர் போன்றவை.[16] இவற்றில் அயிரூர், ஆயிரவேலி, வஞ்சி ஆகிய ஊர்கள் காவிரிக்கரையில் உள்ள சேலம் மாவட்டத்து ஊர்களாகக் கருதப்படுகின்றன. புகழூர் தற்காலத்துக் காவிரிக்குத் தென்கரையில் உள்ள ஊர் கொங்கூர் தாராபுரம் அருகில் உள்ள கொங்கூர் ஆகும். சேலத்தில் கிடைத்த செப்பேடு ஒன்று கங்கமன்னன் ஸ்ரீபுருஷனால் வெளியிடப்பட்டது. அச்செப்பேடு கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.[17] அதில் புதுகண்ட விசயத்தைச் சேர்ந்த குமாரமங்கலம் என்ற ஊர் சுட்டப்படுகின்றது. இவ்வூர் திருச்செங்கோடு அருகே உள்ள குமாரமங்கலம் எனக் கருதுவர். கி.பி. 9,10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் சில ஊர்களைச் சுட்டுகின்றன.[18] ரவிகோதை கல்வெட்டுக்களில் பூந்துறை, அந்தியூர், நீர்மணி, ஈரோடு போன்ற ஊர்கள் சுட்டப்படுன்றன.

சோழர்களுக்கு முன் ஆட்சி செய்த பாண்டியர்கள், கங்கர் போன்ற அரச பரம்பரைகள் கொங்கு நாட்டை வென்றதாகக்

கூறிக்கொள்கின்றனர் என்பது உண்மையே. ஆனால், இம்மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் செப்பேடுகள் என்று கூறத்தக்கவை, கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. அவையும் ஒன்றிரண்டே. சில ஆய்வாளர்கள் கருதுவது போல் கங்கர்களும், பாண்டியர்களும் கொங்குநாட்டின் மீது செலுத்திய ஆதிக்கம் நிலையற்றதாகவே இருந்ததுபோலும்.[19] கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்ற பாண்டியர் செப்பேடுகள் பாண்டிய அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக கொங்குநாட்டின் மீது படையெடுத்தது பற்றிக் கூறுகின்றன.[20] இந்தப் படையெடுப்பு கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து நிகழ்ந்துள்ளது. உண்மையில் முதலில் வென்ற மன்னன் கொங்கு நாட்டில் பாண்டியர் ஆதிக்கத்தின் நிலை நிறுத்தியிப்பின் பின்வரும் மன்னர்கள் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்ததாகக் கூறிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுவரை ஆண்ட பாண்டியர்கள் அவ்வாறு கூறிக் கொள்கின்றனர். அரசியல் நிலையற்றதாய் இருந்தமையால் மக்கள் குடியேற்றம் நிகழ்வதற்கு வாய்ப்பில்லாமல் போனது. கொங்கு நாட்டின்மீது படையெடுத்து வென்ற மன்னர்கள் தங்கள் நாட்டுமக்கள் குடியேறுவற்கு ஊக்குவிக்கவில்லை.

கொங்குநாடு, சோழர்கள் வரும்வரை கொள்ளையடித்தலில் ஈடுபட்ட பழங்குடி மக்கள் நிறைந்த நாடாக விளங்கியது. சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாரிடம் பரிசு பெற்றுக்கொண்டு கொங்குநாட்டின் வழியாகச் சோழ நாட்டிற்குச் செல்லும்போது திருமுருகன் பூண்டி அருகில் வேட்டுவர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாக முருகன் பூண்டிப் பதிகம் பாடியுள்ளார்.[21] அவர் வேட்டுவர்களைப் பற்றிக் கூறும் செய்திகள் சங்கச் சான்றோர் கூறும் ஆற்றலைக் கள்வர்கள் பற்றிக் கூறும் செய்திகளுடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளன. அதனால் கொங்குநாட்டு வேட்டுவர் வாழ்க்கை சுந்தரர் காலம் வரை சங்க காலத்தில் இருந்ததைப் போலவே அமைந்திருந்தது. பாதுகாப்பற்ற வாழ்க்கை நிலவியதால்

பிறபகுதியிலிருந்து மக்கள் வந்து குடியேறுவதற்கு அஞ்சினர். சோழர் காலத்தில் நிலைமை வேறுவிதமாக அமைந்தது. தமிழகம் முழுவதையும் தங்கள் ஆட்சியில் கீழ் கொண்டுவந்த சோழர்கள் தாங்கள் வென்றடக்கிய பகுதிகளில் நிலையான படைகளை நிறுத்தி வந்தனர். கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு பகுதியில் இத்தகைய படை இருந்தது.[22] நடுநாட்டில் ராஜாதித்தன் தலைமையில் திருநாவலூர் அருகில் ஒரு படை இருந்தது. அதேபோல் கொங்கு நாட்டிலும் படைகள் பல இடங்களில் இருந்தன. அதற்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. வெள்ளலூர்,முருகன் பூண்டி, பேரூர், கடத்தூர் போன்ற இடங்களில் படை இருந்ததற்கான சான்றுகள் பல உண்டு.[23] இத்தகைய படை அமைப்புகளால் பழங்குடித் தொல்லைகள் குறைந்தன. இதனால் பிற பகுதிகளிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வந்து கொங்கு நாட்டில் குடியேறினர் . சோழர் ஆட்சிக் காலத்தில் குடியேற்றம் அதிகம் நடைபெற்றது. பின்வந்த பாண்டியர், ஓய்சாளர், விஜயநகர ஆட்சிக் காலத்தில் குடியேற்றங்கள் நிகழ்ந்தன.

சோழர் வருகைக்குமுன் கொங்குநாடு முழுவதும் இருந்த ஊர்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாகும். சோழர் கால வருகையின்போது சில ஊர்கள் பெருவழிகளின் ஓரத்தில் உண்டாக்கப்பட்டன. சோழர்களின் பிரதிநிதியாக இருந்து ஆட்சிசெய்த கோநாட்டரசர்கள் கல்வெட்டுக்கள் பெருவழிகளின் ஓரத்திலேயே கிடைக்கின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.[24] அதனால் சோழர் காலத் தொடக்கத்திலும் பெருவழிகள் ஓரத்திலேயே குடியேற்றங்கள் நிகழ்ந்தன என்று கொள்ளலாம். கோனாட்டார் ஆட்சி வேரூன்றி நிலைபெற்ற பின் குடியேற்றங்கள் பெருவழிக்கப்பாலும் ஆற்றங்கரை ஓரங்களிலும் நடந்தேறின. இவர்கள் காலத்தில் பல புதிய ஊர்கள் ஏற்படுத்தப்பட்டுக் குடியேற்றங்களும் நிகழ்ந்தன. கோனாட்டார் கல்வெட்டுக்களில் புத்தூர் என்ற பெயர் கொண்ட பல ஊர்கள் சுட்டப்படுவதைப் பார்க்கலாம்[25] கோவன்புத்தூர்,

கண்ணாடிப்புத்தூர், கவையன் புத்தூர் போன்ற ஊர்கள் எடுத்துக் காட்டாகும்.

பல்லவர் காலத்தில் தொடங்கி சோழர் காலம்வரை பிராமணர்கள் குடியிருப்பு ஏற்படுத்தும் போக்கு மிகுந்த காணப்படுகிறது. சமீப ஆண்டுகளில் பிரமதேயங்கள் உருவாவதற்கான காரணங்களை ஆய்வாளர்களை சுட்டிக் காட்டியுள்ளனர். வேளாண்மை வளமும், நீர்வளமும் மிகுந்த பகுதியில் பிரமதேயங்கள் நிறைய உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறுவர்.[26] கொங்கு நாடு இத்தகைய வாய்ப்புகளைப் பெறாததால் பிரமதேயம் உருவாவது அருகியே காணப்படுகிறது. பெரியார் மாவட்டத்தில் இரண்டு பிரமதேயங்கள் இருந்துள்ளன. ஒன்று பிரமியம், மற்றொன்று பவானிக்கருகில் உள்ள பிரமதேசம்.[27] இவ்விரண்டு ஊர்களும் ஆற்றங்கரையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர கோனாட்டார் ஆட்சியில் சதுர்வேதி மங்கலங்கள் உண்டாக்கப்பட்டன. இவையும் ஆற்றங்கரை ஓரங்களிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சோழர் காலத்துக் கொங்குநாட்டில் பல புதிய ஊர்கள் உருவாக்கப்பட்டிருப்பினும், சில நேரங்களில் அவை அழிந்து பட்டதையும் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன.[28] இவ்வழிவு எதனால் ஏற்பட்டது என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. பஞ்சம் காரணமாகவோ, பழங்குடியினர் கொள்ளையடித்தது காரணமாகவோ, பகையரசன் படையெடுப்புக் காரணமாகவோ இவ்வழிவு ஏற்பட்டிருக்கலாம். கல்வெட்டுக்கள், ஊர் பாழ்பாட்டுக் கிடந்தமையின் என்றும், ஊர் கெட்டுக் கிடந்தன என்றும் மட்டுமே சுட்டுகின்றன. இவ்வாறு பாழ்பட்ட ஊர்களை அரசன் தன் முயற்சி கொண்டு புதிய ஊர்களை உண்டாக்கிக் குடிமக்களைக் குடியேற்றுகிறான். பேரூர்.[29] சர்க்கார் பெரிய பாளையம்[30] விசயமங்கலம்[31] ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள்

இதுபோன்ற ஊர் அழிவுகளையும் அதற்குப்பின் மக்கள் குடியேற்றங்களையும் சுட்டுகின்றன.

கோனாட்டரசர்களுக்குப் பின் ஆட்சிசெய்த கொங்குப் பாண்டியர்கள் புதிய குடியேற்றங்கள் சிலவற்றை உருவாக்கினர். வெள்ளிரவளி[32] முருங்கைத்தொழுவு[33] பெருந்தலையூர்[34] பாண்டியர் காலத்தில் பெருவழி, ஆற்றங்கரை ஆகிய பகுதி மட்டுமல்லாமல் நாட்டின் உள் பகுதிகளிலும் காடு கெடுத்து நாடாக்கும் பணி மிகுதியாயிற்று.

சோழர் பாண்டியர் காலங்களில் குறிக்கப்படும் ஊர்ப் பெயர்கள் நல்லூர், புத்தூர், மங்கலம், தொழுவு, பாடி, பள்ளி, புரம், கோவில், பிரமதேயம் ஆகிய பின் ஒட்டுகளுடன் சுட்டப்படுகின்றன. இவற்றில் 'புரம்' என்று வருகின்ற ஊர்கள் பெரும்பாலும் பெருவழிகளில் அமைந்துள்ளன. மங்கலம், பிரமதேயம் ஆகிய அடைமொழிகளைக் கொண்ட ஊர்கள் ஆற்றங்கரை ஓரங்களில் உள்ளன. இவை மட்டுமல்லாமல் தாவளம்,[35] அடிக்கீழ்த்தளம்,[36] என வருகின்ற பெயர்கள் வாணிகர்கள் தங்கிச் செல்கின்ற பெருவழி ஊர்களாகும். பெரியார் மாவட்டத்தின் தாராபுரம், பிரமியம் ஆகியன அடிக்கீழ்த்தளங்களாக இருந்தன. பொன்னிவாடி அருகில் அடிக்கீழ்த்தளம் ஒன்று இருந்தது. சில ஊர்ப் பெயர்கள் வேளாளர், வேட்டுவர் கூட்டப் பெயரோடு அமைந்துள்ளன.[37] காடையூர், கீரனூர், கரையூர் ஆகிய ஊர்கள் உதாரணத்திற்குக் காட்டலாம்.[38]

ஓய்சாளர், விஜயநகர காலங்களில் கன்னட தெலுங்கு மொழி பேசுவோர் மிகுதியும் குடியேறினர். அதனால் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஊர்கள், பட்டணம்,[39] சாவடி,[40] பற்று,[41] பாளையம்,[42] கோட்டை,[43] ஆகியவற்றை அடைமொழியாகக் கொண்டு விளங்குகின்றன. இவற்றில் கொங்கு நாட்டு ஊர்ப்பெயர்களில் பாளையம் என்ற பெயர் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் உள்ளன.

விஜயநகர, நாயக்கர் காலங்களில் பாளையக் காரர்களுடைய ஆட்சி கொங்கு நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தது. பாளையக்காரர்கள் அரசனுக்குத் தேவைப்படும்பொழுது படை உதவி செய்து தங்களுக்கென ஒரு பகுதியை ஆட்சி செய்யப் பெற்றுக்கொண்டனர். அப்பகுதியில் அவர்கள் தங்கள் விருப்பம் போல வரி வசூல் செய்யும் உரிமை பெற்றிருந்தனர். இவ்வாறு ஏற்பட்டது பாளையக்காரர்களின் ஆட்சி, திப்புசுல்தான் காலத்தும் பின்னாளில் வந்த ஆங்கிலேயேர் காலத்தும் பாளையப்பட்டுகள் மேலும் பெருகின. அதனால் கொங்கு நாட்டில் பாளையங்கள் மிகுதியும் தோன்றின. ஆங்கிலேயர் ஆட்சி முடிந்த பின்னும் புதிதாக ஏற்பட்ட ஊர்களுக்கும் பாளையம் என்கிற பெயரே நிலைபெற்றது.

கொங்குநாட்டில் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை மக்கள் வாழ்க்கை நிலையற்றதாக இருந்தது. இப்பகுதி மழை மறைவுப் பிரதேசம் ஆகையால் பஞ்சத்தின் கடுமை மிகுதியாயிருந்தது. பஞ்சம் வரும் போதெல்லாம் மக்கள் ஓரிடமிருந்து மற்றோர் இடத்திற்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். அவ்வாறு குடிபெயர்ந்த மக்கள் தாங்கள் சென்று குடியேறிய இடத்தில் மனம் போனபோக்கில் வீடுகளை அமைத்துக்கொண்டனர். கொங்கு நாட்டில் உள்ள பல ஊர்கள் நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஊர்கள் அல்ல. ஊர்களில் உள்ள தெருக்கள் வளைந்தும், ஒன்றுக்கொன்று தொடர் பில்லாமலும் அமைந்திருக்கும். காரணம் குடிபெயர்ந்த வருவோர் தாங்கள் விரும்பிய இடத்தில் வீடு கட்டிக்கொள்வதேயாகும். தங்கள் பெயர்ப் பொருத்தத்திற்கேற்பத் தங்கள் வீடுகளின் வாயில்கள், குறித்த திசை நோக்கியிருத்தல் வேண்டும் என்ற சமூகப் பழக்க வழக்கமும் காரணமாகும். இந்த அமைப்பிற்கு வேறு ஒரு காரணத்தையும் கூறலாம். கொங்குநாட்டு மக்கள் தங்களுடைய நிலத்தின் அருகில் குடியிருக்கும் எண்ணமுடையவர்கள். அவ்வாறு ஒரு குடும்பத்தினர் வீடு கட்டிக் குடியேறியப் பின் அவர்கள் சந்ததியினரும் அப்பகுயிலேயே தங்க விரும்புகின்றனர். திரும்பவும் கட்டும் வீடுகள் ஒரு வரன்முறைக்குட்பட்டு அமைவதில்லை.

பெரியார் மாவட்டம் கொங்குநாட்டில் ஒரு பகுதி ; மையப்பகுதியும் கூட. அதனால் கொங்கு நாட்டிற்குரிய இயல்புகளுடன் தனக்கேயுரிய சில இயல்புகளையும் பெற்றுள்ள பகுதி. கொங்குநாட்டிலேயே மிகுந்த குடியேற்றம் நிகழ்ந்த பகுதி பெரியார் மாவட்டம்தான். கொங்குநாடு முழுவதும் சுமார் 1500 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 700 கல்வெட்டுக்கள் பெரியார் மாவட்டத்தில் கிடைத்துள்ளன.[44] இதிலிருந்து இங்குக் குடியேற்றம் மிகுந்திருந்த தன்மை புலப்படும். மேலும் பெரியார் மாவட்ட ஊர்ப் பெயர்களால் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு போக்குக் காணப்படுகிறது. இது நிலஇயல்பு, பருவமழையின் தன்மை, நீர்வளம் ஆகியவற்றினால் ஊர்ப் பெயர் ஆக்கம் வேறுபட்ட தன்மையுடையதாக உள்ளது. மேலும் சில பகுதிகளில் வணிகம் சிறப்புற்றுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் வணிகம் தொடர்பான பெயர்கள் வரக் காண்கிறோம்.

அடிக்குறிப்புகள்

1. அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு
2. அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு
3. தேனோலை
4. அகநானூறு
5. அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு
6. அகநானூறு
7. புறநானூறு, பா.151,164,165.
8. கரூர் (சிறு நூல்)

9. கல்வெட்டியல்-ப.58-59.

10. பாடி

11. அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கழகம்

12. Ancient Geography of Kongu Country
K.S.Vaithinathan P.77-78

13. தாரமங்கலம் (சிறுநூல்)

14. The Kongu Country, PP:140-143

15. The Kongu Country, P:142

16. Indian Antique, Vol.XXII P:57.

17. Epigraphia Indica, Vol.XXVII P:181

18. Epigraphia Indica, Vol.XXVII P:181

19. Epigraphia Indica, Vol.XXX PP:87-89

20. Indian Antique Vol.XXII P:57

21. சுந்தரர் தேவாரம், முருகன், பூண்டிப்பதிகம்

22. பதிவு அலுவலர் அலுவலகம் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி) தொல்பொருள் ஆய்வுத்துறை கோவை-9.

23. Peasant State and Society in Medieval South

India" Coramandal Brahmadeya Villages" Burton Stein.

24. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

25. Burton Stein, Cit.

26. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

27. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

28. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

29. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

30. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

31. புலவர் செ. இராசு திரட்டிய கல்வெட்டுக்கள்

32. புலவர் செ. இராசு திரட்டிய கல்வெட்டுக்கள்

33. புலவர் செ. இராசு திரட்டிய கல்வெட்டுக்கள்

34. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி) தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

35. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி) தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

36. பதிவு அலுவலர் அலுவலகக் கல்வெட்டுத் தொகுதி (கையெழுத்துப் பிரதி) தொல்பொருள் ஆய்வுத் துறை, கோவை-9.

37. நேரில் கேட்டது.

38. நேரில் கேட்டது.

39. நேரில்கேட்டது.

40. நேரில் கேட்டது.

41. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி

42. கல்வெட்டுத்துறை.

43. கல்வெட்டுத்துறை.

44. கல்வெட்டுத்துறை.

பழமைமிகு பெரியார் மாவட்டம்

கொங்குநாட்டில் 24 நாடுகள் உண்டு. இப்பிரிவுகள் நிருவாக வசதிக்காக ஏற்பட்டவகைகளாகும். பெரியார் மாவட்டத்தில் குறையும் நிறையுமாக ஒன்பது நாடுகள் அமைந்துள்ளன. பூந்துறை நாடு,அரைய நாடு, காங்கயநாடு, தென்கரை நாடு,பொங்கலூர் நாடு, காஞ்சிக்கூவல் நாடு, வடகரை நாடு, ஒடுவங்க நாடு, குறுப்புநாடு, என்பன. இவை பெரும்பாலும் வடகொங்கிலும், தென்கொங்கிலும் அமைந்துள்ளன.

பழங்காலச் சின்னங்கள்

வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இம்மாவட்டத்தில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான புதால் பழங்காலச் சின்னங்கள் இங்கு கிடைத்துள்ளன.[1] மேலும் கிடைக்கின்றன. வட்டமலை.பர்கூர் மலை ஆகிய இடங்களில் கற்கால ஆயுதங்கள் கிடைக்கின்றன. பல கல் ஆயுதங்களை அங்கு வாழும் மக்கள் இன்றும் வழிபாடு செய்து வருகின்றனர்.

பெருங்கற்காலச் சின்னங்கள் (Megalthic) ஈரோடு வட்டம்

எலவமலையிலும் பெருந்துறை வட்டம் நிச்சாம்பாளையத்திலும் கிடைக்கின்றன. பெருங்கற்காலச் சின்னங்களும் கல்வட்டங்களுமாக (Megalthic) கோபி வட்டம் எலத்தூர், இக்கரை, இருகாலூர், கரி தொட்டாம் பாளையம், மொட்டனூர், நம்பியூர் ஆகிய இடங்களிலும், சத்தியமங்கலம் வட்டம், புதுப்பீர்க்கடவு, தடப்பள்ளி,வாகம்பாளையம், வரபாளையம் ஆகிய இடங்களிலும் கிடைக்கின்றன.[2]

அதேபோல் புதிய கற்காலச் சின்னங்கள் அமராவதி ஆற்றங்கரையில் புஷ்பத்தூரில் கிடைக்கின்றன.[3] மேலும் பண்டைக்காலக் கல்வட்டங்கள் பல இடங்களில் கிடைக்கின்றன. தொல்பொருள் துறையினரால் சில இடங்களிலேயே கண்டறியப்பட்டுள்ளன. புதிய கற்காலச் சின்னங்கள் ஈரோடு வட்டம் விளக்கேத்தி, பாசூர், நாட்டுக்கல்ாளைய ஆகிய இடங்களிலும்[4] கதிரம்பட்டி, பாண்டியம் பாளையம், நிச்சாம்பாளையம், தோரணவாவி ஆகிய இடங்களில் மட்டும் கண்டறியப்பட்டன.[5] கோவி வட்டத்தில் மாராய பாளையம், நல்லூர் ஆகிய இடங்களிலும் சத்தியமங்கலம் வட்டத்தில் பனயம்பள்ளி ஆகிய இடங்களிலும் கண்டறியப்பட்டன.[6]

கருப்பு-சிவப்பு நிற மண்பாண்டங்கள் (Russet Coated, Painted Ware) பெருங்கற்கால மண்பாண்ட வகையாகும். இதன் உட்பாகம் கருப்பாகவும், விளிம்பு தவிர ஏனைய வெளிப்பக்கம் முழுவதும் சிவப்பு நிறமாகவும் காணப்படும் பாத்திரங்கள் காலத்தால் பழமையானவையாகும். இத்தகு மட்பாண்டங்கள் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இத்தகைய மட்பாண்டங்கள் ஈரோடு வட்டம், சர்க்கார் பெரியபாளையம், முகாசிப் பிடாரியூர், விளக்கேத்தி, கொடுமணல்,[7] ஆகிய இடங்களிலும், பெருந்துறை, திங்களூர், எலவமலை ஆகிய இடங்களிலும்[8] கண்டறியப்பட்டன. கோபி சத்தி வட்டங்களில் இக்கரை நெகமம், நத்தமேடு, உக்கரம் ஆகிய இடங்களிலும்.[9] கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் கண்டறியப்பட வேண்டியவை ஏராளமாக உள்ளன.

முதுமக்கள் தாழிகள்

பண்டைக் காலத்தே இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைப்பதுவே[10] வழக்கமாகும். அதற்கான தாழிகள் செய்யப் படுவதைப் பற்றி புறநானூறு[11] குறிப்பிடுகிறது. அத்தகைய தாழிகள் உள்ள இடங்கள் பல இம்மாவட்டத்தில் உள்ளன. அவை கருமாண்டி செல்லிபாளையம், நிச்சாம்பாளையம், கதிரம்பட்டி, பாண்டியம் பாளையம், தோரணவானி, வேட்டையன்கிணர், சின்னேகவுண்டன் வலசு ஆகிய ஊர்களின் அருகில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.[12]

கோபி வட்டத்தில் மாராயபாளையம்,நல்லூர், பணயம்பள்ளி ஆகிய இடங்களிலும் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.ஈரோடு கலைமகள் பள்ளி வளாகத்தில் முதுமக்கள் தாழி[13] ஒன்று கிடைத்துள்ளது. ஈரோடு - கரூர் வழியில் சோலார் அருகிலுள்ள காடுகளில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. ஈரோடு வட்டம் கதிரம்பட்டி,கனபுரம், பூந்துறைப் பக்கம் நாசுவங்காட்டு வலசு ஆகிய இடங்களிலும் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.

கல்வெட்டுக்கள்

பெரியார் மாவட்டத்தில் உள்ள சிவாலயங்களிலும்,பெருமாள் கோயில்களிலும் தனித் தூண்களிலும் தனிக் கற்களிலும் பாறைகளிலும் ஏராளமான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அரச்சலூர் மலையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு பிராமி[14] எழுத்துக்களால் வெட்டப்பட்டுள்ளன. வள்ளியரச்சலில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன.[15] வேறு இடங்களிலும் இம்மாதிரியான கல்வெட்டுகள் இருக்கக்கூடும். பாரியூர் கல்வெட்டு கொங்குநாட்டில் உள்ள நாட்டுப் பிரிவுகளை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.[16] வெள்ளோடு, அந்தியூர் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் மக்களுக்கு வழங்கிய உரிமைகளைக் குறிப்பிட்டுள்ளன.

சாத்தம்பூரில்[17] கொலை வழக்கு பற்றிய கல்வெட்டுள்ளது. வேம்பத்தியில்[18] அணைகட்டிய வரலாற்றுக் குறிப்புள்ள கல்வெட்டு உண்டு. இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள், வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இப்பகுதியின் பழமையையும், சிறப்பையும் புலப்படுத்தி கொங்கு நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தன.

நடுகற்கள்

பெயரும், புகழும் பெற்ற ஒருவர் இறந்தால் அவர் நினைவாகவும், வீர மரணம் எய்தியவர் நினைவாகவும், செயற்கரிய செய்து மரணம் அடைந்தோர்க்கும் நடுகல் நடுவது வழக்கம். இச்செய்திகளைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.[19] இத்தகைய நடுகற்கள் பெரியார் மாவட்டத்தில் உண்டு. இந்நடுற்கள் இம்மாவட்டத்தின் புகழையும் பெருமையையும் நிலை நாட்டற்குரிய நல்ல சான்றுகளாகும். இப்படிப்பட்ட நடுகற்களைப் பவானி, ஊராட்சிக் கோட்டை,பெரியபுலியூர், விளக்கேத்தி, துக்காச்சி, பழமங்கலம், பிடாரியூர், வாய்ப்பாடி, ஊத்துக்குளி, வெள்ளோடு, குலவிளக்கு[20] சிவகிரி, சேமூர், ஈங்கூர், ஆப்பக்கடல்[21] முதலிய இடங்களில் காணலாம். வடிவுள்ள மங்கலம், அலங்கியம், கொற்றலூர், கன்னிவாடி, ராக்கியாபாளையம் முதலிய இடங்களிலும் நடுகற்கள் உள்ளன.[22]

செப்பேடுகள்

பூந்துறையிலும், ஈரோட்டிலும் பிற்காலச் சேரமன்னர்கள் செப்பேடுகள் கிடைத்துள்ளன. அவை வட்டெழுத்தும் தமிழும கலந்தவை. இவை தவிர முத்தூர்ப் பட்டயம், காலிங்கராயன் கைப்பீது, சர்க்கரைக் கவுண்டன் வம்சாவளி, காரையூர்ச் செப்பேடு, வேட்டுவர், பூர்வபட்டயம், கொங்குப் புலவர் பட்டயம், அணைகட்டிண. பட்டயம், மொடவாண்டி பட்டயம், அரைய நாட்டுப் பட்டயம் போன்ற பல சமூகப்

பட்டயங்கள் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன.[23] இவை பண்டைய சமுதாயத்தின் வரலாற்றை ஆராயப் பெரிதும் பயன்படுவன.

ஈரோடு கலைமகள் கலைக் கூடத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட பட்டயங்கள் பல உள்ளன. மிகுந்த நல்லூர்ப் பட்டயம், இருப்புலிக்குமரன்பட்டயம், பழைய கோட்டைப் பட்டக்காரர் பட்டயம், காங்கேய நாட்டுப் பட்டயம், பனங்காடைப் பட்டயம், கொங்குப் புலவர் பட்டயம், குறுப்பு நாட்டுப் பட்டயம், காலிங்கராயன் அணை கட்டின பட்டயம், கணக்கன் கூட்டத்தார் பட்டயம், கத்தாங் கண்ணிப்பட்டயம் என்பவைகள் ஓலைச்சுவடிகளாக வைக்கப்பப்பட்டுள்ளன.[24]

சங்ககாலம்

பெரியார் மாவட்டப் பகுதிகள் சங்க கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி இம்மாவட்டத்தின் கிழக்கெல்லையாக ஓடுவதே பெருஞ் சிறப்புக்குரியதாகும். சந்தன மரங்களைக் கொண்டு வரும் வாசனையுடைய வாணி[25] என்ற பவானி ஆறு வடகரை நாட்டின் தெற்கெல்லையாக ஓடி வருகிறது. வேனிற்காலத்தில் கொங்குநாட்டு மக்கள் காஞ்சி நதி (நொய்யல்) ஓரத்தில் தங்குவார்களாம். தாராபுரம் அருகே ஓடிவரும் அமராவதி ஆன்பொருனை என்று புகழப்பட்டுள்ளது.

புன்றுரை, கொடுமுடி, ஈர்ந்தையூர்க் கிழான் ஆகிய சங்க கால வள்ளல்களைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கின்றன. நன்றா (ஊராட்சிக்கோட்டை), உதியம் (ஊதியூர்மலை) , சென்னிக்கோடு (சென்னிமலை), குறும்பொறை (குட்டிக்கரடு), நாகம் (அறச்சலூர் மலை) ஆகிய மலைகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. காகம், உலகடம், பொன்முழு, அந்தியூர், பெருந்தலையூர், சாத்தம்பூர், அஞ்சூர் இரும்பொறை,

பெருந்துறை, அரையம், கொடுமணல் ஆகிய ஊர்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

அரச மரபு

சங்ககாலத்து வேளிர்கள் இப்பகுதியை ஆட்சி புரிந்தனர். சங்ககாலத்தில் மூவேந்தரும் கொங்கு நாட்டுரிமைக்காகப் போராடியுள்ளனர். அவர்களுக்குப் பின்னர் இரட்டர்,கங்கர், பிற்காலச் சேரர், சோழர் பாண்டியர், ஓய்சாளர்,விசயநகரமன்னர்கள்,மதுரை நாயக்கர், மைசூர் உடையார் எனப் பலர் ஆட்சி புரிந்தமையை வரலாறு நன்குணர்த்தும். பின்னர் திப்பு சுல்தான், ஹைதர் ஆட்சியும் கம்பெனியார், ஆங்கில அரசும் ஆட்சி செய்தன.

குறுநில மன்னர்கள்

தாரமங்கலம் கெட்டி முதலியார், பூந்துறை வாரணவாசி,வெள்ளோடு காலிங்கராயன், வள்ளி எரிச்சில் தொண்டைமான் போன்ற குறுநில அரசர்கள் இப்பகுதியில் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களை அன்றையப் பழையகோட்டை வம்சாவளியினர், அகிலாண்டபுரம் பல்லவராய மரபினர், காடையூர் காங்கய மன்றாடியார் மரபினர், பூந்துறை நன்னாவுடையார் மரபினர், உலகபுரம் உலகில் முன்னோடி மரபினர், சங்கரண்டாம்பாளையம் வேணாவுடையார் மரபினர் ஆகியவர்களின் அரசும் மேலோங்கியிருந்தன. இம்மரபினர் இன்றும் பெரியார் மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

வெள்ளையரை எதிர்த்தும் வீரப் போரிட்ட தீரன் சின்னமலை, சென்னிமலையில் பிறந்து சுதந்தரத்திற்காகப் போராடித் திருப்பூரில் வீரமரணம் எய்திய திருப்பூர் குமரன், பகுத்தறிவுப் பாதை வகுத்த தந்தை பெரியார், கணிதமேதை ராமானுஜம் வாழ்ந்ததும் இப்பெரியார் மாவட்டமே.

தமிழ் வளர்ச்சி

சங்க புலவர் பலர் இம்மாவட்டத்தில் வாழ்ந்தனர். இப்புலவர்களை வேளிர்கள் ஆதரித்தனர். அதனால் நல்ல பல சங்கச் செய்யுட்கள் வளர்ந்தன என்பதை அறிவோம். இருப்பினும் சங்க காலத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உரியது. இடைக்காலத்தே கொங்கு நாடு அப்பெருமையை மேற்கொண்டதைப் பின் வரும் செய்திகளில் அறியலாம்.

விசயமங்கலத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்றுண்டு. பெருங்கதை பாடிய கொங்குவேளிர் விசயமங்கலத்தைச் சேர்ந்தவர். கொங்கு வேளிர் சிலை ஒன்று விசயமங்கலத்தில் உள்ள சமணக் கோயிலில் உள்ளது. பெருங்கதை பற்றிய கல்வெட்டும் இங்குள்ளது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய[26] அடியார்க்கு நல்லார் குறுப்பு நாட்டைச் சேர்ந்த நிரம்பை என்ற ஊரினர்.

நன்னூல் ஆசிரியர் பவனந்தி சீனாபுரம் எனும் ஊரைச் சேர்ந்தவர். சீவக சிந்தாமணி வச்சணந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் ஆகிய நூல்கள் விசயமங்கலத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறின. கொங்குமண்டலச் சதகம் பாடிய கார்மேகக் கவிஞர்.சாமிநாதப் புலவர் ஆகியோரும் இம்மாவட்டத்தினரே.

காடையூரிலும் தமிழ்ச் சங்கம் ஒன்றிருந்தது. காடையூர் பட்டக்காரர் பரம்பரையினர் பல புலவர்களுக்கு ஆதரவு நல்கித் தமிழ் வளர்த்தனர்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள புலவன்பாளையம்,புலவனூர் என்ற பெயரமைந்த ஊர்களில் இன்றும் ஏடுகள் வைத்துள்ள புலவர் பரம்பரையினர் வாழ்வதைக் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1. Indian Archaeology Review 1961 - 62
2. Ibid, 1962 - 63
3. Ibid, 1960 - 61
4. Ibid, 1960 - 61
5. Ibid, 1961 - 62
6. Ibid, 1961 - 62
7. Ibid, 1960 - 61
8. Ibid, 1961 - 62
9. Ibid, 1962 - 63
10. மணிமேகலை
11. புறநானூறு
12. Indian Archaeology Review 1961 - 62
13. கலைமகள் கலைக்கூடக் கையேடு 1961 - 62
14. Indian Archaeology Review 1961 - 62
15. தென்னியந்தியக் கோயிற் சாசனங்கள், சா.
16. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.

17. Indian Archaeology Review

18. கலைமகள் கலைக்கூடம்.

19. புறநானூறு, பா.264

20. புலவர் செ.இராசு, நடுகல் வழிபாடு, கட்டுரை

21. கலைமகள் கலைக்கூடக் கையேடு , பா.14

22. நூலாசிரியர் கண்டவை

23. கொடுமுடி சண்முகம் அச்சிட்டுள்ளார்

24. கலைமகள் கலைக்கூடக் கையேடு

25. பதிற்றுப்பத்து

26. புலவர் செ.இராசு கண்டது.

பொதுக் கூறுகள்

தமிழகம் முழுவதுமுள்ள நிலங்களை குறிஞ்சி ,முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாகக் கொண்டனர். வியன் தமிழ்நாடு ஐந்துள் கொங்கு நாடும் ஒன்று குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று வகை நிலங்களே கொங்கு நாட்டில் அடங்கும். மலையும்,மலைசார்ந்த குறிஞ்சிநிலப் பகுதி, இம்மாவட்டத்தின் வடக்கும், வடமேற்குப் பகுதியும், அதனையடுத்துக் காடும் காடு சார்ந்த பகுதியே மிகுதியாகும். ஆற்றங் கரைகளின் இருமருங்கும் ஏற்பட்ட விளை நிலங்களே மருதம் ஆயிற்று. பரந்து பட்ட மருதநிலப் பகுதியைக் காணமுடியாது. இந்நிலங்களை அடுத்து ஊர்கள் உண்டாயின. அவ்வூர்கள் அந்நிலங்களுக்கு ஏற்பப் பெயர்களைப் பெற்றது.

சாதாரணமாக ஊர்ப் பெயர்கள் இருகூறுகளைக் கொண்டன.ஒன்று பொதுக்கூறு, மற்றொன்று சிறப்புக் கூறு ஆகும். பொதுக் கூறுகளே (பாளையம், புதூர், வலசு) நின்று ஊர்ப் பெயர்களைச் சுட்டி நின்றன. காலப்போக்கில் சிறப்புக் கூறுகளும் உடன் சேர்ந்தது (வெங்கம்பூர், வேலாயுதம்பாளையம்) ஊர்ப் பெயர்ளைச் சுட்டிக் காட்டின.

குறிச்சி குறிஞ்சி நிலத்தூர், பாடி முல்லை நிலத்தூர், புரம், ஊர் மருத நிலத்தூர் எனப் பெயர் பெற்றன என்பதைத் தொல்காப்பியம், நம்பியகப் பொருள் போன்ற இலக்கண நூல்களால் அறியலாம். மேலே காட்டிய விகுதிகளுடன் கூடிய ஊர்கள் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றன. பெரியார் மாவட்டத்தில் காணப்பெறும், பொதுக்கூறுகளான பாளையம் 40 விழுக்காடும், வலசு,புதூர்,ஊர் ஆகிய பொதுக்கூறுகள் முறையே 10 விழுக்காடும் பெற்றுள்ளதைக் காணலாம். ஊர் என்ற பொதுக்கூறு கொண்ட ஊர்கள் 10 விழுக்காடு பெற்றுள்ளன. காலத்தால் பிந்திய சிறப்புக் கூறுகளைக்கொண்ட ஊர்கள் பாவனி வட்டத்தில் மிகுதியாக உள்ளன. பட்டி என்ற பொதுக்கூறு 4 விழுக்காடும், புரம் 3 விழுக்காடும் பெற்றுள்ளன. ஏனைய பொதுக்கூறுகள் அருகிலேயே உள்ளதைக் காணலாம். பெரியார் மாவட்டத்தில் காணப் பெறும் பொதுக் கூறுகள் 117 உள்ளன.

பொதுக் கூறுகளாக நின்று ஊர்ப் பெயர்களைச் சுட்டுவன

அக்கரை	கல்	சாவடி	பள்ளி	வதி
அக்ரஹாரம்	களஞ்சு (சி)	சிறை	பவனம்	வலசு
அணை	கஸ்பா	செலம்பை	பாடி	வலசு
அரங்கம்	காடு	சேரி	பாழி (வி)	வழி
அரை	காலனி	தண்டா	பாளையம்	வாடி
அளம்	காலை	தளம்	பாறை (ரை)	வாசல்
ஆச்சி	கால்வாய்	திட்டு	பிலி	வாச்சி
ஆரை	கிணறு	துறை	புத்து	வாரிதி
ஆர்	கிரி	தெரு	புத்தூர்	வாரி
ஆறு	கிழக்கு	தெற்கு	புதூர்	வாலி
இக்கரை	குடி	தொட்டி	புரம்	விலாஸ்
இடம்	குட்டை	தொழு	புரி	விளக்கு
இரச்சல்	குண்டல்	தோட்டம்	பூண்டி	வெளி

ஊத்து	குளம்	தோப்பு	பேட்டை
ஊர்	குளி (குழி)	நகர்	மங்கலம்
ஏரி	குறிச்சி	நத்தம்	மடை
எல்லை	கொம்பு	நாரி	மணல்
ஓடு	கொரை	நிலை	மண்டபம்
ஓடை	கோட்டை	பட்டணம்	மலை
கடவு	கோம்பை	பட்டி	முகை
கடை	கோயில்	பதி	முடி
கட்டி	கோவில்	பத்தி	மூலை
கட்டி	சங்கிலி	பந்தல்	மேடு
கண்ணி (கன்னி)	சமுத்திரம்	பரப்பு	மேற்கு
கயம்	சாந்து	பறை	ரோடு
கரை	சாலை	பள்ளம்	வடக்கு

தனிப்பெயராக நின்று ஊர்ப் பெயர்களைச் சுட்டுவன

ஈரோடு வட்டம்

22.188 காகம்
39.208 பரிவட்டம்
84.187 விளக்கேத்தி

சத்தியமங்கலம் வட்டம்

12.65 உக்கரம்
43.20 சிக்க நந்தி

காங்கயம் வட்டம்

15.30 நெழலி
20.22 பார்ப்பிணி
20.22 மாதவிலோகம்

பவானி வட்டம்

14.20 ஒல கடம்
43.37 பிரம்ம தேசம்
44.55 புன்னம்
33.31 முரளி

கோபி வட்டம்

58.11 எடக் காஞ்சி
45.47 எரப் பாலை
30.66 கோசனம்
46.12 தாழ்குனி
69.60 மொட்டனம்

தாராபுரம் வட்டம்

9.45 கெத்தல் ரேவ்
8.36 ருத்திராவதி
38.51 பெரமியம்

பெருந்துறை வட்டம்

64.95 மைலாடி

இடப்பெயர்கள்

பெரியார் மாவட்டத்தில் வடக்கு, வடமேற்கு எல்லையாக மலைகளே அமைந்துள்ளன. ஏனைய உட்பகுதிகளிலும் இடையிடையே பலமலைப் பகுதிகள் உள்ளன. இம்மலையின் அடியாகப் பல ஊர்கள் பெயர் பெற்றுள்ளதைக் காணலாம். பெருந்துறை வட்டத்தில் சென்னிமலை,பெரிய விலாமலை, சின்ன விலாமலை, அரசண்ணாமலை,கதித்தமலை, ஈரோடு வட்டத்தில் இலமலை, தண்டல்மலை காங்கயம் வட்டத்தில் சிவன் மலை, வட்டமலை; பவானி வட்டத்தில் ஊரிமலை,தேவர்மலை, வெள்ளிமலை; சத்தியமங்கலம் வட்டத்தில் சாமலை, தலைமலை ஆகியன மலையின் பெயரால் வழங்கப்படுகின்றன. ஊரின் அருகேயுள்ள மலைகள் அவ்வூர்ப் பெயரால் பெயர் பெற்றும் விளங்குகின்றன. ஈரோடு வட்டத்தில் எழுமாத்தூரை அடுத்துள்ளது எழுமாத்தூர் மலை அறச்சலூரை அடுத்துள்ளது அரச்சலூர் மலை, காங்கயம் வட்டத்தில் ஊதியூரையடுத்துள்ள மலை ஊதியூர் மலை ஆகும். பவானி வட்டத்தில் ஊராட்சிக்கோட்டை மலை. கோபி வட்டத்தில் ஒழவக்கோயில் மலை ஆகியன ஊர்ப் பெயரால் பெயர் பெற்ற மலைகளாகும்.

வானுற ஓங்கி வளர்ந்தது மலை; மலையிற் குறைந்தது குன்று. பெருந்துறை வட்டத்தில் குன்றையடுத்த குன்னத்தூர் (குன்றத்தூர்) தாராபுரம் வட்டத்தில் குன்றிடம் இன்று குண்டோடம் ஆகியுள்ளது. மலையில் மிகச்சிறிய பகுதிகள் பாறை, அறை, கல் என்ற சொற்களால் கூறப்படும். இப்பெயர்களால் ஈரோடு வட்டத்தில் ஆவுடையா பாறை, தாராபுரம் வட்டத்தில் போளரை (றை), சத்தியமங்கலம் வட்டத்தில் ஒட்டறை, திகினாறை (றை), காங்கயம் வட்டத்தில் சின்னக் குட்டறை (றை), கோபி வட்டத்தில் கெடாரை (றை), மதுப்பாறை; பவானி வட்டத்தில் கச்சிக் கல்லு ஆகியன.

முடி என்பது மலையில் உச்சியைக் குறிக்கும். கொடுமுடி (ஈரோடு வட்டம்), பொன்முடி (பெருந்துறை வட்டம்) என்ற இரு ஊர்கள் உள்ளன. இப்பெயர்கள் மலை உச்சியால் (முடி) பெயர் பெறவில்லை. இவை சங்க காலத்தில் வாழ்ந்த கொடுமுடி என்ற தலைவனையும் பொன்முடி என்ற பெரும் புலவனையும் குறிப்பிடுவன. மலையைக் குறிக்கும் வடசொல்லான கிரி இப்பெயரால் சிவகிரி பெயர் பெற்றது. சத்தியமங்கலம் வட்டத்தில் சின்னதுர்க்கம், மல்லியன் துர்க்கம், திம்பம், கொண்டகல்லா என்பவைகளும் மலைப் பகுதிகளேயாகும். மலைவாழ்மக்கள் குறவர் எனப்பட்டனர், மலை நிலம் குறிஞ்சி எனப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் குறவர். அவர்கள் வசித்த இடம் குறிச்சி எனப்பட்டது: பவானி வட்டத்தில் குறிஞ்சியாகவும் பெருந்துறை வட்டத்தில் குறிச்சியாகவும் நின்ற சிறப்புப் பெயர் மொடக்குறிச்சி (ஈரோடு வட்டம்) என்று ஊருக்குப் பெயரானபோது குறிச்சி என்ற சிறப்புப் பெயர் பொது கூறாகின்றது. காண்க.

மேடுகள்

ஏற்ற இறக்கமான இடங்களில் மேடான பகுதி மேடு எனப்படும். இறக்கமான பகுதிகளில் மழை நீரால் சூழப்படும். அப்பகுதி குடியிருப்புக்கேற்றதாகாது. இறக்கமான பகுதியை விளை நிலமாக்கிய

மக்கள் அருகிலே உள்ள மேடான பகுதிகளில் குடியிருப்பை வைத்துக் கொண்டனர். அவ்வூர்கள் மேட்டூர், மேட்டுப் பளையம், மேட்டு வலசு, மேட்டுப் புதூர் என வழங்கலாயின. எல்லா வட்டங்களிலும் மேடு என்ற இடப் பெயர் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

காடுகள்

பெரியார் மாவட்டம் காடும் காடு சார்ந்த முல்லை நிலப்பகுதியை மிகுதியாக உடையது. காடுகளை அழித்து ஊர் உண்டாக்கினர். அங்கிருந்த மரம்,செடி,கொடிகளால், ஊர் பெயர் பெற்றது. மாமரத்துப்பாளையம், சங்கம் வலசு, வஞ்சிபாளையம் என்பன காண்க. காடுகள் அழிக்கப்பட்டன. விளை நிலமாக்கப்பட்டு சோளம். எள் ஆகிய புன்செய்ப் பயிர்கள் விளைவித்த பின்னர் அங்கேயே குடியேற்றம் கண்டனர். அப்போது சோளம், எள், கொள் ஆகிய விளை பொருட்களே அவ்வூருக்குப் பெயராயின. நிலங்கள் பின்னர் அளக்கப்பட்டன. எல்லைகள் நிறுவப்பட்டன. ஊர்கள் அஞ்சு வள்ளக்காடு. எல்லைக்காடு என அளவைப் பெயரால் பெயர் பெற்றன. கோயிலுக்கு விடப்பட்ட நிலத்தில் ஊர் ஏற்பட்டபோது தேவஸ்தானக்கோடு எனப்பட்டது. திசைப்பெயரும் காட்டுக்காகி (மேக்கத்தி) குடியிருப்பை உணர்த்தி. உரிமை கருதி மன்னன் காடு, அரசன் காடு என்ற பெயரும் குடியிருப்புக்காயின. மலைப்பாங்கான சத்தி வட்டத்தில் ஒரு காடு மட்டுமே குடியிருப்பாகியுள்ளது (கொத்தக்காரன் காடு). பிறவட்டங்களில் "காடு" என்ற பொதுக்கூறு பெற்ற ஊர்ப்பெயர்கள் மிகுந்துள்ளன.

தோப்பு

மரஞ்செடி, கொடிகள் முறைப்படுத்தப்பட்டு வளர்க்கும் இடம் தோப்பு எனப்பட்டது. மாந்தோப்பு,செடடி தோப்பு ஆகியவை தோப்பு என்ற பெயரால் பெயர் பெற்றவை.

நீர்நிலைகள்

பெரியார் மாவட்டத்தில் மருதநிலம் பரந்த நிலப்பரப்பாக உள்ளது என்று பேச இயலாது.சுட்டிக் காட்டித்தான் தெரியவேண்டும். அமராவதி, நொய்யல், பவானி,சிற்றாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே சிறு சிறு அணைகளைக் கட்டி விளைநிலமாக (மருதம்) மாற்றினர். இவ்வாறுகளின் பெயரே ஊருக்கும் பெயரானதைச் சுட்டிக் காட்டலாம். நொய்யல், பவானி, சிற்றாறு (சித்தார்) ஆகிய ஊர்களும், மேல்வானி,கீழ்வானி, அத்தானி ஆகிய ஊர்கள் ஆற்றில் கரையில் அமைந்து திசைப் பெயரால் (கீழ்,மேல்) பெயர் பெற்றதறிக.

ஆறுகளில் இறங்கி நீராடுவதற்கேற்ற இடம் துறை எனப்படும். பெரியார் மாவட்டத்தில் பன்னிரண்டு ஊர்ப் பெயர்கள் துறை என்ற விகுதிப் பெயர் பெற்றனவாகும். தாராபுரம் அமராவதிக் கரையில் (வேலன் துறை) மூன்று துறைகளும், பவானி வட்டத்தில் இரண்டு துறைகளும் (ஓடத்துறை), சத்தியமங்கலம் வட்டத்தில் ஐந்து துறைகளும் (முடுக்கன் துறை) உள்ளன.

குளம், கயம், குட்டை, மடை,ஓடை, பாழி, ஊத்து, கோம்பை ஆகிய நீர் நிலைகளின் பெயரால் பல ஊர்கள் பெயர் பெற்றுள்ளன. மலைகளிலிருந்து மழைக்காலத்தில் ஓடிவரும் நீரைத் தேங்கிக் குளம் அமைத்தனர். பாசன வசதி பெருகிய போது மக்கள் குடியேற்றமும் நடைபெற்றது. ,அவ்விடங்களில் குளத்துப்பாளையம், தாழக்குளம், குளப்பலூர் (கொளப்பலூர்), குளத்தாம் வலசு (கொளத்தான்வலசு) என்பன. காங்கயத்தில் குளப் பெயரில் ஊர்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்நிலை ஆழத்தின் பெயர் கயம், குண்டு எனப்படும். அமராவதி நதியும், சண்முகா நதியும் கூடும் இடத்தின் நீர்,நிலை ஆழம் அறிந்த மக்கள் அங்கு ஏற்பட்ட ஊரை அலங்கியம் (அலங்கயம்) எனக் கூறினர். காங்கயம், கலிங்கயம் ஆகிய ஊர்களும் உண்டு.

ஆறு, வாய்க்கால் ஆகியவற்றின் கரைகளில் கரை என்ற விகுதியுடன் கூடிய 18 ஊர்கள் உள்ளன. அவற்றில் 12 ஊர்கள் கோபி வட்டத்தில் உள்ளன. பவானி ஆற்றின் குறுக்கே பல அணைகள் கட்டி (கொடிவேரி) பவானி ஆற்று நீரைப் பாசனத்திற்குத் திருப்பினர். அதனால் கரைகள் பல ஏற்பட்டன. அத்தகைய கரைகளாவன: அக்ரஹாரக் கரை, கடக்கரை, சோழ மாதேவி கரை, பழைய பாரியூர்க்கரை என்பன சில.

குமிளாங்குட்டை, மேட்டுக் கொளத்தூர் (ஈரோடு வட்டம்), ஊத்துக்குழி, மல்லாங்குழி (பெருந்துறை வட்டம்), சின்னப்புலவாவி (தாராபுரம் வட்டம்), கஞ்சாமடை (பெருந்துறை வட்டம்), படவல் கால்வாய், பச்சப்பாழி, ஆப்பக்கடல் (பவானி வட்டம்) ஆகியவை நீர் நிலையடியாகப் பெயர் பெற்றன. ஈரோடை, சீத்தோடை, பேரோடை, வெள்ளோடை ஆகியன ஓடையால் பெயர் பெற்றவை. மணற்கேணியானது தோண்டத் தோண்ட நீர் ஊறும். கொங்கு நாட்டில் மணற்கேணி தோண்டுவதற்கேற்ற இடங்கள் இல்லை. ஆழமான கிணறுகளைத் தோண்டினர். கிணறு தோண்டிய இடத்தில் ஊர் ஏற்பட்டது. எடுத்துக்காட்டுக: சிறு கிணறு (தாராபுரம் வட்டம்), வெட்டயங் கிணறு (பெருந்துறை வட்டம்) ஆகியவை. அக்கிணற்றுப் பாசனம் நிலம் தோட்டம் எனப்பட்டது. இப்பாசன முறையடியாக காங்கயத்தில் மட்டும் 24 ஊர்கள் தோட்டம் என்ற பொதுக்கூறு பெற்றுள்ளன. அவை மேக்கால் தோட்டம், சின்னாத்தா தோட்டம், அய்யன் தோட்டம் ஆகியவை ஆகும். அறச்செயல் முறையாகத் தண்ணீர் பந்தல் ஏற்படுத்தப்பட்டது. அப்பெயர்களும் ஊருக்குப் பொதுக் கூறாகத் தொடங்கின. சமுத்திரம் என்ற வடசொல் நீர்நிலையைக் குறிக்கும். கெட்டி சமுத்திரம், ரங்கசமுத்திரம், சென்ன சமுத்திரம் ஆகியன அத்தகையன. ஆற்றின் இடைக்குறை "ரங்கம்" என்ற வடசொல்லால் வழங்கப்பெறும். மயில்ரங்கம் என்பது சான்றாகும். பெரியார் மாவட்டத்தில் நான்கு சதவீத ஊர்கள் நீர்நிலைப் பெயர்களைக் கொண்டுள்ளன. பவானி வட்டத்தில் குளப்பெயர்

மிகுந்தும், காங்கயம் வட்டத்தில் தோட்டப் பெயர் மிகுந்தும், கோபி வட்டத்தில் கரைப் பெயர் மிகுந்தும் காணப்படுகின்றன.

ஊர்

நால்வகை நிலங்களிலும் மருத நிலமே மக்கள் வாழ்க்கைக்கேற்ற வசதிகளைப் பெற்றது. சங்க இலக்கியத்தில் "ஊரன்"[1] என்ற சொல் மருதநிலத் தலைவனைக் குறிக்கும். அவ்வூர்த் தலைவன் ஊரான் எனப்பட்டான். ஐம்பது கிராமங்களின் தலைமைக் கிராமத்தைக் குறிக்கும் சொல்லே "ஊர்"[2] ஆகும். பின்னர் இடு குறிப்புப்பெயராய்ச் சிற்றூர்களுக்கும் பெயராகியது.

பெரியார் மாவட்டத்தில் 10 விழுக்காடு ஊர்கள் "ஊர்" எனும் விகுதி பெற்று உள்ளன. அவற்றுள் "அந்தியூர், பாரியூர், பெருந்தலையூர், ஈங்கூர், அஞ்சூர், சாத்தம்பூர் ஆகியன சங்க காலத்தவையாகும். "ஊர்" என்ற விகுதிகொண்ட ஊர்ப் பெயர்கள் பழமையுடையதாயினும் பவானி வட்டத்தில் உள்ள ஊர்கள் பலவும் சமீபகாலத்தில் ஏற்பட்டவை ஆகும்.

சோழ அரசர் தங்கள் ஆட்சிக் காலத்தில் உண்டாக்கிய ஊர்கள் நல்லூர் எனப்பட்டன. வளவன் நல்லூர், வானவராய நல்லூர் என்பன. பிற்காலத்தே ஏற்பட்ட ஊர்கள் தனிப் பெயர்களையும், சாதிப் பெயர்களையும், (நாயக்கர், கவுண்டர், உப்பிலியர், சானார், பறையர்) பெற்று வழங்கத் தொடங்கின. கீரனூர் (சங்க காலப் புலவன் கீரண்கூட்டம், கொங்குவேளாளர் குலப்பெயர்) குப்பிச்சிக் கவுண்டனூர் (காடை குல வேளாள வீரன்), சென்ன நாயக்கனூர் என்ற தலைமை சான்றவர் பெயர்களும் இதனுள் சிறப்புப் பெயராக அமைந்தன.

குடி

'குடி' என்னும் பொதுக்கூறு மக்கள் தொடர்ந்து குடியிருப்பதை உணர்த்தும். உறவு முறையுடைய பல குடும்பத்தார்

வசிக்கும் இடம் 'குடி' எனப்படும். பெரியார் மாவட்டத்தில் ஒரு சாதியினர் வாழும் இடமே "குடி" என வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர் வாழும் இடங்கள் "கள்ளி மேட்டுச் சக்கிலியர் குடியிருப்பு, காடையூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு, சாம்பாவலசு வள்ளுவர் குடியிருப்பு" என்று பெயர் பெற்றுள்ளன.

தெரு

"தெரு" என்ற பொதுக்கூறு பெற்ற ஊர்களும் தாழ்த்தப்பட்வர் வாழும் இடமாக (ராசாம்பாளையம் சக்கிலியர் தெரு) உள்ளன. விடுதலைக்குப் பின்னர் தாழ்த்தப்பட்டவர்கள் வாழுமிடம் காலனி எனப்பட்டது. காந்தியடிகள் "ஹரிஜன்" என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பிட்டார். அதனால் தாழ்த்தப் பட்டவர்கள் வாழுமிடம் "ஹரிஜன் காலனி " எனப்பெயர் பெற்றது. தாழ்த்தப்பட்டவர்கள், ஊரை அடுத்துள்ள இடங்களில் வசித்துள்ளனர், தீண்டாமை எண்ணம் மிகுதியானபோது அவர்கள் ஊரைவிட்டு பிற பகுதிகளுக்குக் குடியேறியுள்ளனர் எனலாம். அதனால் கள்ளிமேட்டுச் சக்கிலியர் குடியிருப்பு,புளியங்காடு ஆதிதிராவிடர் குடியிருப்பு என்று பெயர் பெற்றன. குடி,குடியிருப்பு,காலனி, சேரி,தெரு என்ற துணைச் சொல்லால் முடியும் ஊர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் வாழுமிடமாகவே உள்ளன.

கோட்டை, பேட்டை

பழைய நகரங்கள் கோட்டையும்,பேட்டையும் கொண்டவை.[3] பகையரசன் படையெடுக்காது பாதுகாக்கக் கோட்டைகள் பயன்பட்டன. பேட்டை மக்கள் குடியிருப்புக்குரியது. ஊரின் புறநகர்ப் பகுதியும் பேட்டை ஆகும். சந்தை கூடுமிடமும் பேட்டை எனப்படும். தொழிலால் சிறப்புறும் ஊர்களும் பேட்டை எனப்படும். பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம், அந்தியூர்,பவானி, பெருந்துறை, தாராபுரம், கன்னிவாடி, தனாய்க்கன் கோட்டை ஆகிய ஊர்களில் கோட்டைகள்

இருந்தன. புக்கானன் தாம் கண்ட ஊர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது “திறந்த வெளிக் கிராமம் என்றும், பாதுகாக்கப்பட்ட கிராமம்” என்றும் குறிப்பிடுகிறார். “பாதுகாக்கப்பட்ட கிராமம்” என்றதால் கோட்டையுடையதாகும். ஈரோட்டில் நகரின் முக்கிய பகுதி கோட்டை எனப்படும். இங்குள்ள கோட்டை 1878 ஆம் ஆண்டு பஞ்ச நிவாரணப் பணிக்காக இடிக்கப்பட்டது. கோட்டை அழிந்த இடத்தில் ஏற்பட்ட ஊர்கள் கோட்டை மேடு,கோட்டை மேட்டுப் புதூர் என்று வழங்கப்படுகிறது. பெரியார் மாவட்டத்தில் உள்ள பேட்டை புறநகர்ப் பகுதியாகவும் இல்லை. தொழிற்பேட்டையாகவும் இல்லை, மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு இடுகுறியாகவே பேட்டை வழங்கப்படுகிறது.

கோயில்

தமிழகத்தில் இறைவனுக்குரிய கோயில்கள் எண்ணிறந்தன. இக்கோயில்களை அடுத்து ஊர்கள் ஏற்பட்டன. கோயிலின் பெயரே ஊருக்கும் பெயராகியது. அவை கண்ணன் கோயில்,வரதராஜப் பெருமாள்கோயில், செல்லாண்டி அம்மன்கோயில்,வஞ்சியம்மன் கோயில் என்பவையாகும். இக்கோயில்கள் கொங்கு வேளாளர்க் காணியாளர்களுக்குக் குல தெய்வமாகும். குப்பண்ணன் கோயில், கருப்பண்ணன் கோயில் என்பன. வீரவழிபாட்டு முறையில் எழுந்த ஊர்களாகும்.

சமுத்திரம்

அறஞ்செய விரும்பும் அரசரும், செல்வரும் சத்திரம் அமைத்தனர். அவை வழிச்செல்வோர் தங்கிச் செல்லும் இடமாகவும் அரசர்,அரசு அதிகாரிகள் தங்கும் இடமாகவும் இருந்தன. அவ்விடத்தே ஏற்பட்ட ஊர்கள் சத்திரம் என்று பெயர் பெற்றன. தாராபுரம் வட்டத்தில் பட்டக்காரர் சத்திரம் உள்ளது. வீரப்பநாய்க்கன் ஏற்படுத்திய வீரப்பன் சத்திரம் ஈரோட்டை அடுத்துள்ளது.

சாவடி

அறச்செயலுக்காக நிறுவப்பட்ட இடம் சாவடி எனப்பட்டது. இதை நிர்வாகம் செய்தவர்கள் ஆண்டி எனப்பட்டனர். காங்கயம் வட்டத்தில் கொமராண்டிச்சாவடி உள்ளது. தண்ணீர்ப் பந்தல் வைப்பதும். தருமகாரியம் ஆகும். சாவடி,தண்ணீர்பந்தல் ஆகிய துணைச் சொற்களுடன் சில ஊர்கள் பெரியார் மாவட்டத்தில் உண்டு.

சாளை

நடைபாதையைக் குறிக்கும் சொல் சாலை எனப்படும். பனை ஓலையால் கூரைவேய்ந்த வீடுகள் ‘சாளை’ எனப்படும். இத்தகைய சாளைகள் ஊருக்குப் பெயராயின. கொமரன் சாளை, பொடங்கன் சாளை என்பன பெரியார் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களுக்குரிய தோட்டங்களில் சாளை போட்டுக் கொள்வதுண்டு.

தொழு

ஆடு,மாடுகள் அடைக்கப்படும் இடம் தொழு அல்லது தொழுவம் எனப்படும். கால்நடைகள் பிறர் விளை நிலங்களில் மேய்ந்துவிட்டால் அக்கால் நடைகளை அரசுக்குச் சொந்தமான தொழுவத்தில் அடைக்கவேண்டும். தொழுவத்தில் அடைக்கப்படும் ஆடு,மாடுகளுக்கு தண்டம் விதிக்கப்படும். கால்நடைச் சொந்தக்காரர் அத்தண்டம் கட்டிய பின்னர் தொழுவத்தில் இருந்து கால்நடைகளை ஓட்டிச்செல்ல வேண்டும். சமீபகாலம் வரை இப்பழக்கம் கிராம நிருவாகத்தில் நடைமுறையில் இருந்தது; அத்தொழுவின் பெயரால் முருங்கைத் தொழு, ஆறு தொழு ஆகிய ஊர்கள் உள்ளன.

நகரம்

நகரம் என்ற சொல் மக்கள் வாழுமிடத்தைக் குறிக்கும். குறிப்பாக வணிகர் வாழும் இடம் நகரம் எனப்படும். நகரத்தார் என்ற

வழங்குச் சொல் வணிகரைக் குறிப்பிடுவதாகும். பெரியார் மாவட்டத்தில் கிரேநகர், பிரப்நகர் (பெருந்துறை வட்டம்) என்ற ஊர்கள் உண்டு. இவ்விரண்டு ஊர்களும் கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்தவர்களின் பெயரால் ஏற்பட்டனவாகும். சத்தியமங்கலம் வட்டத்தில் அரசியல் தலைவர் நேருவின் பெயராலும், ராயர் காலத்தில் பீமராயர் பெயராலும் நகர்கள் ஏற்பட்டன. அமைப்பு நகர்கள் ஏற்பட்டன. இக்காலத்து அரசியல் தலைவர்களின் பெயரால் பெரியார் நகர், அண்ணாநகர், காமராஜ் நகர், இன்னபிற பல நகரங்கள் பெரியார் மாவட்டத்தில் உண்டு.

நத்தம்

ஊர்ப் பொதுவிடம் நத்தம் எனப்படும். அவ்விடத்தில் மக்கள் குடியேறிய போது இவ்விடப் பெயர் ஊருக்குப் பெயராய் அமைந்தது. இவ்விடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களே குடியேறினர் (மீனாட்சிபுரம், சக்கிலியர் நத்தம்).

நிருவாகப் பிரிவுகள்

நாயக்கர் கால ஆட்சியில் பாளையங்கள் ஏற்பட்டன. அப்பாளையக்காரர்கள் வரி வசூல் செய்தனர். முசுலிம்களின் ஆட்சிக் காலத்தில் சர்க்கார் என்ற சொல் புகுத்தப்பட்டது (சர்க்கார் பெரிய பாளையம்-பெருந்துறை வட்டம்). ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் கிராம நிருவாக வசதிக்காகச் சில அடைமொழிகளைக் கையாண்டனர். அதனால் ஒரே ஊர் இரண்டு பெயர் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. நன்செய்,புன்செய் என்ற அடைமொழியால் லக்காபுரம் என்ற ஊர் நன்செய் லக்காபுரம் (ஊர்இல்லை), புன்செய் லக்காபுரம் எனப்பட்டது. அட்டவணை,முகாசி (அட்டவணைப் பிடாரியூர்,முகாசிப் பிடாரியூர்), அவல்,துய்யம் (பூந்துறை), சின்ன பெரிய (விலாமலை), தென்முகம், வடமுகம், (வெள்ளோடு), புது,பழைய (கலையனூர்) என்ற

அடைமொழியுடன் ஊர்கள் பெயர் பெற்றன. புதுப்பாளையம் என்ற ஊர் இருதாய்க் கிராமங்கள் ஆகிய போது எண்களிட்டுப் பெயர் வைத்தனர் (31 புதுப்பாளையம், 170 புதுப்பாளையம்), தாய்க் கிராமங்களைக் கஸ்பா என்று பெயரிட்டுள்ளனர் (கெத்தல்ரேவ் கஸ்பா, பிரமியம் கஸ்பா).

பட்டணம்

கடற்கரையில் உண்டாகும் நகரங்கள் 'பட்டணம்' எனப்படும். உள்நாட்டு ஊர்கள் பட்டணம் ஆகும். தாராபுரம் வட்டத்தில் பட்டணம் உண்டு. நாயக்க மன்னர் பெயரால் தேவராயன் பட்டணம்,நாயக்க மன்னரின் தளவாயின் பெயரால் தளவாய் பட்டணம், ராமபட்டணம் என்று மூன்று மட்டுமே பெரியார் மாவட்டத்தில் உண்டு.

பட்டி

"பட்டி" முல்லை நிலத்துள்ள ஊர்களைக் குறிக்கும். சிற்றூர்களும் பட்டி எனப்படும். தமிழ்நாடு முழுமையும் பட்டி உண்டு. பாண்டிய நாட்டில் பட்டி மிகுதியாக உள்ளன.[4] எனவே கொங்குநாட்டில் ஊரெல்லாம் "பட்டி தொட்டி"[5] என்ற கூற்றுத் தவறாது என்பதை அறியலாம். பெரியார் மாவட்டத்தில் தாராபுரம்,காங்கயம் ஆகிய இரு வட்டங்களிலும் பட்டி விகுதி (பொதுக்கூறு) பெற்ற ஊர்கள் 126 உள்ளன. பிற வட்டங்களில் எல்லாமாகச் சேர்ந்து 54 மட்டுமே உள்ளன. தாராபுரம், காங்கயம் ஆகிய இரு வட்டமும் பாண்டிய நாட்டின் எல்லையில் உள்ளன. பாண்டிய நாட்டில் வாழ்ந்த மக்கள் இப்பகுதியில் குடியேறியுள்ளனர் என்பதையே இது காட்டுகிறது. வேளாளர்கள் திருமணமான பின் ஏழுமாதங்களுக்குப் பிறகு எழுதிங்கள் சீர் என்ற ஒரு சடங்கு நடைபெறும். தற்காலத்தில் விருப்பமான நேரத்தில் அச்சீர் நடைபெறும். அதற்குச் சான்றாக எழுதிங்கள் பட்டி சடங்குப் பெயராகி வந்தது. வேட்டுவரில் பூலுவன் என்ற பிரிவு உண்டு. அக்குலப் பிரிவு ஊருக்காகி பூலுவன் பட்டி ஏற்பட்டது. சாதாரணமாகத் தனிப்

பெயரோடுதான் மிகுதியான பட்டி காணப்படுகிறது. சாணார், நாயக்கர், வடுகர் ஆகிய சாதிப் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. வடுகர், நாய்க்கர் ஆகிய சாதியினர் கன்னடம், தெலுங்கு பேசும் மக்களாவர். கள்ளிச் செடியின் பெயரால் பட்டி ஏற்பட்டுள்ளது (கள்ளிப்பட்டி). மாவட்டம் முழுவதும் நாய்க்கர் பெயரால் பட்டி மிகுதியாக உள்ளது. இது அக்காலத்தில் நடைபெற்ற நாயக்கர் ஆட்சியைச் சிறப்பித்துக் காட்டும் சின்னமாகவே உள்ளது. புளி என்ற மரப்பெயரையுடைய "புளியம்பட்டி "எல்லா வட்டத்திலும் உண்டு.

பதி

நீரும் வயலும் சூழ்ந்த ஊரைக் குறிக்கும் சொல் 'பதி' ஆகும். 'பதி' என்ற துணைச் சொல் கொண்ட ஊர் இருளர், மலசர் என்ற பழங்குடி மக்கள் வாழ்ந்த ஊர்களாகும் என்பதைச் சோழன் பூர்வ பட்டயத்தால் அறியலாம். பேச்சம்பதி காடுசார்ந்த பகுதியிலும்,கூத்தன் பதி,வெங்கம்பதி, ஆகியன மலை விளிம்புப் பகுதியிலும் அமைந்துள்ளன.

புத்தூர்

புதியவாகத் தோன்றும் ஊர்கள் புத்தூர் எனப்பட்டன.[6] பெரியார் மாவட்டத்தில் புத்தூர், புத்தூர் புதுப்பாளையம், புத்தூர் பள்ள பாளையம் என்ற ஊர்கள் உள்ளன. பெருந்துறை வட்டத்தில் வாகைப் புத்தூர் உண்டு. புத்தூர் என்பதே புதூர் என்ற பொது கூறாகி பெரியார் மாவட்டம் முழுவதும் பல புதூர்களைத் தோற்றுவித்துள்ளன.

புதூர்

மக்கள் பெருக்கம் ஏற்பட்டது. மக்கள், வாழ வசதி வேண்டிப் பல இடங்களுக்கும் சென்றனர். அவர்கள் சென்ற இடங்களில் உள்ள

காடுகளை அழித்துப் புதிய ஊர்கள் உண்டாக்கினர். அவ்வூர்கள் புது+ஊர்=புதூர் என்று காரணப் பெயரால் வழங்கப்பெற்றன. அவை புதூர் என்றே அழைக்கப்பட்டன. இப்படிப்பட்ட பல புதூர்கள் மாவட்டம் முழுவதுமாகக் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் புதூர் என்ற பொதுக்கூறு மட்டும் நின்று ஊர்களைச் சுட்டிக் காட்டின. பின்னர் ஊரை உணர்த்தும் பொதுக் கூறுகளாக மாறியது.

வேளாளர் தாங்கள் சென்ற இடத்தில் தங்கள் பெயரால் புதிய ஊர்களை உண்டாக்கினர். பழனிக் கவுண்டன் புதூர் என்பது அவ்வாறு ஏற்பட்டதாகும். சாதியினர் குடியேறிய இடங்கள் சாணார் புதூர்,தாசன் புதூர், ஒட்டன் புதூர் ஆகியன.

ஊர் விரிவாகி வளர்ந்த காலத்தே பக்கத்தே புதிய ஊர்கள் ஏற்பட்டன. அவ்வூர் பெயருடன் புதூர் என்ற துணைச் சொல்லும் சேர்ந்து கோயில்பாளையம் புதூர் ஆயிற்று. இவ்வாறு பல ஊர்கள் உள்ளன.

புதூர் என்ற துணைச்சொல் பெற்ற ஊரானது வளர்ச்சியடைந்தபோது பழைய புதூர் எனப்பட்டது. நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டபோது அவ்விடத்தே புதிய ஊர்கள் உண்டாயின. நீர்நிலைகளின் பெயர்களைக் கொண்டு வாய்க்கால் புதூர். வாவிக்கரைப் புதூர் எனப்பெயர்கள் ஏற்பட்டன.

காடுகளை அழித்து ஊர் உண்டாக்கினர். அவை எலந்தக்காட்டுப் புதூர், ஆவரங்காட்டுப் புதூர் எனப் பெயர் பெற்றன. ஊருக்கு அப்பால் ஏற்பட்ட ஊர்கள் திசைப் பெயரால் (மேற்குப் புதூர்) பெயர் பெற்றன. இம்மாவட்டத்தில் கவுண்டர்கள் தங்கள் பெயரால் புது ஊர்களை உண்டாக்கியது போல மூப்பன் என்ற சாதியினரும் புது ஊர்களை உண்டாக்கியதைக் காணலாம். மசமூப்பன் புதூர்.கருப்ப மூப்பன் புதூர், சின்ன மூப்பன் புதூர் எனப் பல ஊர்கள் உள்ளன.

புதூர்,வலசு என்ற துணைச்சொல் கொண்டு முடியும் வேளார் மிகுந்த பகுதியாக உள்ளன.

பாளையம்

கொங்குநாட்டில் ஊரெல்லாம் பட்டி, தொட்டி என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. இன்று காங்கயம் வட்டம் உள்பட எல்லா வட்டங்களிலும் 'பாளையம்' என்று முடியும் ஊர்களே மிகுதியாக உள்ளன. 'பாளையம்' என்பது பாசறையைக் குறிப்பதாகும். அது போரில் அரசனுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கொடுக்கப்பட்ட ஊரும் அதைச் சேர்ந்த நிலப்பகுதியையும் குறித்தது . தமிழகம் முழுவமையும் பல பாளையங்கள் காணப்படினும் சிறப்பாகக் கொங்கு நாடு பாளையத்திற்குப் பேர் பெற்ற நாடாகும். பாளையத்தின் தலைவன் 'பாளையக்காரன்' எனப்படுவான். இப்பாளையப்பட்டுக்கள் சிறியவையும், பெரியவையுமாய் பல இருந்தன என்பதை பாளையப்பட்டுக்களின் வம்சாவளி,தொகுதி 1,2,3,& 4 ஆகிய நூல்களால் அறியலாம்.

விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பாளையமுறை புகுத்தப்பட்டது. அவர் தமது ஆட்சிக்குரிய பகுதியில் 72 பாளையங்களை உண்டாக்கினர். அக்காலத்தில் விசுவநாதநாயக்கர் எழுந்தருளியிருக்கிற நாளையில் சமஸ்தானத்துக்கு சேர்ந்த பாளையக்காரர் அரசனுக்கு அடங்கியிருத்தலும் யெதிர்பாளையம் போட்டுக் கொண்டிருத்தலும் உண்டு[7] அவர்கள் "சில்லரைப் பாளையப் பட்டார்"[8] எனக் குறிப்பிட்டனர்.

விசுவநாத நாயக்கர் நலமாக மதுரைக்கோட்டை யெழுவத்திரண்டு கொத்தனத்துடனே கட்டிவைத்து, யெழுவத்திரண்டு பாளையக்காரரை கொத்தளங் காற்க்கச்சொல்லி வுத்திரவு கொடுத்து அவாளவாளுக்கு இந்தப்படிக்கி நிராம பூமிகள் கொடுத்து வெகுமதி

செய்தார்கள்.[9] நாயக்கர் அரசர்காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயம் ராசகோபாலிப் பணம் எனப்பட்டதைப் பாளையப் பட்டுக்களின் வமிசாவளியால் அறியலாம்.

இப்பாளையக்காரர்கள் வசூலிக்கும்,ராசகோபாலி பணத்தில் ஒரு பங்கை அரசனுக்கும், மற்றொரு பங்கை படைவீரர்களுக்கும், மீதியான பங்கைத் தனக்கும் வைத்துக் கொள்ள உரிமை பெற்றிருந்தனர்.

இவ்வாறு கொங்கு நாடு முழுவதும் பாளையங்களும், உட்பாளையங்களும் ஏற்பட்டு மக்கள் பெருக்கத்திற்கேற்பக் குளம் தொட்டு வளம் பெருக்கியும், காடழித்து நாடுண்டாக்கியும் வந்ததைப் பாளையப் பட்டுக்களின் வம்சாவளி எனும் நூல் மூலம் அறிந்த கொள்ளலாம்.

பெரியார் மாவட்டத்தில் 40 விழுக்காட்டு ஊர்கள் பாளையம் விகுதிபெற்றவை ஆகியுள்ளன. இப்பாளையங்களில் பழைய கோட்டை, காடையூர் பட்டக்காரர், காங்கயம் பட்டக்காரர் இன்றும் தமது வம்சாவளியில் புகழ்தேடி வருகின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள பாளையம் விகுதிபெற்ற ஊர்கள் தனியார் பெயராலும்,அரசு அதிகாரிகளின் பெயர்களாலும், பெண்களின் பெயர்களாலும், சாதியினர் பெயர்களாலும், கடவுளின் பெயர்களாலும் அமைந்து காணப்படுகின்றன.

கருக்கன் (கருப்பண்ணன்) ஒரு முனிவன். கருப்பண்ணன் கோயில் என்ற வீரவழிபாட்டுத் தெய்வத்தையும் இவ்வட்டாரத்தில் காணலாம். இம்முனிவன் அல்லது வீர வழிபாட்டுக்குரிய தெய்வமாகிய கருக்கன் (கருப்பண்ணன்) முதன்மையாக நின்று கருக்கன்பாளையம் பல ஏற்பட்டன. இப்படிப்பட்ட ஊர்கள் தாய்க்கிராமத்தை அடைமொழியாகக் கொண்டு வழங்குகின்றன.

கணபதிபாளையம்,பொடாரன்பாளையம் என்பனவும் வழிபடு தெய்வத்தின் பெயரால் ஏற்பட்ட ஊர்களாகும். இம்மாவட்டத்தில் அத்தப்பன் என்ற பெயரால் பாளையங்களும்,வலசு,புதூர் என்ற துணைச் சொல் பெற்ற ஊர்களும் உள்ளன. இப்பெயருடையார் தனி மனிதச் சிறப்புப் பெற்றிருத்தல் காரணமாக ஊர்ப் பெயர்கள் அமைந்தன.

இம்மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம் என்ற பெயர் பல தாய்க்கிராமங்களுக்கும் அமைந்துள்ளன. சின்னமலையிலும், சென்னிய மலையிலும், கதித்த மலையிலுமாக எழுந்து அருள்புரியும் முருகனின் வேலாயுதம் காரணமாக நின்று பல ஊர்களுக்கும் காரணப் பெயராய் அமைந்துள்ளது.

"சேனாபதிபாளையம்" என்ற ஊர் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றடியார் என்று பட்டம் பெற்ற பட்டக்காரர் வழிமுறையைத் தழுவிப் பெயர் பெற்றதாதல் வேண்டும்.

"கோயில்பாளையம்" என்ற ஊர் கோயிலைச் சுற்றி நடந்த குடியேற்றத்தைக் குறிக்கின்றது. தன் கோழி அம்மன் கோவில்பாளையம் என்று அடைமொழி கொடுத்து பிரித்தறியவும் செய்தனர்.

குடியிருக்கும் மக்கள் சிறப்பால் ஊர்ப் பெயர்கள் மாறி வழங்கக் காணலாம். காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் கிராமத்தில் உள்ள பழைய வெள்ளியம்பாளையம் இன்று பட்டக்காரர் பங்களா ஆனது. இவ்வூரின் பக்கத்தில் ஏற்பட்ட மற்றோர் ஊர் புது வெள்ளியம்பாளையம் ஆனது.

"கருக்கு" என்பது பனையின் இளம் பனைமரத்தைக் குறிப்பதாகும். அம்மரங்கள் நிறைந்த இடத்தே ஊர் ஏற்பட்டதால்

கருக்குபாளையம் என்ற பெயர் வந்தது. அப்பனை மரக்காடுகளில் கிடைக்கும் ஓலையின் பெயரால் ஓலப்பாளையம் ஏற்பட்டது. இப்பெயர் கொண்ட ஊர்கள் பல உண்டு. இவ்வூரில் இருந்து குடி பெயர்ந்து சென்று வேறோர் இடத்தில் குடியேறிய போதும் அப்பெயரே குடியேறிய இடத்திற்கும் பெயரானதால் பல ஓலப் பாளையங்களைக் காணலாம்.

இம்மாவட்டத்தில் உள்ள பாளையங்கள் பல தனிப் பெயரால் (சென்னிமலை பாளையம், செல்லப்பன் பாளையம், ராக்கம் பாளையம் போன்றவை) உள்ளன. இப்பெயர்கள் எல்லாச் சாதியினர்க்கும் பொருந்துவதாகவே உள்ளன. ஆயினும் வேளாளப் பெருமக்களுக்கு வழங்கும் பெயர்களே மிகுதியாக உள்ளன.

ஒட்டர்,செட்டி,ரெட்டி,ஆண்டி, சாஜார்,வடுகர்,கொங்கர் ஆகிய சாதியினர் பெயரால் பாளையங்கள் உண்டு. அச்சாதியினர் மிகுந்து காணப்படும் ஊர்களே அச்சாதியினர் பெயரால் வழங்கக் காணலாம். தற்காலத்தில் அவ்வூர்களில் ஓரிரு குடும்பங்களேனும் இன்றும் குடியிருக்கக் காணலாம்.

செட்டிபாளையம் மாவட்டம் முழுவதும் காணக்கூடிய ஓர் ஊராகும். செட்டியார்கள் வாணிகத்தின் பொருட்டு இடம் பெயர்தல் பலகாலும் நடைபெறுதல் உண்டு. அவர்கள் வாழ்ந்திருந்த ஊர்கள் செட்டிபாளையம் ஆயின. பல ஊர்கள் ஆன பின்னர் புது என்ற அடைமொழி கொண்டு புதுச்செட்டிபாளையம் புல்ல செட்டிபாளையம் என வேறுபடுத்தப்பட்டன.

வெண்ணெய் வாங்கி நெய்யாக உருக்கி வாணிகம் செய்பவர் நெய்க்காரர் எனப்படுவர். பசுக்கள் பெருகவே பல ஊர்களுக்கும் மையமாக இருந்துகொண்டு தங்கள் வணிகத்தை மேற்கொண்டனர். அவர்களைச் சார்ந்த பல குடும்பங்கள் சேர்ந்து வாழத் தொடங்கிய போது நெய்க்காரன் பாளையம் ஆயிற்று. மேலும் அச்சாதி மக்கள்

கோயில்களுக்கு விளக்கு எரிக்க நந்தா விளக்கிட நெய் கொடுப்பர். அவர்கள் வாழ்ந்த இடமும் அவர் பெயரால் வழங்கியது.

கொங்கு வேளாளர் வாழுமிடங்களில் காணி தெய்வங்கள் உண்டு. அக்காணி தெய்வங்களுக்குப் பூசை செய்வோர் ஆண்டி அல்லது பண்டாரம் எனப்படுவோரே. அவர்களுக்கு விளை நிலங்கள் சர்வமானியமாக வழங்கப்பட்டிருத்தலை இன்றும் கிராமங்களில் காணலாம். அவ்வாறு விடப்பட்ட மானிய நிலங்களில் குடியேறியபோது அப்பூசாரிகளைச் சார்ந்த கோயில் பணியாளர்களும் உடன் குடியேறினர். அவ்வூர்கள் ஆண்டிப் பாளையம், படியாண்டிப் பாளையம், பூசாரிப்பாளையம் என்று அமைந்தன.

சிவிகையார் என்பது சிவியார் என்றாயிற்று. இவர் இடையரில் ஒரு பிரிவினரென்றும் கூறுவர். இவர்கள் முகமதியர் ஆட்சிக்காலத்தில் மைசூரில் இருந்து கொங்கு நாட்டிற்கு ஓடி வந்தவர்கள். பல்லக்கு சுமத்தல் இவர்கள் தொழிலாகும்.[10] கோயில் உற்சவ காலங்களில் பல்லக்குத்தூக்கும் பணியாளர்களும் உண்டு. இவர்களுக்கு மானியங்களும் விடப்பட்டன. இம்மக்கள் குடியேறி வாழ்ந்த ஊர்களே சிவியார் பாளையம் என்றாயின.

சேர்வை-வேலை செய்வோன் என்னும் பொருளுடையது. இது அகமுடையான், வலையன், அம்பலக்காரன், கள்ளன், மறவன்.[11] ஆகியவர்களுக்கும் வழங்கிய பட்டப் பெயர்களாகும். சேர்வை என்பது கோயில் ஊழியம் செய்வதைக் குறிக்கும். அவர்களுக்கும் மானியங்கள் விடப்படுவதுண்டு.[12] அவர்கள் வாழ்ந்திருந்த இடம் சேர்வைக்காரன் பாளையம் என வழங்கியது.

தனிப் பெயர்களில் பாளையம் மிகுந்துள்ளது என முன்னர்க் கண்டோம். தனிப்பட்டவர்கள் செல்வாக்கினால் ஊர்களை உண்டாக்கிக் கொண்டு பாளையத்துக்குள் உட்பாளையமாக அடக்கி, அவர்களே

குளம் தொட்டு வளம் பெருக்கிக் கோயில் முதலான வசதிகளைச் செய்துகொண்டு ஊரை மேம்பாடு செய்தவர்கள். தங்கள் பெயரால் பாளையங்களை உண்டாக்கினார்கள் (காங்கேயன் பாளையம், தேவன்பாளையம், மல்ல நாயக்கன் பாளையம், குட்டப்பாளைம்,பிலி கிரி நாய்க்கன் பாளையம்).

தனியார் பாளையங்களுக்கு எதிரானதாகவோ அல்லது குறித்த சாதியினர் மிகுதியும் குடியேறப் பெற்றதாலோ தனிச் சிறப்புச் சாதியினர் பெயராலும் பாளையங்கள் பல ஏற்பட்டுள்ளன (சானார் பாளையம், வடுகர் பாளையம், ரெட்டி பாளையம்) , பழங்கால ஊர்கள் எல்லாம் ஆற்றோரங்களிலும், மலை வாரங்களிலும்தான் ஏற்பட்டிருந்தன. மக்கள் பெருக்கம் ஏற்பட்டபோது உள்நாட்டுப் பகுதிகளில் தான் குடியேற முடிந்தது. பழையாற்றங்கரைப் பாளையம், வட்டமலை பாளையம் மட்டுமே இன்று இவற்றிற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. பின்னர் தாங்களே ஏரி, குளம், குட்டை, கிணறுகளைத் தோண்டிக் கொண்டனர், (குட்டைப்பாளையம், பெரிய கிணத்துப் பாளையம், சின்னேரி பாளையம்).

ஏற்கெனவே, உள்ள ஊரில் கிழக்கு,மேற்கு,தெற்கு,வடக்குப் பாளையங்களும் ஊரின் மேல் பக்கமான ஊர் மேலப்பாளையம் என்றும் கிராமத்தின் எல்லை ஓரத்தில் உள்ள ஊர் எல்லைப்பாளையம் என்றும் பெயர் பெற்றது. குடியேறிய இடத்தில் உள்ள குளம், குட்டை, அணை, கீழேரி, ஊத்து, தோட்டம் எனப்பட்ட நீர்நிலைகளால் பெயர் பெற்றன.

காடு,கரடு,பாறை என்ற இடங்களிலும் பாளையங்கள் ஏற்பட்டன. ஆல்,இச்சி, முருங்கை, ஊஞ்சை, மூங்கில், மாமரம், புளியன், வேம்பு, ஈச்சை என்ற மரங்களின் பெயர்களாலும் சுள்ளி, கள்ளி, காரை, சுண்டை, மல்லி ஆகிய செடிகளின் பெயர்களாலும் பாளையங்கள் ஏற்பட்டன.

ஒரே பெயரில் பல்வேறு ஊர்கள் இருந்தால் பிரித்தறிந்து கொள்ள இடைமொழிகள் கொடுக்கப்பட்டன. கந்தம்பாளையம், பொரசங்காட்டுக் கந்தம்பாளையம், ஓலப்பாளையம், எழுத்துப் பாறை ஓலப்பாளையம், கூறைபாளையம் (கூறை–வேளாளர் குலப் பெயர்களில் ஒன்று) உண்டாயிற்று.

சாதியினர் பெயரால் பாளையங்கள் இங்குண்டு. பார்ப்பனர் பெயரால் பாப்பம்பாளையம் ஆனது. சிவத்தலங்களில் பூசை செய்வோர் பிராமணர்களே. காலப்போக்கில் அவர்களை அடுத்துக் கோயில் பூசை செய்ய பூசாரிகள் அல்லது ஆண்டிகள் அமர்த்தப் பட்டனர். இவர்களுக்கு மானியங்கள் கொடுக்கப்பட்டன. பூசாரிப் பாளையம், ஆண்டிப்பாளையம் சின்னாண்டி, பெரியாண்டி, கருமாண்டி, வராண்டி, குப்புராண்டி என்ற பெயருடன் பாளையங்கள் பெருந்துறை வட்டத்தில் உள்ளன.

நெய் நிவேதனம் செய்தவன் வாழ்ந்த இடம் நெய்க்காரன் பாளையம் ஆயிற்று. கோயில் பணிகளில் சிறந்த தாசர் வாழ் இடம் தாசம்பாளையம் ஆயிற்று.

கொங்கு நாட்டில் பட்டக்காரர் போன்றோர் புலவர்களை ஆதரித்தனர். அப்புலவர்கள் வாழ்ந்த இடம் புலவர்பாளையம், கூத்து எனும் கலைக்குரியவர் வாழ்ந்த இடம் கூத்தம்பாளையம்.

தொட்டிநாய்க்கன் என்ற சாதியினர் வாழ்ந்த இடம் தொட்டிபாளையம், சாதியுடன் தனிப் பெயருடன் பல ஊர்கள் உண்டாயின (நீலக் கவுண்டன் பாளையம், நல்லப்ப கவுண்டன் பாளையம்). மல்ல நாய்க்கன் பாளையம், ராமநாய்க்கன் பாளையம் கூறை வேளாளரின் ஒரு குலப் பிரிவு. கூறை குலத்தவர்க்குக் காணியான பிடாரியூருக்கு அருகே வாழும் அக்குலப் பிரிவு மக்கள் குலப் பெருமைக்குரிய குலப்பெயரிலிருந்து தம் ஊர்ப் பெயரை ஏற்படுத்திக்

கொண்டனர். அரசர்கள் தொடர்பான பல்லவராயன் பாளையம், சாமராஜ் பாளையம், பாண்டியம் பாளையம், என்பனவும் அரசு அலுவல் பெயர்கொண்ட மந்திரி பாளையம், மணியன் பாளையம், தண்டக்காரன் பாளையம், சங்கக்காரன்பாளையம், கணக்கன் பாளையம், மல்லன் பாளையம், பட்டக்காரன் பாளையம் என்பனவும் ஏற்படலாயின பெருந்துறை வட்டத்தில் "பாளையம்" ஊர்ப்பெயர்கள் மிகுந்துள்ளன.

பள்ளி ஹள்ளி

பள்ளி என்ற சொல் சமண முனிவர்கள் வாழ்ந்திருந்த ஊரைக் குறிக்கும். ஆடு, மாடு மேய்ப்பவர்கள் தங்கும் இடமும் பள்ளி எனப்படும். ஹள்ளி என்பது கன்னட விகுதிச் சொல்லாகும். பவானி சத்தியமங்கலம் வட்டத்தில் ஹள்ளி என்ற விகுதிபெறும் ஊர்கள் உள்ளன சிக்க ஹள்ளி, மாதஹள்ளி, ஜீரஹள்ளி, புதுவடபள்ளி–புதுவடவள்ளி ஆகிய ஊர்கள் சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ளன.

பாடி

"பாடி மண்டலமே" எனத் தொடங்கும் சூடாமணி நிகண்டில் உள்ள சூத்திரத்தில் நாட்டின் பெயர் "பாடி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லை நிலத்தே தோன்றும் ஊர்களும் "பாடி" எனப்படும். முல்லைநில மக்கள் பசுக்கள் மேய்ப்பதைத் தொழிலாகக் கொண்டவர். "ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த பூவைப் புதுமலர்" என்ற சிலப்பதிகார அடியில் ஆயர்பாடி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புரம், புரி

இச்சொல் மருத நிலத்துக்குக்குடியிருப்பை உணர்த்துவதுடன் வியாபாரத் தலத்தையும் குறிப்பிட்டு நிற்கும். புரம், புரி என்ற விகுதி பெற்ற ஊர்கள் பெருவழியில் காணப்படுவதால் அவ்வாறு கொள்ள

வாய்ப்புள்ளது. எல்லா ஊர்களும் பெருவழியில் உள்ளன எனக் கொள்ள இயலாது. பெருந்துறை வட்டம் விஜயபுரி பெருவழியில் உள்ளது. சீனாபுரம் பெருவழியை ஒட்டிய ஊராகும். பெரியார் மாவட்டத்தில் உள்ள "புரம்" தனியார் பெயருடனேயே அமைந்துள்ளது. நாரணபுரம், சொக்கநாதபுரம் என்று தெய்வத்தின் பெயரால் சில ஊர்கள் உள்ளன. புரம்,புரி மருத நிலத்தூர் எனப்பட்டது. ஆனால் மருத நிலத்திற்குரிய இயற்கையோ, இடப்பெயரோ இவ்வூர்ப் பெயர்களில் அமையவில்லை.

மங்கலம்

"மங்கலம்" என்பது பிராமணர் குடியிருப்புகள்; பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பெற்ற கிராமங்கள் ஆகும். சதுர்வேதி மங்கலம் என்பதன் குறுகிய வடிவம் மங்கலம் ஆகும். இவ்விகுதி பெற்ற ஊர்கள் பிராமணர்களுக்குத் தானமாக விடப்பட்ட ஊர்களாகும். பெரியார் மாவட்டத்தில் 17 ஊர்கள் மட்டுமே உள்ளன.

அக்ரஹாரம்

"அக்ரஹாரம்" என்பதும் பிராமணர் குடியிருப்புக்காகப் பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பட்ட கிராமம். அகரம், அகரப்பிரம்மதேயம் என்று சாசனத் தொடர்களில் காணப்ப டுகின்றது. ஈரோடு அருகே பிராமணப் பெரிய அக்ரஹாரம் என்ற ஊர் உண்டு. இவ்வூரில் பிராமணர்கள் இல்லை. முசுலீம் மக்களே வாழ்கின்றனர். ஈரோடு,பெருந்துறை போன்ற நகரங்களில் பிராமணர்கள் வசிக்கும் தெருக்களே அக்ரஹார வீதி எனப்படுகிறது.

பிரமதேயம்

"பிரமதேயம்" பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட கிராமம் ஆகும்.[13] பவானி வட்டத்தில் பிரமதேயம் என்றும், தாராபுரம் வட்டத்தில் பிரமியம் என்றும் பெயர் பெற்றுள்ளன.

வலசு

"வலசு" என்றால் வீடு அல்லது நகரின் ஒரு பகுதி என்று பொருள்படும். பெரியார் மாவட்டத்தில் வலசு என்ற துணைச்சொல் பெற்ற ஊர்கள் ஈரோடு,பெருந்துறை,காங்கயம், தாராபுரம் வட்டங்களில் நிறைய உண்டு.

ஆண்களின் தனிப் பெயர்களைக் கொண்ட வலசு (நாரணன் வலசு, கருங்காளி,நீலங்காளி வலசு) களில் ராக்கியாவலசு (காங்கயம் வட்டம்) என்ற ஊரைப் புலிக்குத்தி ராக்கியா வலசு என்று அவ்வூரார் கூறுகின்றனர். ராக்கியான் என்ற வீரன் ஊரை அழிவு செய்த புலியை குத்திக் கொன்று தானும் இறந்து போனேன். அதனால் புலிக்குத்தி ராக்கியா வலசு என்று பெயர் பெற்றதாகக் கூறினர். அவனுக்கென நடுகல் ஒன்றும் ஊரின் புறத்தே வழியில் உள்ளது. ஆண்கள் மட்டுமேயல்லாமல் பெண்களின் பெயர்களும் ஊருக்குப் பெயராக அமைந்துள்ளன (கருப்பாயி வலசு, காமாட்சி வலசு, மீனாட்சி வலசு). பொதுவாக குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் செல்லமாக வழங்கிவரும் பாப்பாவுக்கும் பாப்பா வலசு என்ற ஒரு வலசு உண்டு.

பெரியார் மாவட்டத்தில் 10 விமுக்காட்டு ஊர்கள் "வலசு" என்ற துணைச்சொல் கொண்டு முடிவன. அவற்றுள் பல தனிப் பெயருடன் கூடிய சாதிப் பெயரோடு கூடியவை. அவற்றுள் கவுண்டர் சாதியுடன் கூடிய தனிப் பெயர்கள் அதிகம் ஆகும் (வெள்ளக்கவுண்டன் வலசு,வன்னியப்ப கவுண்டன்வலசு, முத்துக்கவுண்டன் வலசு, பழனிக்கவுண்டன் வலசு, திருமலைக் கவுண்டன் வலசு முதலியன). நாய்க்கர் சாதியுடன் கூடிய தனிப் பெயர்கள் அடுத்து மிகுதியாகக் காணப்படுகின்றன (பால நாயக்கன் வலசு, குருநாய்க்கன் வலசு). பிற சாதிப் பெயரும்,தனிப்பெயரும் கொண்டு இவ்வகை ஊர்கள் பெயர் பெறவில்லை.

வளையல்காரன் (வளையக்கார வலசு), தட்டான் (தட்டான் காட்டு வலசு), கவுண்டன் (கவுண்டன் வலசு), குயவர் (கொசவலசு) ஆகிய சாதியினர் பெயர்களுடன் "வலசு" என்ற துணைச்சொல் பெற்ற ஊர்கள் உள்ளன. துலுக்கன் என்றபெயர் சாதாரணமாக முசுலீம் மக்களைச் செல்லமாக இங்குள்ள மக்கள் அழைக்கும் சொல்லாக வழக்கில் உள்ளது. இவர்கள் பெயரால் இருவலசு இருவேறு கிராமங்களில் (மூலனூர் கிராமம்-துலுக்க வலசு, கிழான் குண்டல்- துலுக்க வலசு) உள்ளன. துலுக்கனூர் என்ற ஊரும் உண்டு.

மரம் (புளியன் வலசு, நொச்சி வலசு, பனங்காட்டு வலசு), செடி (கள்ளி வலசு, கங்க வலசு), கொடி (வஞ்சு வலசு), முள்செடி (காரை வலசு) ஆகியன செடி,கொடி, மரம் பெயர்களால் பெயர் பெற்றன.

காடு (சுண்ணாம்புக் காட்டு வலசு), மேடு (மேட்டு வலசு பல உண்டு), கல் (சென்னாக்கல் வலசு), பாறை(பாறை வலசு) என்றும் இயற்கையமைப்பிற்கு ஏற்றவாறு ஊர்ப் பெயர்கள் ஏற்பட்டன.

திசைப் பெயராலும் வலசுகள் உண்டு. கிழக்கு வலசு, வடக்குவலசு, போதூர் என்ற கிழக்கு வலசு. நடு வலசு என்பன. மூலனூரில் சமுத்திர வலசும் (நீர் நிலை), எடக்கல் பாடியில் ஒரு சக்கர வலசும் (சர்க்கரை பட்டப்பெயர்), பொன்னிவாடியில் குள்ளந் தள்ளி வலசும் (சக்கிலியர், பாறையர்க்கென), புத்தூர் கிராமத்தில் ஒரு புதுவலசும் (புதியதாக முதலில் ஏற்பட்டது) உள்ளன. வலசு என்ற துணைச் சொல்லே நின்று ஊர்ப் பெயரை உணர்த்துவதே இம்மாவட்டத்தில் பெரு வழக்காகும். முத்தையன் வலசு என்கிற ஒட்டன் புதூர் என்று மற்றொரு பெயர் பெறும் ஊர்களும் உண்டு.

பிறமொழிச் சொற்கள்

பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம். பவானி வட்டங்களில் கன்னடம் பேசுவோர் வாழ்ந்து வருகின்றனர். ஆகையால். கன்னட

மொழிக் கூறுகள் அடங்கிய ஊர்கள் உள்ளன. பவானி வட்டத்தில் பர்கூர் பகுதியில் அத்தகைய ஊர்கள் பல உள்ளன. அவ்வூர்ப் பெயர்கள் பவானி வட்டத்து ஊர்ப் பெயர்களின் பட்டியலில் பல்வகைப் பெயர்கள் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. சத்தியமங்கலம் வட்டத்தில் திம்பம் பகுதியில் கன்னடச் சொற்கள் இடம் பெற்றுள்ளன (எ.கா. தொட்ட காஜனூர், பெலட்டூர்). பெத்தா தெலுங்குச் சொல் சில ஊர்ப் பெயர்களில் (பெத்தாம்பாளையம்) காணப்படுகின்றது.

அரசர்

சோழரும், பாண்டியரும் தங்கள் ஆட்சிக் காலத்தில் நல்லூர்களை உண்டாக்கினார்கள். சோழமாதேவிக் கரை, வீரசோழபுரம், வீரபாண்டி ஆகிய ஊர்கள் சோழ, பாண்டியர்களை நினைவூட்டும் ஊர்களாகும். சோழரையும், கங்கரையும் நினைவூட்டி நிற்கும் சோழங்கபாளையம் எனும் சோழர் கங்கர்பாளையம் என்ற ஊர்நாயக்கர் ஆட்சிக் காலத்தை நினைவூட்டும் நாயக்கம்பாளையம் எனும் ஊர். சாம்ராஜ் பாளையம் மைசூர் அரசை நினைவூட்டும்.

தலைவர்

சங்க காலத்தில் மோகூர் நாட்டைப் பழையன் என்ற வேளிர் தலைவன் ஆட்சி புரிந்தான். இப்பழையன் மரபினர் கட்டியதே (பழைய கோட்டை)[14] என்னும் ஊர். இப்பரம்பரையினர் இன்றும் பழைய கோட்டையில் உள்ளனர். சர்க்கரை, உத்தமக் காமிண்டன் என்ற பட்டங்களை நினைவூட்டுவதாக அமைந்த ஊர்களே சர்க்கரைப் பாளையம் (காங்கயம் வட்டம்), உத்தமபாளையம் (உத்தமக் காமிண்டன் என்பதில் காமிண்டன் வழக்கில் நீங்கியது போலும்) ஆகியன. பட்டக்காரர் சத்திரம், பட்டக்காரர் பங்களா என்கிற பழைய வெள்ளியம்பாளையம் ஊர்களில் இப்பரம்பரையின் அழகன் சர்க்கரை,கரியான் சர்க்கரை, சேனாபதிச் சர்க்கரை என்பவர்கள்

வாழ்ந்திருந்தனர். அழகவுண்டன் புதூர், கரியாக்கவுண்டன் புதூர், சேனாபதிபாளையம் ஆகிய ஊர்களும் இவர்களின் பெயர்களை நினைவூட்டுவன போல் உள்ளன. இங்கு வாழும் மக்கள் அனைவரும் இப்பரம்பரையினரை எஜமான் என்ற மரியாதைப் பெயருடன் குறிப்பிடுவதே வழக்கமாகும். அப்பெயரில் எஜமான் புதூர் என்ற குடியிருப்பும் உண்டாகும்.

கொங்கு நாட்டுப் பட்டக்காரர் நால்வருள் காங்கயம் பட்டக்காரர் ஒருவர். பல்லவராயர் என்ற பட்டம் பெற்றவர்கள். பல்லவராயர் என்ற பட்டப் பெயரில் உள்ள பல்லவன் என்பது தனியாகவும், ராயர் என்பது தனியாகவும் நின்று பல ஊர்கள் மாவட்டம் முழுவதும் காணப்படுகின்றன (பள்ளபாளையம். ராயபாளையம்- கன்னடம் பேசும் பிராமண சாதியினர் ராயர் எனப்படுவர்). இவர்களுக்கு பல்லவராயர்களுக்கும் கன்னடம் பேசும் பிராமணர் சாதியினர் ராயர் எனப்படுவர்.

பெரியார் மாவட்டம் முழுவதும் வேமாண்டம்பாளையம் என்ற ஊர் பல காணப்படுகிறது. வேணாவுடையார் என்ற சங்கரண்டாம் பாளையம் பட்டத்தை நினைவூட்டும் பெயராகிய வேணாவுடையான் - வேமாண்டான் என மரூஉப் பெயராகியிருக்கலாம். அதேபோல கருமாண்டான். பூமாண்டான். செம்மாண்டான் என்பது தனியார் பெயராகத் தெரியவில்லை இப்பெயர்கள் பண்பின் அடியாகப் பிறந்த பட்டங்களாக இருக்கலாம். இப்பெயர்களின் அடியாகப் பல ஊர்கள் உள்ளன.

வாரணவாசி, வடமலை ,சீரங்கன் என்ற மூவரும் அச்சுதராயனின் படைத் தலைவர்கள். குறுப்பு நாட்டில் இருந்த வெங்கடராயன் என்ற வேட்டுவர் தலைவன் அச்சுதராயன் ஆட்சிக்கு எதிராக இருந்தான். வாரணவாசி, வடமலை, சீரங்கன் ஆகிய மூவரும் வேட்டுவர் தலைவன் வெங்கடராயனை விசயமங்கலத்தில் தோற்கடித்தனர்.[15] வடமலை பாளையம், சீரங்கன்பாளையம்

(பெருந்துறை வட்டம்) ஆகிய ஊர்கள் இவர்கள் பெருமையை நினைவூட்டுகின்றன.

வேலவன் என்ற வள்ளல் ஒருவன் கொங்கு நாட்டில் வாழ்ந்தார்.[16] வேலம்பபாளையம் என்ற ஊர் இவ்வள்ளலின் பெயரை நினைவுபடுத்துகிறது. பெரியார் மர்வட்டம் முழுவதும் பல வேலம்பாளையம் உண்டு. செம்பன் குல வேளாளர் தலைவன் அமராவதி.[17] அமரவாதிபாளையம் என்ற ஊர் இத்தலைவன் பெயரை நினைவுபடுததும், விளியர் குல வேளாளர் தலைவர் துலுக்கண்ணன் என்ற துலுக்கண்ணராவுத்தன்[18] என்பர். துலுக்கனூர், துலுக்கன் வலசு, துலக்கபாளையம் என்ற ஊர்ப் பெயர்கள் துலுக்கண்ண ராவுத்தன் என்ற பெயரின் மரூஉ ஆகலாம். வெண்டுவ குல வேளாளர் தலைவன் தீத்தன்.[19] தீத்தாம்பாளையம் அத்தலைவன் பெயரால் பெயர் பெற்றது. தோடை குல வேளாளர் தலைவன் காகுத்த நல்லான்.[20] காவுத்தாம்பாளையம் அத்தலைவன் பெயரால் ஏற்பட்டதாகலாம். கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் ஆவார்.[21] சடையன் என்ற பெயரோடு கூடிய ஊர் பல இம்மாவட்டத்தில் உண்டு.

பாம்பண கவுண்டன் ஒரு சிறந்த வள்ளல். இவர் பெயரில் பாம்பண கவுண்டன் குறவஞ்சி என்ற சிற்றிலக்கியமும் உண்டு. பாம்ப கவுண்டன் பாளையம் இவர் பெயரைப் பெற்றுத் திகழ்கிறது.

வெள்ளோட்டில் சாத்தந்தை குல வேளாளரில் ஒருவன் வீரபாண்டியன் படைத்தலைவனாக இருந்தான். அவன் வானிதனைக் (பவானிஆறு) கரைகொண்டடைத்து காளியங்கராயன்[22] என்று தம் பெயரால் வாய்க்காலும் வெட்டி ஊரும் உண்டாக்கினர். பவானிப்பக்கத்தேயுள்ள காளிங்கராயன் பாளையம் இவன் பெயரால் உண்டான ஊராகும். வெள்ளோட்டில் இருந்த உலகுடையான் என்பவன் பெயரால் 'உலகபுரம்' (பெருந்துறை வட்டம்) என்ற ஊர் உள்ளது.

காங்கேய குமார வள்ளல் என்பவன் காங்கயம் பட்டக்காரர் மரபினன். காங்கேய குமார வள்ளல் என்ற பெயரில் இடையில் உள்ள தனிப் பெயரான " குமார" என்ற பெயரில் குமாரபாளையம். கொமரபாளையம் என்று பல ஊர்கள் காங்கயம் வட்டத்தில் உள்ளது.

இவை முருகனின் வேறுபெயராகிய குமாரன் / குமரன் என்பதிலிருந்து முருகனை நினைவூட்டு முகமாக இடப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

பட்டம்

சேனாபதி,தனவாய்,முதலி, காமிண்டன் ஆகிய பட்டப் பெயர்களுடன் கூடிய ஊர்கள் பிற்காலத்தே ஏற்பட்டன. சேனாபதிபாளையம். தளவாய்பேட்டை, முதலிகாமிண்டன் வலசு, முதலியாக் கவுண்டன் வலசு என்றாகி வழங்கிறது.

புலவர்கள்

பொதுப் பெயரால் புலவன்பாளையம், புலவனூர் என்ற ஊர்கள் உண்டு. புலவன் காளிபாளையம் (கோபி வட்டம்) என்ற தனிப் பெயரோடும் சேர்ந்து ஊர் உண்டு. வெள்ளோட்டில் வாழ்ந்திருந்த சாமிநாதப் புலவனுக்கு சாமிநாதபுரம் (பெருந்துறை வட்டம்) என்ற பெயரில் ஊர் உண்டு. பூந்துறைப் புராணம் எழுதியவர் காளியண்ணப் புலவர் ஆவார். பூந்தறையின் பக்கத்தே உள்ள காளிபாளையம் என்ற ஊர் புலவரின் பெயரை நினைவூட்டும்.

"வஞ்சிக்கொடி" பூவரசு வஞ்சி என்ற ஊர் சேரநாட்டின் தலைநகர். வஞ்சி என்ற பெயருடைய ஊர் பெரியார் மாவட்டத்தில் உண்டு. காஞ்சி என்ற ஊர் தொண்டை நாட்டைச் சேர்ந்தது. பெரியார் மாவட்டத்தில் காஞ்சி உண்டு. நொய்யல் ஆற்றுக்கும் பெயர் காஞ்சி ஆகும்.

பெரியார் மாவட்டத்தில் வீரம் மிகுந்திருந்தது. வீரநகர் ஈரோடு என்பதும், வீரசோமனூர், வீரக்குமாரவலசு, வீரங் குட்டி வலசு ஆகிய ஊர்கள் எடுத்துக்காட்டாக உள்ளன.

மாராயம் என்பது கொங்கு வேளார்களிடையே உள்ள ஒரு சடங்காகும். அச்சடங்கின் பெயரால் மாராயக்காரனூர் எனப்பட்டது. பகைவர்கள் நம்மை அடக்கிச் சிறைப் பிடிக்க முடியுமா? முடியாது என்பதை ஊர்ப் பெயரே காட்டும். அதுவே சிறை மீட்டான் பாளையமாகும்.

அடிக்குறிப்புகள்

1. தண்டுறை –ஐங்குறு நூறு– பாட்டு 88
2. சூடாமணி நிகண்டு
3. தமிழ் நாடு, பக்கம் 28,சி.எம். இராமச்சந்திரன் செட்டியார்
4. தமிழகம் ஊரும் பேரும், பக்கம் 13, ரா.பி. சேதுப்பிள்ளை
5. பழம்பாடல், புலவர் செ.இராசு.
6. தமிழகம் ஊரும் பேரும், பக்கம் 30, ரா.பி. சேதுப்பிள்ளை
7. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 1, பக்கம் 68.
8. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 1, பக்கம் 90.
9. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 2, பக்கம் 36.
10. அபிதான சிந்தாமணி, பக்கம் 668.

11. அபிதான சிந்தாமணி, பக்கம் 741.

12 தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் அகராதி, பக்கம் 1436

13. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3, பக்கம் 37

14. கொங்கு நாடு, பக்கம் 158, அ.மு. குழந்தை.

15. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 69, வாலசுந்தரக் கவிஞர்.

16. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 86, வாலசுந்தரக் கவிஞர்.

17. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 80, வாலசுந்தரக் கவிஞர்.

18. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 66, வாலசுந்தரக் கவிஞர்.

19. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 83, வாலசுந்தரக் கவிஞர்.

20. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 92, வாலசுந்தரக் கவிஞர்.

21. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 67, வாலசுந்தரக் கவிஞர்.

22. கொங்கு நாடு ,பக்கம் 187, அ.மு. குழந்தை.

ஈரோடு வட்டம்

மேல்கரைப் பூந்துறை நாடும் (ஈரோடு சென்னிமலை), மேல்கரை அரைய நாடும் (கொடுமுடி,சிவகிரி) ஆகிய இரு நாடுகளடங்கிய பகுதியே ஈரோடு வட்டம். மேல்கரைப் பூந்துறை நாட்டில் உள்ள 32 ஊர்களைக் கொங்கு மண்டலச் சதகம் ஊர்த் தொகைப்பாடல் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

பூந்துறைசை வெள்ளோடை நசியனூ ரெழுமாதை
புகழ்சேர் பிடாரி நகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
பொன்காளை மங்கலமதும்
ஆய்ந்ததமிழ் கூறுங்கொளாநிலை கிழாம்பாடி
யான்மைகொள் முடக்குறிச்சி
அனும நகர் பழமங்கை குலவிளக்குக்காகம்
அறச்சலூர் விளக்கேத்தியும்
வேந்தர் மகிழீஞ்சநகர் சத்தியமங்கலமதும்
மிக்க சேமூர் மங்கலம்
வீரநகரீரோடு பேரோடு சித்தோடு

மிக்கான திண்டற் புதூர்
சேர்ந்து மழை பெய் தருளு மிலவமலை திருவாச்சி
திகழ்பனசை யோடா நிலை
தென்முருங்கைத் தொழுவு முப்பத்திரண்டூர்
சிறந்த பூந்துறை சை நாடே.

இவ்வூர்களில் உள்ள சாம்பல் மேடுகள், முதுமக்கள் தாழிகள், இயற்கையான மலைக் குகைகள், மேல்நாட்டறிஞர் குறிப்புகள் ஆகியவை இங்குள்ள ஊர்களில் பழமையை வெளிப்படுத்தும், முப்பத்திரண்டு ஊர்களில் ஊர் விகுதி ஒன்பதும், மங்கலம் விகுதி நான்கும், ஓடை விகுதி நான்கும், பள்ளி விகுதி இரண்டும், நிலைவிகுதி இரண்டும், துறைவிகுதி இரண்டும், பாடி விகுதி ஒன்றும், விளக்கு ஒன்றும், விளக்கேத்தி விகுதி ஒன்றும் காணப்படுகின்றன. இந்த 32 ஊர்களில் வெள்ளோடு, பிடாரியூர், ஈங்கூர், பெருந்துறை, சென்னிமலை ஆகிய ஊர்கள் பெருந்துறை வட்டத்தில் அடங்கியுள்ளன. ஏனைய ஊர்கள் ஈரோடு வட்டத்தில் அடங்கும்.

மருத நிலத்து ஊர்கள் 'ஊர்' எனப்படும். ஊரெனப்படுவது உறையூரே எனப் பழமொழி உண்டு. இது மருதநிலத்து ஊராகும்.கொங்கு நாட்டிலும் அத்தகைய பழம்பெரும் ஊர்கள் இருந்தன. அவை காலவெள்ளத்தில் அழிந்து போயின.

"ஊர் கவினழிய பெரும்பாழ் செய்து"[1] "ஊரிருந்த வழி பாழாக"[2] என்ற வரிகள் இதை உறுதிப்படுத்தும்.

'ஊர்' என முடியும் ஊர்களாவன: நசியனூர், எழுமாத்தூர், சாத்தம்பூர், வீரக நல்லூர், திண்டல் புதூர் முதலியன. நசியனூரில் மூவேந்த ஈசுவரன் கோயில் கொண்டுள்ளார். இதனால் சேர,சோழ,பாண்டியர் என்ற மூவேந்தருடனும் தொடர்புடையது என அறியலாம். உம்மத்தூர் நஞ்சராய உடையார் காலக் கல்வெட்டுக்கள் இங்கு கிடைத்துள்ளன.[3]

"கற்றவர் சூழ் நசியனூர்" என்னும் பழம் பாடல் இவ்வூர்ப் பெயரை உணர்த்தும். 700 ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட சென்னிமலைத் தலபுராணத்தில் நசையாபுரி[4] என்று பாடப்பட்டுள்ளன. பூந்துறைப் புராணத்தில் நசையாபுரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று நசையனூர் என வழங்கப்படுகிறது.

சாத்தம்பூரில் வல்லாள ஈசுவரன் கோயில் உண்டு. இது வேளாளரில் வண்ணக்கன் கூட்டத்தார்க்குக் காணியாகும். வண்ணக்கன் சாத்தனார் என்ற சங்கப் புலவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். இப்புலவர் பெயரால் இவ்வூர் பெயர் பெற்றிருக்க கூடும். சாத்தனூரில் காலப் பள்ளியான லக்காபுரம் என்ற சாசனத் தொடரில் இவ்வூர் பெயர் காணப்படுகிறது. காலிங்கராயன் வாய்க்கால் கரையில் இருந்த இவ்வூர் இன்று முற்றிலும் அழிந்து விட்டது. இன்று வல்லாள ஈசுவரன் கோயில் மட்டுமே உள்ளது.

சாத்தன் (ஐயனார்) வழிபாட்டால் அவ்வூர் பெயர் பெறக்கூடுமாயின் சாத்தன் வழிபாடு நடைமுறையில் காணப்படவில்லை.

அறச்சலூர்

இவ்வூரில் புற்றிடங் கொண்ட ஈசுவரர் கோயில் உண்டு. இங்குள்ள மூன்றாம் வீர வல்லாள தேவன் காலக் கல்வெட்டில் மேல்கரைப் பூந்துறை நாட்டு அறச்சலூர்[5] என்று குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வூரை அடுத்தள்ள நாகமலை சங்க[6] இலக்கியப் புகழ் பெற்றது. இம்மலையின் வடக்குச் சரிவில் உள்ள குகையொன்றில் சமணர் படுக்கைகள் உள்ளன. இங்கு பிராமிக் கல்வெட்டுக்கள்[7] உள்ளன. இவை கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

இவ்வூரில் அறச்சாலை அம்மன்கோயில் உண்டு.

தெய்வத்தின் பெயரால் அறச்சாலையூர் எனம் பெயர் பெற்றது. ஊசிப்பாளையம் செப்பேட்டில் பூந்துறை அர்ச்ச நகரம்[8] எனக் குறிக்கப்பட்டுள்ளது.

வீர நல்லூர்

சர்க்கார் பெரிய பாளையத்தில் உள்ள சூரலூர் சுந்தரபாண்டியன் காலத்தில் சுந்தரபாண்டியநல்லூர்[9] எனப் பெயர் மாற்றம் பெற்றது. வீரபாண்டியன் தன் காலத்தில் விஜயமங்கலத்தில் பாழ்பட்டுக் கிடந்த ஏரியைப் புதுப்பித்து வீரபாண்டியப் பேரேரி எனப் பெயரிட்டான். வீரபாண்டியன்நல்லூர் எனப் பாண்டியன் பெயரால் பெயர் பெற்று பின்னர் பாண்டியன் என்றபெயர் நீக்கம் பெற்று வீரநல்லூர் எனப் பெயர் பெற்றது எனலாம்.

சேமூர்

மிக்க சேமூர் என்ற ஊர்த் தொகைப் பாடல் கூறும் செயற்முறியான ஆறமாத்தூர் வல்லசதுர் வேதமங்கலம்[10] என்ற சாசனத் தொடரில் செயமுறியே சேமூர் என்றுள்ளது. இவ்வட்டத்தில் சின்னசேமூர்.பெரியசேமூர் மற்றும் பூந்துறை சேமூர் என மூன்று சேமூர் உண்டு. இதில் ஊர்தொகை குறிப்பது எந்த சேமூர் என்பது ஆய்வுக்குரியது. பெரியசேமூர் துணைக் காட்டில் நடுகல் உண்டு. அது தற்போது கலைமகள் கலைக்கூடத்தில் உள்ளது.

எழுமாத்தூர்

எழுமாதை என்கிறது ஊர்த் தொகைப்பாடல். சத்தியீசனை ஏழுமாதர்கள் வழிபட்டுச் சாபம் நீங்கினர். அதனால் ஏழுமாதர் ஊர் என்றாகி ஏழுமாத்தூர் எனப்பட்டது. தேன் கமழும் எழுமாதை, காஞ்சியிற் சீரறம் புரிய எழுமாத்தூர்[11] வாழை வனஞ்சூழும் எழுமாத்தூர்[12] என்று இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கும்.

எழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும் இடமே எழுமாத்தூர் என்பாரும் உண்டு.[13]

"கொத்து எழுமாத்தூர் வாழும் சாகாடன் சிற்றன்"[14] என்பது சாசனத் தொடர். இதில் நாடும் ஊரும் வாழும் மக்களின் குலமும் பெயரும் ஒருங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வூர் காடை குலத்தார்க்குக் காணியாகும்.

திண்டல்புதூர்

" மிக்கான திண்டல் புதூர்" என்பது ஊர்த் தொகைப் பாடல். இன்று திண்டல்,திண்டல்மலை,மேல்திண்டல்,கீழ்த்திண்டல் எனப் பெயர் பெற்றுள்ளது. இங்குள்ள முருகன் கோயில் இன்று புகழ்பெற்று விளங்குகிறது.

மங்கலம்

மங்கலம் எனும் துணைச் சொல் கொண்ட ஊர்கள் நான்கு உண்டு. கானமங்கலம்,பழமங்கலம், சத்திமங்கலம், மங்கலம் ஆகியவை.

காளமங்கலம்

காளமேகக் கவிஞர் இவ்வூரில் வசித்தார். ஆகையால் காளமங்கலம் என்று பெயர் பெற்றது.[15] என்பார் முத்துசாமிக்கோனார் முன்னம் மத்தியபுரி (நகர்) என்று பெயராக இருந்தது. இது தெய்வத்தின் பெயரால் ஏற்பட்டது. இன்று காளமங்கலம் என்று வழங்குகிறது. காளமங்கை என்பது காணிப்பாடல் ஆகும்.

பழமங்கலம்

பழமங்கை என்று கூறும் ஊர்த் தொகைப்பாடல். வாய்த்த புகழ்

மங்கலம்,[16] இன்று பழமங்கலம் என்றே வழங்குகிறது. வேட்டுவர்களுக்குக் காணியான இவ்வூரில் நடுகல் ஒன்றும் உண்டு. அதில் உள்ள பாடல் வருமாறு.

> **"வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்**
> **சாய்த்தமருள் வென்ற சயம் பெருகச்-சீர்த்தபுகழ்**
> **நிக்குவனம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்**
> **சொக்கனேந்த லேவுலகில் தான்"**

சத்தியமங்கலம்

இன்று கஸ்பாபேட்டை என்றும், பேட்டை என்றும் வழங்குகிறது. "பேட்டை" என்றால் புறநகர்ப் பகுதி அல்லது சந்தை என்பர். இன்று இவ்வூர் புறநகராகவும் தெரியவில்லை. சந்தையும் இங்கில்லை. தலத்தில் எழுந்தருளிய சத்தீசுரர் பெயருடன் மங்கலம் என்ற துணைச்சொல் கூட, சத்தீசுரமங்கலம் என்றாகி சத்தியமங்கலம் ஆயிற்று.

மொடவாண்டி பட்டா[17] என்ற பட்டயம் காடை குலேசன் தண்டிகைத்துரை என்ற தலைவன் காலத்தே (கி.பி.1794) எழுதப்பட்டது.

பார்மேவு பூந்தரசர் வாழு நாடு சத்தியமங்கை என்று பெயர் கூறப்பட்டுள்ளது. முடவர்கள் இங்கு தங்கி வாழத் தொடங்கியதால் மொடவாண்டி சத்தியமங்கலம் என மாறியது. "பூந்துறை சேர்ந்த புகழ் முடவாணர் வாழ்ந்திடுஞ் சத்தி மங்கை" என்பது பட்டயம்.

மங்கலம் என்பது பிராமணர் குடியிருப்புக்காகப் பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பெற்ற கிராமம் ஆகும். பின்னர் மங்கலம் பொதுப் பெயராகி நின்றது. சோழர் காலத்தில் சதுர்வேதி மங்கலங்கள் உண்டானதைக் கல்வெட்டுக்களால் அறியலாம்.

பூந்தறை நாட்டு மங்கலமான வீரபாண்டிய நல்லூர்[18] என இவ்வூர் ஈரோடு வட்டம் இராமநாதபுரம் கல்வெட்டுத்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓடை

மழை நீர், இயற்கையான ஓட்டத்தை உடையதே ஓடை எனப்படும். வீரநகர் ஈரோடு என்கிறது ஊர்த் தொகைப்பாடல்[19] பூந்துறை நாட்டுக் காஞ்சித்துண்டத்து ஈரோடான மூவேந்தச் சோழச் சதுர்வேதமங்கலம்[20] என்பது கல்வெட்டுத் தொடராகும். ஈரோடு என்னும் பெயர்க்காரணத்தைப் புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமான் தலை ஈரமானது (கங்கையைச் சடையில் கொண்டுள்ளார்) ஈரத்தலை என்பதற்கு வடமொழியில் ஆர்த்தர கபாலம் எனப்படும். வடமொழிபெயர்ப்பால் ஆர்த்தர கபாலபுரி எனப்பட்டது.

திருமாலின் வாயில் காவலர் மதுகைடபர். துருவாசமுனிவர் திருமாலைக்காணச் சென்றார். மதுகைடபர் துருவாச முனிவரைத் தடுத்தார். அம்முனிவர் சாபமிட மதுகைடபர் தலை வெடித்தது. வெடித்த தலையின் ஈர ஓடுகள் வீழ்ந்த இடம் ஈரோடாயிற்று. பெரிய ஓடு விழுந்த இடம் பேரோடு, சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு,வெண்ணிறமான ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்றும் பெயர்கள் உண்டாயின என்று புராணக் கருத்துடையார் கூறுவர்.

ஈரோட்டிற்கு மறந்தை, உறந்தை, மயிலை, கபாலபுரி, இருங்கோழி என்ற பெயர்கள் பூந்தறைப்புராணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தனை பெயர்கள் இருந்தாலும் ஈரோடு என்ற பெயரே வரலாற்றில் நிலை பெற்றுள்ளது.

ஈரோட்டில் இரண்டு ஓடைகள் (பெரும் பள்ளம், பிச்சைக்காரன்

பள்ளம்) ஓட, மத்தியில் அமைந்திருப்பதே ஈரோடையான ஈரோடு. ஈரோடு நகரின் முக்கிய பகுதி கோட்டை எனப்படும். இங்கிருந்த மண்கோட்டை 1878ஆம் ஆண்டு பஞ்ச நிவாரணம் பணியாக இடிக்கப்பட்டது. இப்பகுதி கோட்டையால் பெயர் பெற்றது.

மடை,குளம், குட்டை, குழி, பாளி, ஊத்து, கரை ஆகிய நீர்நிலைகளின் பெயர்களும் ஊருக்குப் பெயராயின. சமுத்திரம் என்ற வடசொல்லால் சென்ன சமுத்திரம், ரங்க சமுத்திரம் ஆகிய ஊர்ப் பெயர்கள் உண்டாயின. நீர்ப்பாசனத்திற்கென வெட்டப்பட்ட வாய்க்கால் பெயரும் ஊருக்காயிற்று (வாய்க்கால் மேட்டூர்).

வெள்ளோடு பெருந்துறை வட்டத்தில் உள்ளது. பேரோடு, சித்தோடு என்ற ஊர்களும் ஓடையால் பெயர் பெற்றன. பெரியதான ஓடை ஓடிய ஊர் பேரோடை என்றும், சிறியதான ஓடை ஓடிய ஊர் சித்தோடை என்றும் ஓடையால் பெயர் பெற்றன.

பள்ளி

முனிவர்கள் வாழ்ந்திருந்த இடம் பள்ளி எனப்படும். ஈசனார் எழுந்தருள்புரியும் இடமும் பள்ளி எனப்படும் என்பதை நாவுக்கரசு பாடலாலும் அறியலாம்.

"சிராப்பள்ளி சிவப்பள்ளி செம்பொன் பள்ளி
செழுநனி பள்ளி தவப்பள்ளி சீரார்
பரப்பள்ளி யென்றென்று பகர்வோர் எல்லாம்
பரலோகத் தீனிதாரப் பாலிப்பாரே"

அனுமன் பள்ளி

அனுமன் உட்பட்ட வானரப் படைகள் சீதையைத் தேடின. தேடிக் காணாது மனம் நொந்த அனுமன் இவ்வூரிடத்தே தங்கி

சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வேண்டினார். அதனால், சுவாமிக்கு அனுமேசுரர் என்று பெயர். அனுமன் தங்கி வழிபட்ட இடம் அனுமன் பள்ளி. இவ்வூரின் வடக்கில் ஓடும் ஓடை அனுமநதி . தற்போது இவ்வோடை குரங்கன் பள்ளம் என்று மக்களால் வழங்கப்படுகிறது.

அனுமநகர் என்று ஊர்த்தொகைப் பாடல் கூறும். நிருவாக வசதிக்காக அட்டவணை, முகாசி என்று அனுமன் பள்ளி இரு கிராமமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஈஞ்சம்பள்ளி

வேந்தர் மகிழ் ஈஞ்ச நகர் என்று ஊர்த் தொகைப் பாடலின் பெயர் பெற்றுள்ளது. வேளாளர் குலப் பெயரால் இவ்வூர் பெயர் பெற்றுள்ளது.

இன்று ஈஞ்சம்பள்ளி என்று கூறப்படுகிறது. கூட்டம் என்ற சொல் சங்கம் என்ற பொருள்படும். சான்றோர் பலர் கூடியிருந்த இடமே கூட்டப்பள்ளி.

கொளாநல்லி

கங்கநாட்டு மன்னன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துக் கலவரம் செய்து வந்தான். பாண்டியன் தன் படைகளை இவ்விடத்தே கூடச்செய்து குழாமாக்கிப் பயிற்சி கொடுத்தான். இங்குள்ள கோட்டையில் படைவீரர்கள் கூடியிருந்து பயிற்சி பெற்ற இடம் குழாநிலையாயிற்று (பதிற்றுப்பத்தில் குழாநிலை என்றகுறிப்பு உண்டு)[21] குழாநிலை இன்று கொளாநல்லியாக உள்ளது. புக்கானன் தமது குறிப்பில் கொளாநல்லியைக் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சி பெற்ற வீரர்கள் ஓடாநிலை (ஓடாபின் வாங்காது) யில் நின்று போரிட்ட இடமே ஓடா நிலையாகும். ஓடாநிலைக்

கோட்டையிலிருந்து தீரன் சின்னமலை தனியாட்சி செய்தான். அவர் திப்புவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கும் ஓடாநிலையில் நின்று போரிட்டதை நாமெல்லாம் அறிவோம்.

பூந்துறை

மேல்கரைப் பூந்துறை நாட்டின் தலைநகரம். நாவுக்கரசு தமது பாடலில் பலதுறைகளைக் கூறியுள்ளார்.

குயில் ஆலந்துறை சோற்றுத் துறை பூந்துறை
பெருந்துறையும் குரங்காடு துறையினோடு
மயிலாடுடந்துறை கடம்பந்துறை ஆவடுதுறை
மற்றும் துறையனைத்தும் வணங்குவோமே.
இத்துறைகளில் பூந்துறையும் ஒன்று.

சங்க இலக்கியத்தில் புன்னுறை[22] என்ற தலைவன் ஒருவன் காணப்படுகிறான். அத்தலைவன் பெயரால் பூந்துறை ஊர் உண்டானது. வேளாளப் பெருமக்கள் முதன் முதலில் புகுந்து உறைந்த இடமே பூந்துறையாகும்.[23] பூக்கள் மலிந்த துறைகளைக் கொண்ட ஊரே பூந்துறை.[24] உமையம்மையின் தவத்தைப் போற்றி இடப்பாகம் அளித்தபோது திருமேனி எங்கும் பூவண்ணத்தவராகக் காட்சி தந்தார்.[25] அதனால் இறைவனுக்குப் புட்பவனநாதர் என்ற பெயராயிற்று. அவ்விறைவன் பெயரே ஊருக்கும் பெயராயிற்று. இவ்வாறு பூந்தறை என்ற பெயருக்குப் பல விளக்கங்கள் எழுந்துள்ளன.

கிழான்பாடி

குழாநிலையில் பயிற்சி பெற்ற படைவீரர்கள் கிழான் என்ற பட்டமுடைய அல்லது பெயரையுடைய சேனாபதி படை வகுத்துப் பாடி

கொள்ளச் செய்த இடம் கிழான்பாடி[26] ஆயிற்று. கிழான்பாடி பாம்பண கவுண்டர் மீது பவானி பால பாரதி குறவஞ்சி நூல் செய்துள்ளார்.

இலவமலை

பவானி ஆற்றங்கரையில் உள்ளது. நல்லவளமான ஊர். அதனால் "சேர்ந்து மழை பெய்தருளும் இலவமழை" என்று பெருமைப்படுத்தப்பட்டுள்ளதை ஊர்த்தொகைப் பாடலால் அறியலாம்.

மொடக்குறிச்சி

குறிஞ்சி நிலத்தூர் குறிச்சி எனப்படும். "ஆண்மைகொள் முடக்குறிச்சி" என்பது ஊர்த்தொகைப்பாடல் ஆகும். முடத்திருமாறன்[27] என்னும் பாண்டியன் வென்று வரும் நாளில் அவன் படையினர் முடக்கி (தங்குதல்) யிருந்ததால் முடக்குறிச்சியாயிற்று. மொடக்குறிச்சி வரகீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டில் மொடக்குறிச்சியும், பூங்குறிச்சியும் உண்டு.

'பூங்குறிச்சி வரகீசுவரர் சந்நிதியில் ரங்கமண்டபம் கட்டி வைத்தது உபயம்' என்ற கல்வெட்டுத் தொடரில் பூங்குறிச்சி எனப்பட்டது. முன்னாளில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்கள் குடியிருந்த இடமே குறிச்சி. பிற்காலத்தில் பிறர் வாழும் ஊர்களும் குறிச்சி பெயர் பெற்றன.

குலவிளக்கு

பாண்டீசுரர் கோயில் உண்டு. இவ்வூர்க்கு வேட்டுவர்களே காணியாளர்.அவர்கள் குலப்பிரிவில் பாண்டிய (வேட்டுவன்) ர் குலமும் ஒன்று. அப்பாண்டிய வேட்டுவர் குலம் விளங்க ஏற்பட்ட ஊரே குலவிளக்கு. இன்றும் இவ்வூரில் வேட்டுவர்களே வாழ்ந்து வருகின்றனர்.

விளக்கேத்தி

"பெரியண்ண வேணாடனை காகம், விளக்கேத்தியில் கனக மிகுங்கொற்றையில் பிள்ளை வேடனை"[28] எனும் மெய்க்கீர்த்தியில் வேணாவுடையாருக்கும் விளக்கேத்திக்கும் உள்ள தொடர்பு வெளிப்படுகிறது.

காகம்

காகம் சனீசுவரனைக் குறித்துத் தவம் செய்து சனீசுவரனுக்கு வாகனமாயிற்று. காகம் தவம் செய்த இடம் காகம் என்பது கதை. சங்க காலத்தில் காக்கைப் பாடினியார், நச்செள்ளையார் என்ற புலவர் பதிற்றுப்பத்தைப்[29] பாடியுள்ளார். அப்புலவர் அவ்வூரினர் என்பது பெயரால் பெறப்படும் செய்தியாகும்.

ஈரோடு வட்டத்தில் மேல்கரை அரையநாடு என்பது கிழக்கில் காவேரியாற்றையும், மேற்கில் அறச்சாலையூர் மலைச்சரிவையும். வடக்கில் பூந்துறை நாட்டையும், தெற்கில் நொய்யலாற்றையும் கொண்டு விளங்குகிறது.

என்னிலமெனுந்தலைசை வெங்கனகர் அஞ்சூர்
இம்பர் மகிழ் மொஞ்சனூரும்
இன்பாக வளர் கொல்லங்கோயில் மிகுகொந்தளம்
எழிலாக வரு கரசையும்
மன்னவருறும் விதரி எழுநூற்று மங்கலம்
வண்மையிளவரச நல்லூர்
வள்ளிபுரம் கார்வளியினேடு துக்காச்சியும்
வடிவுடைய நகர் ஊஞ்சலூர்
முன்னிலைமை யாகத்திருக்காடு துறையுடன்
முத்தமிழர் கொண்டாடவே

முற்றுமே யிந்திரன் பதிபோல் விளங்கியே
மொயம் பெறவே தழைத்து
அன்னவயல் சூழ்கதலி தென்னை மாதுளை புன்னை
யரசு நிலை பூகமாதி
அரியதரு நீடு பூஞ்சோலை சூழ்ந்தோருக்குமேல்
அரய நன்னாடு தானே

மேல்கரை அரைய நாட்டில் ஊர் என முடியும் ஊர்கள் ஐந்துள்ளன. தலைய நல்லூர், வெங்கம்பூர், அஞ்சூர், மொஞ்சனூர், இளவரச நல்லூர் என்பன.

தலைய நல்லூர்

உலகபுகழ் தலைய நல்லூர்[30] இன்று சிவகிரி என்ற வழங்கி வருகின்றது. சிவகிரி நக்கீசுவரர் கோயில் தெற்குச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டு ஒன்றில் தலை நல்லூர் என்றே குறிக்கிறது. வேலாயுதசாமி கோயிலில் உள்ள கல்வெட்டில் சிவகிரி என்ற குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் நடுகல் ஒன்றில் "தலையநல்லூர் கிழங்க வேட்டுவரில் கிழங்கன், பெரிய கிழங்கன்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

வெங்கம்பூர்

ஊர்த்தொகைப் பாடலில் வெங்க நகர் என்றே கூறப் பட்டுள்ளது. வெங்களம் என்றால் போர்க்களம் என்பது பொருள். குழாநிலை, கிழான்பாடி ஆகிய இடங்களில் படைகள் இருந்ததை அறிந்தோம். அப்படைகள் அவ்விடத்தே போரிட்டிருக்கக்கூடும். வெங்களம் + ஊர் எனச் சேரும்போது வெங்களம்பூர் ஆதல்கூடும். வீரபாண்டியன் காலக் கல்வெட்டில் மேல்கரை அரையநாட்டு இவ்வூரில் அழகன் காளி என்பவன் இராசேந்திரச் சோழன் காலத்தில் நடைபெற்ற பூசலில் காலமானான் என்பதை நடுகல்லால் அறியலாம், எழுநூற்று மங்கை என்றும் கூறுவர்.[35]

வடிவுடைய மங்கலம்

வடுவுடைய நகர் என்று ஊர்த் தொகைப் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. தெய்வத்தின் பெயரால் பெயர் பெறக்கூடும். திருப்பாண்டிக் கொடுமுடியில் பதிகம் பாடிய திருஞானசம்மந்தரும் "வடிவுடைய மங்கை தன்னோடு மணம் படும்கொள்கையினரும்" என்று தெய்வீகத்தைப் புகழ்ந்துள்ளார். "வடிவுடைய மங்கையும்" [36] என்று சாசனத் தொடரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லன் கோயில்

கொல்லத் தொழில் செய்வோர் கொல்லன் எனும் சாதியார். கோயில் என்பதற்கு வாழுமிடம் என்ற பொருளும் உண்டு. கொல்லச் சாதியினர் வாழுமிடம் கொல்லன் கோயிலாம்.

கொந்தளம்

இச் சொல்லுக்கு எல்லா சௌகரியங்களும் உள்ள இடம்[37] என்பது பொருள். மக்கள் வாழ எல்லாச் சௌகரியங்களும் உடையதானபடியால் இப்பெயர் பெற்றது.

வல்லிபுரம்

நீரும் வயலும் சூழ்ந்த ஊர் 'புரம்'[38] எனப்படும். சாசனத்தொடரும் வள்ளிபுரம்[39] என்றே குறிப்பிட்டுள்ளது. ''வல்லிபுரத்துச் சாத்தந்தை கூட்டம் பெரியண கவுண்டன்"[40] என்ற தொடரில் ஊரும் ஊருக்குடையவர் பெயரும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

கொடுமுடி

கொடுமுடி ஒரு வீரன். குறும்பொறை மலைக்குக்

கிழக்கேயுள்ள ஆமூரில் வாழ்ந்தவன். பெரிய யானைப் படையுடன் வந்தெதிர்த்த சேரனை வென்று தன் ஆமூரைக் காத்தவன்.[41] இத்தலைவன் பெயரால் 'கொடுமுடி' என்னும் பெயர் பெற்றது.

கொடுமுடி, கொங்கு நாட்டில் உள்ள தலங்களில் ஒன்று. தேவாரம் பாடிய மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

" பரந்திழி காவிரிப் பாங்கர்ப்
பாண்டிக் கொடு முடியாரே"

என்று பாடினார் திருஞான சம்பந்தர். நாவுக்கரசு பாண்டிக் கொடுமுடி, திருக்கொடுமுடி என்று தமது திருக்குறுந்தொகையில் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் "நல்லவர் தொழுதேத்துஞ் சீர்கறையூரில் பாண்டிக் கொடுமுடி" எனத் தமது பாடலில் கறையூர் என்றும் பாண்டிக் கொடுமுடி என்றும் கூறியுள்ளார்.

கொங்கினில் பொன்னித் தென்கரைக் கரையூர்க் கொடுமுடி[42] நெடும்புரிசை பாண்டிக் கொடுமுடி[43] என்று பெயர் பெற்றமை காண்க. 10.11.1800 ஆம் ஆண்டு புக்கானன் தமது குறிப்பில் கொடுமுடியைக் குறிப்பிட்டுள்ளார்.

வெட்சி நிரை கவர்தல்,மீட்டல் கரந்தையாகும்,ஆநிரை மீட்ட இடம் கரத்தூர் எனப்பட்டது. குறவனின் பாங்கன் குளுவன். அக்குளுவன் பெயரால் குளுவன் ஊர், குளுவலூர் ஆகிப் பின்னர் குழுவூராக விளங்குகிறது. குப்பிச்சிக் கவுண்டனூர் என்பது பூந்துறை நாட்டில் வாழ்ந்த தோள்வலி மிக்க தலைவன் பெயரால் ஏற்பட்ட ஊராகும். குப்பிச்சி என்ற தலைவனின் வீரதீரச் செயல்களைப் பற்றி கொங்கு மண்டலச் சதகம் [44] குறிப்பிட்டுள்ளது. காவிரியின் கரையில் அமைந்த பாசூர் பழமையும்,பெருமையும் உடையது. முதுமக்கள் தாழியும், புதைகுழிகளும் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தேவாரப் பாடல் பெற்ற பாசூர் மரத்தாற் பெயர் பெற்றதாகும்.[45] பாசூர் காப்பில்லாத கிராமம் என்பது புக்கானன் குறிப்பு.

காலப்பள்ளியான லக்காபுரம் சாசனத் தொடரில் காணப்படும் ஊர்,[46] வெள்ளோட்டை அடுத்துக் கிழக்கேயுள்ளது கனகபுரம். இவ்வூரில் சிறு குன்றும், அடுத்துக் குளமும் உண்டு. இக்குன்றில் கல்வெட்டுண்டு. தற்போதுள்ள ஊருக்குத் தெற்கில் இருப்பு சிவப்பு நிற ஓடுகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. முதுமக்கள் தாழியும், கல்வட்டங்கள் பலவும் இங்குண்டு. தற்போது விளைநிலமாகக் காட்சி தருகிறது. மதுரைத் திருமலை நாயக்கருக்கும், மைசூர் மன்னருக்கும் நடந்த மூக்கறுப்புப் போரில் (கி.பி.1670) மதுரை மன்னர்கள் இராமநாதபுரத்து மறவர்களைக் காவல் படையாகக் கொண்டு கொங்கு நாட்டில் தங்கினர். அம்மறவர் படையினர் ஈரோடு அருகே உள்ள ஊரில் தங்கியதால் இராமநாதபுரம் [47] என்று பெயர் பெற்றது. கதிரம்பட்டிக்குத் தெற்கில் உள்ள பார வலசை அடுத்துள்ள காடுகளில் கல்வட்டங்களும், முதுமக்கள் தாழியும் கிடைக்கின்றன. இது பழமையான ஊர் என்பது ஆய்வுக்குரியது. காங்கயம் பாளையத்தில் 11 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு கிடைத்துள்ளது.[48] காவிரியின் நடுவில் உள்ள நாட்டாற்றீசுவரன் கோவில் மிகச் சிறப்பு வாய்ந்தது.

அடிக்குறிப்புகள்

1. பட்டினப் பாலை,வரி.269-270
2. மதுரைக் காஞ்சி,வரி 156
3. ஏ.ஆர்.ஈ.பி., 1962-63 நெ.227 முதல் 233 வரை
4. சென்னிமலைத் தலபுராணம் பாடல் 34
5. ஏ.ஆர்.ஈ.பி. 1961-62 நெ.278

6. சிறுபாணாற்றுப் படை வரி 108

7. ஏ.ஆர்.ஈ.பி., 1961-62 நெ.280

8. தேனோலை, 17-1976, பக்கம் 18

9. ஏ.ஆர்.ஈ.பி. 1908 நெ.304

10. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்

11. சென்னிமலைத் தலபுராணம் பாட்டு 26

12. நாட்டுப் பாடல்

13. உ.வே.சாமிநாதையர் குறிப்பு

14. செங்கம் நடுகற்கள், எண் 1971/5

15. கொங்குநாடு, பக்கம் 217, முத்துசாமி கோனார்

16. பழமங்கலம் நடுகல்

17. தேனோலை, 14 அக்டோபர் 1977

18. கலைமகள் கலைக்கூடம்,பக்கம் 197, புலவர் செ.இராசு.

19. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் சா.246

20. கொங்கு நாடு, முத்துசாமி கோனார்

21. கொங்கு நாடு, முத்துசாமி கோனார்

22. அகநானூறு, பாட்டு 44

23. கொங்கு வேளாளர் புராண வரலாறு, பக்கம் 221

24. மேழிவிளக்கம் 1-4

25. பூந்துறைப் புராணம்: காளியண்ண புலவர்

26. கொங்குநாடு, பக்கம் 208, முத்துசாமி கோனார்

27. நற்றிணை பாட்டு 105,228

28. வேணாடர் மெய்க்கீர்த்தி

29. பதிற்றுப்பத்து, 6 ஆம் பத்து

30. பழம்பாடல்

31. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 195

32. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 251

33. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 254

34. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 251

35. பழம்பாடல்

36. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 251

37. ஆனந்த விகடன் அகராதி

38. சூடாமணி நிகண்டு

39. தென்னியந்தியக் கோயிற் சாசனங்கள் சா. 251

40. தேனோலை 12/1976

41. கலைக்களஞ்சியம்

42. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்

43. வேள்விக் குடிச் செப்போடு.

காங்கயம் வட்டம்

கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் காங்கய நாடும் ஒன்று. "காங்கய நாட்டுக் காங்கயத்து"[1] - என்று சாசனத் தொடர் கூறும். கலியுக சகாப்தம் 4344 (கி.பி.1243) காலத்துக் காரையூர்ச் செப்பேடு "காங்கேய நாடு பன்னிரெண்டு கிராமத்துக்கு"[2] என்று நாட்டின் பெயருடன் இந்நாட்டிற்குரிய பன்னிரெண்டு கிராமங்களையும் குறிப்பிடுகிறது.

ஊர்த் தொகைப்பாடலில் பதினான்கு கிராமங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

"காங்கயத்துடன் வல்லிதன் காடையூர்
கந்தர்மேவிய பட்டாலி மீரனூர்
ஓங்குபாற்பதி நற்பரஞ் சேர்வளி
யுற்றகாரை மருதுறை வெண்முத்தூர்
தேங்குகண்ண புரம்வெள்ளை கோவிலுஞ்
சிறந்தவாறு தொழுவாலாம் பாடியும்
தீங்கில்லாத கங்காகுல நாட்டார் செழிக்கும்
காங்கய நாடெங்கள் நாடே"

பெ.மா.உ.பெ. 7

இப்பாடலில் காங்கயம் முதல் ஊராக உள்ளது. இதுவே இந்நாட்டின் தலைநகரம். தலைநகரின் பெயரே நாட்டுக்கும் பெயராக அமைந்தது. காங்கய நாட்டின் ஊர்ப் பெயர்கள் இரச்சல், ஊர், பட்டாலி, பதி. வளி(பள்ளி) காரை. துறை, புரம், கோவில். தொழு, பாடி என்ற துணைச் சொற்களைக் கொண்டு அமைந்துள்ளன. பொங்கலூர் நாட்டைச் சேர்ந்த கத்தாங்கண்ணியும் காங்கயம் வட்டத்துள் சேர்ந்துள்ளது. தென்கரை நாட்டைச் சேர்ந்த ஊதியூர் இதனுள் அடங்கும்.

சிதம்பரப் பல்லவராயன் ஒட்டியரை வெற்றிகண்ட கொங்கு நாட்டுத் தலைவன். பல்லவராய மரபினர் சோழனுக்கு முடிசூட்டும் பெருமை பெற்றவர்கள். அதைக் குறிப்பிடும் போது "மதியூகி சிற்றெழுந்தூர் சிங்கையம் பதி" என காங்கயம் பெயர் பெற்றது.

காங்கய நாட்டில் "ஊர்" என்ற துணைச் சொல்லோடு முடியும் ஊர்கள் காடையூர், கீரனூர்,காரையூர்,முத்தூர் என்பன. ஊதியூர் தென்கரை நாட்டைச் சேந்தது.

"மாடம் ஓங்கிய மல்லல் முதூர்"[3]
"மல்லல் பேரூர்மடியின் மடியா"[4]

என்று கூறும்படி மூதூர்களோ.பேரூர்களோ பெரியார் மாவட்டத்தில் இல்லை. எனினும் ஊர் எனும் துணைச் சொல் கொண்ட ஊர்கள் உண்டு.மருத நிலத்து ஊர்களே பேரூர்,மூதூர் எனத் தொல்காப்பியம் குறிப்பிடும். நம்பியகப் பொருளில் மருதநிலத்து ஊர்கள் 'ஊர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காடையூர்

'காடை' என்பது பறவையின் பெயர். காடை என்பது ...ருக்குரிய குலப்பெயரில் ஒன்று. காடை என்ற பறவையின்

பெயரே "ஊ" என்னும் பொதுக்கூறு. இப்பெயரும் பறவையாகிய காடைக் குருவியைத்தான் குறிப்பிடும். இதில் சிறப்பாக ஏற்பட்டது காடையூர். பெற்று காடை+ஊர்=காடையூர் என்றாலும் கூடும். இம்மரபினர் வாழ்ந்ததன் காரணமாக "காடைநகர் முதலி மன்றாடியே"[5] என்பதால் அறியலாம். "காங்கேய நாட்டுக் காடையூர்"[6] என்பது சாசனம் குறிப்பிடும் பெயர். கல்வெட்டில் குறிப்பிடப்படும் காடவூர் > காடையூர் எனப்பெயர் பெற்றது.

காரையூர்

'காரை' என்பது செடியின் பெயர். உற்றகாரை[7] காரைமன் உத்தமச்சோழன்[8] எனும் சான்றுகள் காரை என்பதே ஊருக்குப் பெயராயிருந்தது என்பதைக் காட்டும். காங்கய நாட்டுக் காரையூர்[9] என்பது சாசனம். "காரைப்பதி"[10] காரைகர்[11] என்றும் பெயர் பெற்றது. காரையூரான திரிபுவன மாதேவிபுரம்[12] என்றும் பெயர் பெற்றதாகும்.

கீரனூர்

'கீரன்' என்ற ஊர்ப் பெயர் தமிழ் நாட்டில் பல உண்டு. கீரன் என்னும் பெயருக்குப் பெரும்புகழ் அளித்தவர் நக்கீரர். குடவாயில் கீரத்தனார் பல்லடம் வட்டம் குடவாயிலைச் சேர்ந்தவர்.[13] கீரன் என்பது கொங்கு வேளாளர் குலப்பெயர்களில் ஒன்று. புலவர் பெயருக்கும் கொங்கு வேளாளர் குலப்பெயருக்கும் புகழ் தேடித் தந்தாற்போன்று அமைந்ததே கீரனூர். காங்கய நாட்டுக்கீரனூர்[14] என்பது சாசனம். தென் பொங்கலூர் நாட்டிலும் கீரனூர் உணடு. அருணகிரிநாதர் இவ்வூரைத் தமது திருப்புகழில் பாடியுள்ளார்.

முத்தூர்

வெண்முத்தூர்[15]. காங்கய நாட்டு முத்தூர்[16]. என்று வழங்குகிறது ஆமணக்கு விதையை முத்து என்பர். காடுகளைச் சூழ்ந்த

இவ்வூர் ஆமணக்கின் விதையான முத்து என்ற அடிப்படையில் முத்தூர் என வழங்கியது.முத்து நவமணிகளில் ஒன்று. வெண்முத்தூர் என்ற சிறப்பால் நவமணிகளில் ஒன்றான முத்து அடியாக முத்தூர் என வழங்கிய தென்றும் கொள்க. தாராபுரம் வட்டத்திலும் முத்தூர் உண்டு.

வல்லியிரச்சல்

வல்லி,[17] வள்ளியிறச்சில்,[18] வள்ளியரச்சல்,[19] எனும் ராஜகேசரிபுரம் என்ற பெயர்களைப் பெற்றது. "வள்ளியரச்சல்"[20] யில்லை கூட்டத்தில் தொண்டமாக்கவுண்டன் என்ற தொடரில் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்து. மாந்தீசுவரர் என்பது இவ்வூர் சிவபெருமானின் பெயர்.இறைவன் பெயரால் மாந்தைநகர்,மாந்தைபுரி எனப் பெயர் பெற்றது. "கொங்குறாயன் வந்து மாந்தபுரத்தில்"[21] என்றும், "வீரபாண்டிய தேவர்க்கு"ஆண்டு 12-வது என்று கல்வெட்டுக்களில் வழங்கும்.

பட்டாலி

"கந்தர் மேவிய பட்டாலி"[22] யான இவ்வூர் முருகன் மீது திருப்புகழ் பாடப்பட்டுள்ளது. இவ்வூர் முற்றிலும் அழிந்த நிலையில் பால்வண்ண நாதர் ஒளிவீசி நிற்கிறார். பட்டாலி [23] , பட்டாலியூர்[24] என்று சாசனங்கள் கூறா நிற்கும் "தயவு பெரு பட்டாளி" என்பது அவ்வூர் பற்றிய நாட்டுப் பாடலாகும். இவ்வூர் இன்று அரசம்பாளையம் என்ற அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

பார்ப்பதி

ஓங்கு பார்ப்பதி [25] காங்கய நாட்டில் பார்ப்பதி [26] என்று வழங்கிய இவ்வூர் இன்று பார்ப்பிணி என வழங்குகிறது. பார்ப்பதியூர்[27] என்றும்

பெயர் பெற்றதுண்டு. "பார்வதிபுரம் என்னும் பாப்பிணி கிராமம்" என்றும் வழங்கும். பதி என்றும் துணைச்சொல் கொண்டு முடியும் ஊராகும். பார்ப்பதியின் பழைய பெயர் மடவிளாகம்[28] ஆகும்.

பரஞ்சேர் வளி

பரஞ்சேர் வழி, பரஞ்சேர் பள்ளி எனப்படும். இவ்வூர் பறஞ்சொற்பள்ளி[29] பறஞ்செறிவள்ளி, பறஞ்செறுவள்ளி என்றும் கூறப்படும். "நற்பரஞ்சேர் வழி" என்று சிவமலைக் குறவஞ்சி கூறும். "நலமை திகழ் தென்பரஞ்சைப் பதி" என்று தனிப்பாடல் குறிப்பிடும். பரஞ்சேர் பள்ளி எனக் கொண்டால் சமணக்கோயில் உள்ள இடமாகும். சமணர்கள் வாழ்திருந்த இடம் பள்ளி எனப்படும். மத்தியபுரி அல்லது நட்டூர் என்றும் பெயருண்டு.

மருதுறை

துறை என்பது நீர்த் துறையைக் குறிப்பதாகும். இவ்வூர் நொய்யலாற்றங்கரையில் அமைந்துள்ள ஊர். ஆற்றின் மறுபக்கம் உடையவர் மருதுறை என்ற குறிப்பிடப் பெயர் பெறுவது. காங்கய நாட்டுக்கு மறுதுறையில்[30] என்பது சாசனம்[31]. கூடிய மறுதுறையூர் என்றும் புகழப் பெற்றது. மருதூர் திருப்புவன மாதேவிபுரம் என்றும் வழங்கி வந்துள்ளது.

கண்ணபுரம்

கண்ணனை என்ற கண்ணபுரம் தேங்கு கண்ணபுரம் எனப்பட்டது. இவ்வூர் திருப்புகழ் பாடல் பெற்ற தலமாகும். கண்ணன் குழல் ஊதிப் பசுக் கூட்டங்களைக் கூட்டினாற்போல ஆண்டுக்கொரு முறை நடைபெறும் தேர்த்திருவிழாவில் பசுக்கூட்டங்கள் கூடும் மாட்டுச் சந்தை இவ்வூரில் நடைபெறுகிறது. கண்ணன் பெயரால் உண்டான

முல்லைநிலப்பகுதி (புரம்-மருதநிலத்தூர்) கண்ணபுரமாம். வில்லவன் மாதேவி என்கிற விக்கிரம் சோழபுரம்[32] என்றும் பெயர் உண்டு.

வெள்ளகோயில்

உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் இவ்வூரை வெள்ளக்கல்[33] என்று குறிப்பிட்டுள்ளார். மேட்டுப்பாங்கான இவ்வூரைச் சுற்றி வெண்நிறமான வெங்கக்கல் என்ற கற்கள் ஏராளமாகத் தென்படுதல் கருதியே வெள்ளக்கல் எனக் கூறப்பட்டது. சாசனம் வெள்ளகோவில்[34] என்று குறிப்பிட்டுள்ளது. சோழிசுரர் என்று அழைக்கப்படும் இக்கோயில் சோழர்காலச் செல்வாக்கைத் தெளிவாக்கும். காலகப்பள்ளி,[35] சோழ்ஸ்வர நல்லூர்[36] என்றும் பெயர்.

ஆறுதொழு

பட்டி மாடுகளை அடைக்குமிடம் "தொழு" எனப்படும். ஆகெழு கொங்கமான கொங்குநாட்டில் தொழுவங்கள் பல உண்டு. இப்பசுக் கூட்டங்கள் ஒருங்கே கட்டப்படும் இடம் "தொழு" அல்லது "தொழுவம்" எனப்படும். ஒரு காலத்து அறுவருக்குரிய பசுக்கூட்டங்கள் ஓரிடத்தே அடைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனால் இவ்வூர் சிறந்த ஆறுதொழு[37] எனக் கூறப்பட்டது.

ஆலாம்பாடி

"புறவம் புறம்பணை புறவணி முல்லை அந்நிலத்தூர்ப் பாடி யென்ப"[38] என்று முல்லை நிலத்தூர் குறிப்பிடப்படும். ஆலமரத்தடியாகக் கொண்டமைந்த முல்லை நிலத்தூராகலாம். போர் வீரர்கள் ஆலமரத்தடியில் பாடி வீடு கொண்டிருந்த இடம் ஆகியதால் ஆலாம்பாடி எனப்பட்டது. ஆலாம்பாடி, ஆலம்பாடியூர் என்று வழங்கியதைக் கல்வெட்டுக்களால் அறியலாகும்.

கத்தான் கண்ணி

பொங்கலூர் நாட்டைச் சேர்ந்தது. கத்தாங்கண்ணி[39] என்பது கல்வெட்டுத் தொடராகும். மேவு கற்றான் காணி[40] என்றுரைக்கும் காணி நூல் பாடல். இவ்வூரானது வீரசோழ வள நாட்டு கற்றாயக் கண்ணியான வீரசோழ சதுர் வேதமங்கலம் [41] என்று பெயர் பெற்றது.

ஊதியூர்

தென்கரை நாட்டைச் சேர்ந்த ஊதியூரில் கொங்கணச் சித்தர் வாழ்ந்திருந்தார். கொங்கணச் சித்தர் முன்செம் பொன் செய்து மாற்றுரை கண்டது பொன்னூதியூர் எனப்பட்டது. ஊதி நகர் சீருருந் தென்கரை நாடு எனப்பட்டது. ஊதியூர் இவ்வூர்ப் பக்கத்தே உள்ள மலை பொன்னூதி மலை எனப்பட்டது. சங்க காலத்தே ஊதியம் எனப்பட்ட மலை இதுவேயாகும். நங்கை குகை மண் குழியும் நல்வளஞ்சேர் பொன்னூதி தங்கமுயர் ஊதியூர் தன்பதியும்[42] – இதில் குகை மண்குழி பொன்னூதி மலை, ஊதியூர் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

படியூர்

படியூர் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஊர். இவ்வூர்ப்பெயர் கொங்கு மண்டலச் சதகத்தில் இடம் பெறாமல் போனது விந்தையாகவே உள்ளது. படியூரில் நீலநீற வைரக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. படியூரில் கடல்நிற வைரக்கற்கள் உள்ளன என்று மேல்நாட்டறிஞர் பிளைனி (கி.பி.24-79) குறிப்பிட்டுள்ளார். கி.பி. முதல் நூற்றாண்டிலேயே சிறப்புற்று விளங்கியது என்பதை இதனால் அறியலாம். வைரப் படிகம் கிடைக்கும் 'ஊர் படிகம் ஊர்' படிகவூராகி படியூராகி இருத்தல் வேண்டும்.

மயில்ரங்கம்

ஆற்றின் இடைக்குறை அரங்கம் எனப்பட்டது. அமராவதி ஆற்றின் கரையில் மயில் ஆடுவதற்கேற்ற அரங்கமாயிருந்தது.

இவ்வூர் வைத்தியநாதசுவாமி கோயிலில் கிருஷ்ண தேவராயன் காலக் (கலி 4633) கல்வெட்டுக்கள்[43] உண்டு.

நிழலி

"நிழலி மிட்டா" என்பது சாசனப் பெயர். "கொடுவாய் கிராமம் நிழலி" என்பதும் சாசனத் தொடராகும். நிழலியில்[44] இருந்த சின்னய்ய கவுண்டன் கொடுவாய் நாகீசுரமுடையாருக்குக் கற்கோயில் கட்டினான். நிழல் என்றால் இடம், சாயை என்று பொருள்படும். நிழல் என்பதே நிழலி ஆகி வழக்கில் நெழலி என வழங்கப்படுகிறது.

வானக்காட்டுப்பள்ளி

'பள்ளி' சமணர் வாழுமிடம். இவ்வூர் பரஞ்சேர் பள்ளி கிராமத்தில் உள்ளது. வானவன் சேரமன்னர்களைக் குறிக்கும். வானவன் பெயரால் ஏற்பட்ட காட்டில் சமணக் குடியிருப்பு வானக் காட்டுப்பள்ளி ஆகும்.

அடிக்குறிப்புகள்

1. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள். சா. 300
2. காரையூர்ச் செப்பேடு
3. நெடுநல் வாடை, வரி .29
4. பெரும்பாணாற்றுப் படை, வரி.254
5. முதலிக் காமிண்டன் முடி சூட்டுப் படலம்
6. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.315

7. கொங்கு மண்டலச் சதகம், ஊர்த் தொகைப் பாடல்

8. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 55, வாலசுந்தரக் கவிஞர்

9. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் 1223

10. பழம் பாடல்

11. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 58, வாலசுந்தரக் கவிஞர்

12. A.R.E.P.1920,No.237

13. கொங்கு நாடு, பக்கம் 109, அ.மு.குழந்தை

14. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 301, 302

15. கொங்கு மண்டலச் சதகம், ஊர்த் தொகைப் பாடல்

16. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 336

17. கொங்குமண்டலச் சதகம், ஊர்த் தொகைப் பாடல்

18. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 329,1223

19. A.R.E.P.1920,No.619

20. பாளையப்பட்டுகளின் வம்சாவளி- தொகுதி 1, பக்கம் 102.

21. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் சா.1223.

22. கொங்கு மண்டலச் சதகம், ஊர்த் தொகைப் பாடல்.

23. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 300,317

24. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.311.

25. கொங்கு மண்டலச் சதகம், ஊர்த் தொகைப் பாடல்.

26. சிவன்மலைக் குறவஞ்சி

27. கொங்கு மண்டலச் சதகம், பாட்டு 4, வாலசுந்தரக் கவிஞர்

28. A.R.278/286/1920.

29. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.1223,269,318.

30. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 310,1223

31. கொடுமணல் இலக்கியங்கள்-கந்தசாமி காதல் பாட்டு 427 புலவர் செ.இராசு.

32. A.R.200,218,224/1920.

33. A.R.E.P.1920,No.216

34. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 330

35. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பக்கம். 297.

36. A.R.E.P.187/1920

37. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 1155, சா.320.

38. பிங்கல நிகண்டு

39. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.1155

40. காணிநூல் பாடல் 27

41. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.313

42. இரத்தினமூர்த்தி விறலிவிடு தூது (ஏட்டுப் பிரதி

திருப்பூர் பழனிச்சாமி புலவர்

43. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.303,1183

44. A.R.E.P.1920,No.112.

கோபி வட்டம்

சத்தி வட்டம் பின்னர் கோபிச்செட்டிப்பாளையம் வட்டம் ஆனது. மீண்டும் கோபி வட்டம், சத்தியமங்கலம் வட்டம் என இரண்டு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்றைய கோபி வட்டத்தில் காஞ்சிக்கோயில்நாடு, ஒடுவங்க நாடு,குறுப்பு நாடு ஆகிய நாடுகளின் பகுதிகள் அடங்கியுள்ளன.

காஞ்சிக்கோயில் நாடு

காஞ்கிக்கோயில் நாட்டில் 12 ஊர்கள் உள்ளன என்பதைக் கொங்கு மண்டலச் சதக ஊர்த்தொகைப் பாடலால் அறியலாம். அவற்றுள் 8 ஊர்கள் மட்டுமே கோபி வட்டத்தில் உள்ளன. எட்டு ஊர்ப் பெயர்களில் ஆறு ஊர்ப் பெயர்கள் "ஊர்" எனும் துணைச்சொல் கொண்டு முடிவனவாகும். கூகலூர்,பாரியூர்,பெருந்தலையூர், முடச்சூர், கொளப்பலூர், அயிலூர் என்பன "ஊர்" எனும் துணைச்சொல் கொண்டு முடிவனவாகும். அழுக்குழி,கலிங்கயம் இரண்டும் குழி, கயம் எனும் துணைச் சொல் கொண்டு முடிந்தன. "குழி" என்பது பள்ளம் அல்லது நீர்நிலை எனப்படும். அழுக்குழிப் பக்கம், தடப்பள்ளி வாய்க்கால், சோழமாதேவிக் கரை, நரிப்பள்ளம் ஆகிய நீர் நிலைகளை

அடுத்து ஏற்பட்ட ஊரே அழுக்குழி ஆயிற்று. இவ்வூர் சந்தையில் சாவான் கோயில் உள்ளது. கலிங்கு என்பது நீர்நிலையில் இருந்து நீரிழிந்து செல்லும் பாதையாகும். கயம் என்பது நீர் நிலை. நீர் நிலைக் கலிங்கின் அருகில் ஏற்பட்ட ஊர் கலிங்கயம் ஆகும்.

கூவல் என்பது கிணறு எனப் பொருள்படும். பாசனத்திற்கென முதலில் கூவல் (கிணறு) தோண்டப்பட்டது. அங்கே குடியேறியபோது கூவலை அடுத்துள்ள ஊர் கூவலூர் எனப்பட்டது. சாசனத்தில் கூவலூர்[1] என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது கூகலூர் என வழங்கி வருகிறது. இவ்வூரில் எழுந்தருளிய இறைவன் பெயர் நட்டூருடைய நாயனார் எனப்படும். இவ்வூர், இறைவன் பெயரால் நட்டூர் என்றும் பெயர் பெற்றது அல்லது உடல் ஊனத்தைக் குறிக்கும். முடம்பட்டபின் ஒருவன் வாழ்ந்த ஊர் முடச்சூர் எனப்பட்டது. தற்போது மொடச்சூர் என வழங்கப்படுகிறது. முடச்சியூர் என்பதும் மொடச்சூரேயாகும் . குளம் என்பது கொளம் என வழக்கில் வழங்கும் சொல். முதலாவது ஏற்பட்ட குளத்தின் பால் (பக்கத்தில்) ஏற்பட்ட ஊர். குளப்பால் ஊர் எனப்பட்டு பேச்சு வழக்கில் கொளப்பலூர் எனப்பட்டது.அயில் என்பது கோரையைக் குறிக்கும். கோரை நிறைந்த இடம் அழிக்கப்பட்டு ஏற்பட்ட ஊர் அயிலூர் ஆனது. அயிலூர் தாளுன்றியான விக்கிரம சோழபுரம்[2] எனப்பட்டது. குறுப்பு நாட்டு அயிலியூர்[3] என்பது கல்வெட்டுத் தொடராகும்.

பாரியூர்

பாரியது பறம்புமலை எது என்பதில் ஐயப்பாடுகள் உண்டு. புலவர் ஐ.இராமசாமி அவர்கள் இங்கு குறிக்கப்படும் பாரியூம் பக்கத்தே உள்ள மலையே பறம்புமலை என்பது அவர் துணிவு[4]. கோபிச்செட்டிபாளையத்தின் அருகே உள்ள பாரியூர் பழைய பாரியூர், கரைப் பாரியூர் என இரு கிராமங்களாக உள்ளது. பாரியூர் கல்வெட்டில் தான் கொங்கு நாட்டின் நாட்டுப் பெயர்கள்

காணப்படுகின்றன[5]. இங்குள்ள பாரியூர் அம்மன் கோயில் சிறப்புப் பெற்றது. கோயில் திருப்பணி செய்யும்போது ஐம்பொன் சிலைகள் கிடைத்துள்ளன. இவ்வூர் சாம்பல் மேடுகள் பாரியூர் பழமையைத் தெளிவு படுத்துகின்றன. காஞ்சிக்கோயில் நாட்டில் பாரியூர்[6] என்பது சாசனத் தொடராகும். வீரவல்லாள தேவன்,வீரபாண்டியன் ஆகியோர் காலக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. பாரியூரில் கோயில் மட்டுமே உண்டு. ஊர் அழிந்து விட்டது. அழிவுக்கான அடையாளமாகச் சாம்பல் மேடுகள் கோயில் பக்கத்தே உள்ளன.

ஒடுவங்க நாடு

ஒடுவங்க நாட்டில் பதினாறு ஊர்கள் உண்டு. அவற்றுள் நான்கு ஊர்கள் மட்டுமே கோபி வட்டத்தில் அடங்கியுள்ளன. ஊர் என்ற துணைச்சொல் கொண்டவை இருகாலூர்,வாணிபுத்தூர் ஆகியன. இரு நீர்க்கால்களைக் கொண்ட ஊர் இருகாலூர், வாணி என்ற துணைச் சொல் (விகுதி) சிறப்புப் பெயராக அமைய வாணிபுத்தூர் எனப்பட்டது. தற்போது வாணிபுத்தூர் என வழங்கப்படுகிறது.

கூடக்கரை பவானி ஆற்றின் கரையில் ஏற்பட்ட ஊர். பவானி ஆற்றில் மற்றொரு காட்டாறு சேருமிடத்தில் ஏற்பட்டதால் கூடற்கரை= கூடல்+கரை எனப்பட்டது.

கோட்டை என்ற துணைச்சொல் கொண்ட ஊர் அரவக்கோட்டையாகும். அரவம் என்பது நாகமரத்தைக் குறிக்கும். அரவம் (நாகமரம்) என்ற மரங்கள் கோட்டைபோல் சூழ்ந்திருந்த இடத்தை அழிவு செய்து ஏற்பட்ட ஊர் அரவக்கோட்டை ஆகும்.

குறுப்பு நாடு

குறுப்பு நாட்டில் 33 ஊர்கள் உண்டு. ஆறு ஊர்கள் மட்டும் கோபிவட்டத்தைச் சேந்தன. ஏனையவை பெருந்துறை வட்டத்தில்

உள்ளன. ஆறு ஊர்களில் நான்கு ஊர்கள். "ஊர்" எனும் துணைச சொல் கொண்டுமுடிவன. அவை குருமந்தூர், அயிலூர், கொளப்பலூர், சிறுவலூர் ஆகியன.

குறும்பர் என்னும் மக்கள் வாழ்ந்திருந்த இடம் குருமந்தூர் ஆயிற்று. காடுகள் அழியவும் அவ்வின மக்களும் அழிந்து சிறுபான்மையான போது அவ்வூரை விட்டு அருகில் காணப்பட்ட மலைகளில் குடியேறிவிட்டனர். இங்கு பழங்கால முதுமக்கள் தாழியும், பண்ட பாத்திரங்களும் இவ்வூரில் கிடைக்கின்றன. அயிலூர் காஞ்கிக் கூவல் (கோயில்) நாட்டிலும் உண்டு. இரண்டும் ஒன்று தானா? என்பது ஆய்வுக்குரியது. ஆனால் ஒரே அயிலூர் மட்டும்தான் இன்று காணப்படுகிறது. சாசனத்தில் அயிலியூர்[7] எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலிங்கயம் நீர் நிலையால் ஏற்பட்ட ஊர். காஞ்சிக் கூவல் (கோயில்) நாட்டிலும் உண்டு. இரண்டும் ஒரே ஊராதல் வேண்டும். கோ என்பது பசுவைக் குறிக்கும. "கோ" கன்றீந்த (சனனம்) இடம் கோசனம் ஆயிற்று. வடபரிசாரனுட்டு யெலத்தூறு[8] என்ற கல்வெட்டுத் தொடரில் எலத்தூர், எலத்தாறு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூடத்தூர் எனும் ஊர் கூடத்தூரான இராச ராசநல்லூர்[9] எனச் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளது. தாளுன்றி என்கிற விக்கிரமச் சோழபுரம்[10] என்று சோழ அரசன் பெயர் பெற்றது. சோழமாதேவிக் கரை என்பது சோழ அரசியின் பெயர் பெற்றது. பாண்டிய மன்னனின் பெயராலும் வீரபாண்டி என்ற ஊர் உண்டு. வடபரிசார நாட்டு நம்பி பேரூர் காசிமுத்திய நம்பி பேரூர்[11] என்று நம்பியூர் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.296.
2. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.260.
3. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.282.
4. கொங்கு ஒடுவங்க நாட்டுப் பாரி வேளிரும் வேளாளர் பண்பாடும், புலவர் ஐ. இராமசாமி.
5. A.R.No.185/1910,No.191/1910.
6. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.292.
7. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.282
8. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.2835,285
9. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.286,287
10. A.R. No. 618/1905.
11. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.282, சா.289.

சத்தியமங்கலம் வட்டம்

சத்தியமங்கலம் சமீபகாலத்தில் கோபி வட்டத்திலிருந்து பிரிந்த ஒரு வட்டமாகும். இது மலையும் மலைச்சார்ந்த பகுதியும் அடங்கிய குறிஞ்சி நிலப் பகுதியாகும். கொங்கு நாட்டில் இருபத்தி நான்கு நாடுகளில் ஒடுவங்க நாடும்,வாழவந்தி நாடும் அடங்கிய ஒரு பகுதியாகும். ஒடுவங்கநாடு என்பது அரசூர்,காராப்பாடி, சதமுகை, சத்தியமங்கலம், விண்ணபப்பள்ளி, கலையலூர் ஆகிய ஊர்கள் அடங்கிய பகுதியாகும்.

சத்தியமங்கலம் இவ்வட்டத்தின் தலைநகராக உள்ளது. சத்தியமங்கலம்-சத்தி என்று திரிபடைத்துள்ளது. கோனேரின்மை கொண்டான் ஆட்சிக்காலத்தல் விக்கிரமச் சோழ நல்லூர் என்றழைக்கப்பட்டது. 21.10.1800 ஆம் ஆண்டில் புக்கானன் இவ்வூருக்குச் சென்றுள்ளார். திருமலைராயன் காலத்தில் இவ்வூரில் கோட்டை கட்டப்பட்டது. ஹைதர் ஆட்சிக் காலத்தில் இக்கோட்டை அழிக்கப்பட்டது. அக்காலத்தில் மக்கள் குடியிருப்பு குறைந்தது. கொத்தமங்கலம் என்ற ஊரும் உண்டு.

விண்ணபப்பள்ளி உக்கிர ஓபாழியில் உள்ளது. உக்கிரம் என்பது ஒடுவங்கநாட்டின் மறு பெயராகும். அபிமானச் சோழ நல்லூர் என்பது விண்ணப் பள்ளியின் வேறோரு பெயராகும். விண்ணப் பள்ளிக்கருகேயுள்ள கணேசம் புதூரில் மூன்று நடுகற்கள் உண்டு.

கலைஞர் பலர் வாழ்ந்த இடம் கலையனூர் எனக் கலையால் பெயர் பெற்றது. அவ்வூரிலிருந்து வளர்ச்சி பெற்ற ஊர் புதுக் கலையனூர் எனப்பட்டது. முன்பு இருந்த ஊர் பழைய கலையனூர் ஆனது.

அரசு என்பது ஒரு மரப்பெயர். மரப்பெயரடியாகப் பெயர் பெற்ற ஊர். கருமை நிறமுடைய பசுகாரி எனப்படும். கருமை என்ற பண்பின் பெயரடியாகப் பசுக்கூட்டம் பாடி கொண்ட இடம் கார்+ஆ+பாடி=காரப்பாடி எனப்பட்டது. கார் காலத்தில் பசுக்கூட்டம் பாடி கொண்ட இடமாகலும் கூடும். சதம் என்ற சொல் நூறு என்று பொருள்படும். சதம் என்ற என்னும் பெயருடன் முகை என்ற விகுதி பெற்ற ஊரே சதமுகை ஆகும்.

குத்தி ஆலத்தூரில் முதலாவது கத்தோலிக்க மதத்தலைவர் மலைவாழ் மக்களுக்காக இங்கு வந்து தங்கி மதப் பிரச்சாரத்தைத் தொடங்கினர்.[1] குத்தியாலத்தூரில் கோட்டை உண்டு. அடர்ந்த காடுகளுக்குள் கோட்டை அழிந்து கிடப்பதால் அதை அறியக் கூடவில்லை. குட்டையான அடர்ந்த ஆலமரங்களினூடே ஏற்பட்ட ஊர் குத்தி ஆலத்தூர் எனப்பட்டது.

திங்களூர் சமணச் சார்புடைய ஊராகும். இதுபற்றிப் பெருந்துறை வட்டத்தில் விளக்கப்பட்டது. குறுப்பு நாட்டில் திரையூர் என்கிற குலோத்துங்கச் சோழ நல்லூர் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இப்போதுள்ள நல்லூர் இதுவேயாகலாம்.

பிட்டிதேவனின் படைத் தலைவன் மாதவத் தனாய்க்கன். அப்படைத் தலைவன் பெயரால் தனாய்க்கன் கோட்டை ஏற்பட்டது. பவானி ஆற்றங்கரையில் உள்ள இவ்வூர் கீழப்பவானி அணைக்கட்டு நீரால் அழிந்து விட்டது. 27.10.1800-இல் புக்காணன் இங்கு சென்றுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. Coimbatore Dt. Mannual Vol.II, Page 426 (1898)

2. ரங்காச்சாரி குறிப்பு,பாகம் 1.

தாராபுரம் வட்டம்

பெருமைமிகு பெரியார் மாவட்டத்தில் பழமைபெறும் தாராபுரம் ஒரு வட்டமாகும். தொழிலால் பிற்பட்டதெனினும் பழமையால் புகழ்பெற்றது. தன் ஆன் பொருனை என்று சங்க நூலில் புகழப் பெறும் அமராவதி ஆறு அருகே ஓடுகிறது. இவ்வாற்றின் குறுக்கே 29 இடங்களில் அணை கட்டி வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு நீர்த்தேக்கம் கட்டப்பட்டது.

மகாபாரதத்துடன் தொடர்புடைய விராட நாட்டு மன்னன் தாராபுரமாகிய லாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். இதனை நல்ல புகழ் வஞ்சலாடபுரம். வின்னவர் போற்றிய லாடபுரம்[1] என்ற அடிகள் உறுதிப்படுத்தும்[2] கொங்கு வஞ்சி. லாடபுரம். ராஜராஜபுரம். விதாபுரம் காணி கொண்டது,[3] என்ற சாசனத் தொடரால் இவ்வூருக்கு வழங்கிய பெயர்களை அறியலாம்.

கொங்குமண்டலத்து நரையனூர் நாட்டு பிரதான ராசதானியான ராசராசபுரத்து என்ற சாசனத்தொடர். நாட்டின் பெயரையும் ஊரின் பெயரையும் அறிவுறுத்தும். பிராந்தகவுரம்[4] என்ற ராஜ ராஜபுரம் என்று வீரபாண்டியன் கல்வெட்டில்(கி.பி.1265-1285) குறிக்கப்பட்டுள்ளது.

ஓதாளர் குறவஞ்கியில்[5]

கிரேதா யுகத்தில் கிளர்வஞ்சி புரியாய்
திரேதா யுகத்தில் செயலாட புரமாய்
துவாபர யுகத்தில் துதிலாட புரமாய்
தவாக் கலியுகத்தில் தாரா புரமுமாய்
ஈரிரு யுகத்தி ற்கிப்பெயர் விளங்கும்.

என்று நான்கு யுகத்திலும் புரம்,புரி எனும் துணைச் சொற் கொண்டு அமைந்துள்ளது.

தாராபுரம் கல்வெட்டு ஒன்றிலும் காணிப்பாடல் ஒன்றிலும் தாராபுரம் கொங்கு வஞ்சி என்று வழங்கியுள்ளது. முதலிக் காமிண்டன் தனிப்பாடல் ஒன்றில் கொங்குதாராபுரம் என்றும் பெயர் காணப்படுகிறது. பின்னர் வந்த கொங்குச் சோழர்களும், கங்கர்களும் முறையே ராஜராஜபுரம், ஸ்காந்தபுரம் என்ற பெயரால் தாராபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர்.

பிற்காலத்து வந்த ஆங்கிலேயர்களும் இதன் பெருமையை அறியாதவர்கள் அல்லர். இவ்வூரில் இருந்த கோட்டை பாழாய்க் கிடந்தது. 1792-இல் படையெடுத்து ஐதர் அலியால் இக்கோட்டை அழிக்கப்பட்டது. 1799-இல் ஹூர்டிஸ் என்ற வெள்ளைக்காரக் கலெக்டர் கோட்டையையும் நகரத்தையும் மீண்டும் கட்டினார். 1799 முதல் 1804 வரை தென் கோவை மாவட்டத்து ஆட்சித் தலைவரின் அலுவலகங்களும்,1828-வரை மாவட்ட நீதிமன்றங்களும் இவ்வூரில் இருந்தன.

தாராபுரம் தென் கொங்கு நாட்டைச் சேர்ந்தது. கொங்கு நாட்டின் 24 நாடுகளில் தென்கரை நாட்டின் ஊர்களும், பொங்கலூர் நாட்டின் இரண்டு ஊர்களும், தென் பொங்கலூர் நாடும், தலை நாடும் இதனுள் அடங்கும். நரையூர் நாடு எனப்படும் கொளிஞ்சி வாடி சூழ்ந்த பகுதியும் இவ்வட்டத்துள் அடங்கும். நாடுகளின் பெயர்கள்

அந்நாடுகளின் முக்கிய ஊரின் பெயரால் பெயர் பெற்றன (காங்கயம்-காங்கய நாடு) கொங்கு நாட்டின் தெற்கு எல்லையில் அமராவதி ஆறு ஓடுகிறது. வடக்கு எல்லையில் வானி எனும் பவானி ஆறு ஓடுகிறது. இவ்விரு ஆறுகளின் கரைகள் திசைப் பெயரால் கொங்கு நாட்டுத் தென் திசையில் உள்ள கரை தென்கரை நாடு என்றும், வடக்கில் உள்ள வடகரை நாடு என்றும் பெயர் பெற்றுள்ளது.

தென்கரை நாட்டில் 12 ஊர்கள் உள்ளன. இதைக் கொங்கு மண்டலச் சதகம் ஊர்த் தொகைப்பாடலால் அறியலாம்.

கோதிலாக் கொற்றனூர் மூலனூருங் குறிச்சி
யிளம்பிள்ளை வீராச்சி யோடு
ஏதிலாரும் புகழும் தூரம் பாடி எதிரனூர்
பிரமியமும் நீலம்பூரும்
ஊதியூருடன் கொழுமண்குழி கிழானாருயர்
குண்டலுடன் பன்னிரண்டு ஊர்சேர்ந்து
நீதிசேர் தென்கரை நாடாகுமென்றர்
நிரம்புகல்வி கற்ற பெரும்புலவர் தாமே.

இவற்றுள் "ஊர்" எனும் துணைச்சொல் கொண்டு முடியும் ஊர்கள் ஐந்து. அவற்றுள் ஊதியூர் காங்கயம் வட்டத்தில் அடங்கியது. கொற்றனூர், மூலனூர், எதிரனூர் (மாம்பாடி), நீலம்பூர்(கரையூர்) ஆகியவை ஊர் எனும் துணைச்சொல் கொண்டு முடியும். பிள்ளை(இளம்பிள்ளை) மங்கலம்(வீராச்சி மங்கலம்) பாடி (தூரம்பாடி), குழி (தொழுமன் குழி), குண்டல் (கிழான் குண்டல்), (தாராபுரம்) என்பன பிற ஊர்கள் பெறும் துணைச்சொற்களாகும்.

கொத்தனூர்

இது அமராவதிக் கரையில் அமைந்துள்ளது. ஊரின் பக்கத்தே உள்ள இவ்வூர் நத்தமேட்டில் கருப்பு சிவப்பு ஓடுகளும். முதுமக்கள்

தாழிகளின் உடைந்த ஓடுகளும் கிடைக்கின்றன. நத்தமேடு இவ்வூரின் பழமைக்குச் சான்றாய் அமையும். இங்குள்ள தென்னீசுரசுவாமி கோயிலில் கொங்குச் சோழன் வீர ராஜேந்திர தேவன் கல்வெட்டுகள் உள்ளன. தென்கரை நாட்டுக் கொற்றனூர்[6]. கொத்தனூரு வேணாவுடையான் எழுத்து[7] என்னும் சாசனத் தொடர்கள் இவ்வூரின் பெயரும்.நாடும், அவ்வூருக்குடையாரும் பற்றித் தெரிவிக்கின்றன. வானவர் கொற்றை[8] என்பது சதகப் பாடலாகும். கொங்கு நாட்டிற்கு வந்த உ.வே. சாமிநாதய்யர் இவ்வூரைக் கொற்றை நகர் எனக் குறிப்பிட்டுள்ளார். தென்னீசுரசுவாமி கோயில் தெற்குத் திருமதில் ஓரத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் நடுகல் ஒன்று உள்ளது. ஓங்கிய வாளும் ஒரு கையில் வில்லுமாகக் கொண்டு சிதைந்த கல்வெட்டுடன் காணப்படுகிறது.

மூலனூர்

"மூலனூறு பிள்ளைப் பெருமாள் எழுத்து"[9] என்ற கல்வெட்டுத் தொடர் ஊர்ப் பெயரை உணர்த்தும். திருமூலன் மாநகர்,மாமூலன் மாநகரம், மகாமேரு நிகரான மூலநகர்[10] என்றும் பெயர் பெற்றிருந்தது. சுந்தரர் தமது திருநாட்டுத் தொகைப்பாடலில் மூலனூரைக் குறிப்பிட்டுள்ளார்.[11] இது இவ்வூர் தானா என்பது ஆய்வுக்குரியது.

> **" மூலகுலச் சேரலன் முன்பூசன் செட்டியுடன்**
> **சீலமுள கம்பளத்தான் சீராளன்-மூலநகர்**
> **காணி கொண்ட செய்வர் "**

என்ற காணிப்பட்டு இவ்வூர் மூலகுலத்து வேளாளருக்கு உரியது என்பதால் அவ்வேளாண் குலப் பெயரால் அமைந்தது மூலனூர் எனலாம். திருமூலரோடு மூலனூர் தொடர்புடையதாகக் கூறுப்படுகிறது. திருமூலர் தமது நூலில் அகச் சான்றுகள் ஒன்றும்

காட்டவில்லை. மூலனூர் மாமூலருக்குச் சேரமன்னர் ஒருவரால் பரிசளிக்கப்பெற்று அவர் பெயரால் நிலையான ஊர்ப்பெயரைக் கொண்டது.[12] தமிழ்நாட்டில் பல மூலனூர் உள்ளன.

எதிரனூர்

மாம்பாடி என்பன இப்போதுள்ள பெயர். எதிரனூர் இன்றில்லை. அமராவதியின் எதிர்க்கரையில் தோன்றியதால் எதிரனூர் எனப் பெயராதல் கூடும்.

நீலம்பூர்

கரையூர் என்று வாங்கப்படுகிறது. அருகே நல்லதங்காள் ஓடை உள்ளது. ஓடையின் கரையில் உள்ள ஊர் கரையூர். நீலம்பூர் முற்றிலும் அழிந்து விட்டது. கரையூரின் பக்கத்தே உள்ள நத்தமேடே நீலம்பூர் இருந்த இடமாகும். இங்கு கருப்பு சிவப்பு நிற ஓடுகள் கிடைக்கின்றன. இடிந்த கட்டிடங்களின் செங்கற்கள் தோண்டும் இடமெல்லாம் கிடைக்கின்றன. அழிவுற்ற கோயில் சிற்பங்கள் கோவையில் உள்ள தொல்பொருள் துறையினர் எடுத்துச் சென்று விட்டனர்.

"தென்கரை நாட்டுச் சேர்ந்த நீலம் பேரூர் "[13] என்று செப்பேடு பட்டயம் குறிப்பிடுவதால் இவ்வூரின் பெருமை விளங்கும்.

இளம்பிள்ளை

இளம்பிள்ளை இன்று முணையாம் பூண்டி என்று வழங்குகிறது.

செல்லாண்டி யம் னருள் சின்னம்ம னைப்பணியும்
வல்லாளன் காடைகுல வன்மையான் -நல்லதவ
மாதவரும் நீராட வந்திலங்கும் ஆன்பொருளை
ஓதும் இளம்பிள்ளை யூர்"

என்ற காணிப் பாடலில் இளம்பிள்ளையூர் ஆகி இன்று முனையாம் பூண்டியாகியுள்ளது.

வீராட்சி மங்கலம்

மங்கலம் என்று முடியும் ஊர்கள் பிராமணர்களுக்கு சர்வ மானியமாக வழங்கப்பட்ட ஊர்களாகும். கிருஷ்ணபுரத்தில் வாழ்ந்த பிராமணர்கள் ஒருகாலத்தில் வீராட்சி மங்கலத்தில் குடியேறியவர்கள். இது அமராவதிக் கரையில் அமைந்துள்ளது. பழைய ஊர் என்பதற்கு ஏற்ப இங்கு நத்தமேடு உண்டு. வேளாளபுராணம் பாடிய கந்தசாமிக் கவிராயர் இவ்வூரினர். அனைவர் புகழ் வீராட்சி மங்கை நகர்[14] என்ற பெயரும் பெற்றிருந்தது.

தூரம்பாடி

"பாடி" என்பது முழுக் குடும்ப நிலையைக் குறிப்பதாகும். தூரத்திலிருந்து வந்த ஆயர் (பாடி - அழைத்து) வாழ்ந்த இடமாகும். வேளான் குடியினராகிய தூரன் என்ற குலப் பிரிவினர் பெயரால் தூரன்பாடி–தூரம்பாடி எனப் பெயர் பெற்றது. இங்குள்ள மாணிக்க கேசுவரசுவாமி கோயில் கல்வெட்டுக்கள்[15] பிற்காலத்தவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரமியம்

தேறு புகழ் பிரமியம்[16] என்று ஊர் சிறப்பிக்கப்படுகிறது. இங்குள்ள திருவலஞ்சுழி ஈசுவரன் கோயிலில் வீரராஜேந்திரதேவன், குலோத்துங்கச் சோழன் காலக் கல்வெட்டுகள்[17] கிடைத்துள்ளன. இதில் வீரசங்காதசதுர் வேதிமங்கலம்[18] என்று பிரமியத்தின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

கொழுமன் குழி

கொங்கணன் தவம் செய்த இடம் கொங்கணகிரி.

அக்கொங்கணன் பொன்னூதியெடுத்ததால் அம்மலை பொன்னூதி மலையாயிற்று. அவர் பொன்னூதியெடுக்கக் குகை செய்ய மண்ணெடுத்த குழியுங் குகை மண் குழி என்ற பெயரால் விளங்கியது.

கீழான் குண்டல்

குண்டல் என்பது நீர்நிலை. கிழான் வேளாளர்க்குரிய பட்டப் பெயர். வேளாளர் தொடர்பாக ஊர் அமைந்தது. கிழான் குண்டல்[19] கிழான்குன்றல் என்றும் பெயர் பெற்றது. நல்ல பெரியாக் கவுண்டன் நாளையில் கிழான்கண்டல் (கிழான்குண்டல்) கிராமத்தில் கோட்டை போட்டார்கள்[20] என்பது கல்வெட்டு.

பொங்கலூர் நாட்டு குன்றிடம், நமனாரி ஆகிய ஊர்களும், தென்பொங்கலூர் நாட்டுப் பொன்னிவாடி ஆகிய ஊர்களும் தலைய நாட்டு வேளான் பூண்டி, கண்ணிவாடியும் நல்லுருக்கா நாட்டு சடையம்பாளையம் (குறிச்சி) ஆகிய ஊர்களும் கொங்குமண்டலச் சதகம் ஊர்த் தொகைப் பாடலில் இடம் பெற்றுப் பழமையுடன் காணப்படுகின்றன. லக்கநாய்க்கன் பட்டி என்பது குறிச்சிக்குரிய பழைய பெயர் ஆகும்.

குன்றிடம்

இவ்வூர் வடுக நாதசுவாமி கோயிலில் கொங்குச் சோழன் வீரராசேந்திரதேவன் கல்வெட்டுக்களும், வீரபாண்டியன் காலக் கல்வெட்டுக்களும் உள்ளன. இவ்வூர் குன்றாபுரம், பொன் குன்றை என்றும் வழங்கியது. இன்றைய வழக்கில் குண்டடம் ஆகியுள்ளது. கல்வெட்டுக்களில் குண்டோடம் என்று அழைக்கப்படுகிறது.

நமனாரி

"வாய்த்த நமனாரி" என்று ஓதாளர் குறவஞ்சி கூறும். நமனூர் என்றும் பெயர் பெறும்.சடையம்பாளையம் அருகில் உள்ள இவ்வூர்

சுந்தரபாண்டியபுரம்[21] என்றும் பெயர் பெறும். உப்பாற்றங்கரையில் உள்ளது.

பொன்னிவாடி

இவ்வூர் நிர்மலேசுவரர் கோயிலில் வட்டெழுத்துக் கல்வெட்டுண்டு. இது 9 ஆம் நூற்றாண்டதாகும்.

வேலம்பூண்டி (அல்லது வேலம்பட்டி)

அமராவதி மேற்குக் கரையில் உள்ளது. இது தாராபுரம் பகுதியில் உள்ளது. எங்களூரான வேலம்பூண்டி என்பது சாசனத் தொடர். இது பல்லடம் வட்டம் திருப்பூரிலிருந்து 10 மைல் தெற்கிலும் கொடுவாயிலிருந்து 4 மைல் வடக்கிலும் அமைந்துள்ளது. கொடுவாய் விண்ணிறைந்த பெருமாள் கோயில் கல்வெட்டில் வேலம்பூண்டி குறிப்பிடப்பட்டுள்ளது (சகம் 1411) வீரநாராயண உடையார் காலம்.

கன்னிவாடி

அண்டமா நதி எனும் ஓடை அருகில் ஓடுகிறது. ஆயர்குலக் கன்னியர் (தேவதைகள்) ஆடு மாடுகளை மேய்த்து அண்டமா நதியில் நீராடி மகிழ்ந்தனர். ஊர் அழிந்துள்ளது. சான்றாக நத்தமேட்டில் கருப்புச் சிவப்புமான பழங்கால ஓடுகள் காணப்படுகின்றன. நத்தமேட்டின் பக்கத்தில் குடியிருப்புகள் உள்ளன. மூலனூர் வரலாற்றுப் பாமாலை பாடிய இராமசாமிப் புலவர் இவ்வூரில் வாழ்ந்தார். கண்ணன் குலத்தார் பட்டயம் கன்னிவாடியைக் குறிப்பிட்டுள்ளது. தளவாய் இராமப் பையன் காலத்தில் கன்னிவாடி [22] நாய்க்கன் பெரும்படை உடையவனாய் இருந்து அவருக்கு உதவி செய்துள்ளான்.

சடையம்பாளையம்

இவ்வூரில் உள்ள மங்கை கோயிலில் உள்ள கல்வெட்டுக் குறிப்பிலிருந்து கரையூர் கோயில் முகமதியரால் அழிக்கப்பட்டது என்றும், பின்னர் ஆவுடைய ராஜா என்பவரால் திருப்பணி செய்யப்பட்டது என்றும் தெரிகிறது. இத்திருப்பணி வீரகம்பன உடையார் காலத்தில் நடந்தது.

தலையூர்

தலையநாட்டில் உள்ளது தலையூர். நாட்டின் தலைமையூர் தலையூர் ஆகியுள்ளது. கம்பன உடையார் காலத்தில் பெருமாள் கோயில் நாள் பூசைக்கு நிலம்விட்ட செய்தி சொல்லப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிர்வாகத்திற்காக நன்செய், புன்செய் எனப் பிரிக்கப்பட்டு ஊர்ப் பெயர்கள் அமைந்தன. அமராவதியின் தென்கரையில் உள்ளது. நரையனூர் நாட்டுத் தலைமையிடமாய் நரையூர் ஏற்பட்டது.

அலங்கியம்

நீர்நிலையின் பொருட்டு கயம் என்ற துணைச் சொல் பெற்று அலங்கயம் என்றாகி அலங்கியம் என்று வழங்கி வருகிறது. இது சண்முக நதி, அமராவதி ஆகிய இரண்டு ஆறுகள் கூடும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே அமராவதியின் குறுக்கே அணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவ்வணையின் அருகே உள்ள தோட்டத்தில் அறுபது ஆள்விரட்டி என்று மக்களால் அழைக்கப்படும் நடுகல் ஒன்றுண்டு.

உத்தமச் சோழ நல்லூரான அலங்கியம் என்று சாசனம் குறிப்பிட்டுள்ளது. தென் பொங்கலூர் நாட்டைச் சேர்ந்த இவ்வூர்

கன்னீசுர சுவாமி கோயிலில் கொங்குச் சோழன் வீரராசேந்திரன் கல்வெட்டுக்களும், சுந்தரபாண்டியன் 27ஆம் ஆட்சியாண்ட கல்வெட்டும் உள்ளன.

தளவாய் பட்டணம்

தளவாய் என்பது படைத் தலைவருக்குப் பெயர். அத்தளவாயின் பெயரால் தளவாய் பட்டணம் ஏற்பட்டது. இங்குள்ள பிடாரி அம்மன் கோயிலில்[24] சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்களும், வரதராஜப் பெருமாள் கோயிலில் 14 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டும் காணப்படுகின்றன. நரையனூர் நாடு[25] குறிக்கப்பட்டுள்ளது. அரியபிராட்டி சதுர் வேதமங்கலம்,செயங்கொண்ட சோழ விண்ணகர்[26] ஆகிய ஊர்களும் குறிக்கப்பட்டுள்ளன. அமராவதிக் கரையில் அமைந்துள்ள இவ்வூரின் அருகே ஆற்றின் குறுக்கே அணை ஒன்றும் உண்டு.

கொங்கூர்

வைகாவூர் நாட்டுச் சிற்றாற்றங்கரையில் உள்ளது கொங்கூர். அது தற்காலம் பெரும் நத்தத்தின் நடுவில் பழங்குடி மக்கள் வாழும் சிற்றூராக உள்ளது. பேரூராக விளங்கியதற்கேற்ற சின்னங்களையுடையது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய இடமாகச் சில காலம் இருந்தது. ஜெயங்கொண்ட சோழ நல்லூர்[27] என்றும் பெயருண்டு.

இவ்வூர் பசுபதீசுர சுவாமிகள் கோயிலில் கொங்குச் சோழன் குலோத்துங்கச் சோழன் (கி.பி.1149-1183) வீர ராசேந்திரன் (கி.பி.1206-1255) காலக் கல்வெட்டுக்கள் உண்டு. குலோத்துங்கச் சோழன் காலத்தில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழபுரம்[28] என்ற பெயர் பெற்றிருந்தது.

திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் சுந்தரபாண்டியன் காலத்தில் இவ்வூர் பசுபதிசுவரர் கோயிலுக்குத் தேவதானமாக வானவராய நல்லூர்[29] என்ற புதிய ஊரை உண்டாக்கித் தானமாகத் தந்த செய்தி காணப்படுகிறது. சூரிய நல்லூர், பொம்ம நல்லூர் ஆகிய நல்லூர்களும் உண்டு.

கொளிஞ்சிவாடி

கொளிஞ்சி என்பது ஒருவகை மரம். வாடி என்ற துணைச் சொல் பெற்று கொளிஞ்சிவாடி ஆனது. இவ்வூர் சொக்கநாத சுவாமி கோயில் திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்ட வீரபாண்டியன் (கி.பி. 1265-1285) காலத்துக் கல்வெட்டில் நரையனூர் நாட்டு உடைய பிராட்டி சதுர்வேதி மங்கலம் என்று ஊர்ப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அழகிய சொக்கரான காமக்கோட்டத்து நாச்சியார்க்கு அனுகம்பள்ளமான அமரபுயங்க மண்ணரையில் இறையிலியாக நிலம் விட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. பெரிய தாராபுரம் கொளிஞ்சிவாடி[30] என்று பாளையப்பட்டுகளின் வம்சாவளியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு 36,367 பாடல்கள்
2. கொங்குமண்டலச் சதகம், 31, 32 பாடல்கள்
3. A.R.E.P. 1920 No.146
4. A.R.E.P. 1920 No.139
5. ஓதாளர் குறவஞ்சி, பக்கம் 103.
6. A.R.E.P. 1920 No.176

7. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.322

8. கொங்குமண்டலச் சதகம், வாலசுந்தர கவிஞர் பாடல் 45

9. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 322

10. மூலனூர் வரலாற்றுப் பாமாலை, கன்னிவாடி ராமசாமிப் புலவர்

11. சுந்தரர் தேவாரம்

12. மூலனூர் அருள்மிகு வஞ்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா– சிறப்புமலர்

13. தாராபுரம் மேட்டுவலசு கிருஷ்ணசாமி கவுண்டர் – செய்தி

14. தனிப்பாடல்

15. A.R.E.P. 1920 No.211

16. கொடுமணல் இலக்கியங்கள், பக்கம் 77

17. A.R.E.P. 1920 No.182To 195

18. A.R.E.P. 1920 No. 182

19. கொடுமணல் இலக்கியங்கள், பக்கம் 59

20. பாளையப்பட்டுகளின் வம்சாவளி, தொகுதி 2, பக்.20

21. A.R.E.P. 173 No.1927

22. இராமய்யன் அம்மானை, பக்கம் 31.

23. A.R.E.P. 1920 No.160

24. A.R.E.P. 1920 No.158,1961-62 No.258,261

25. A.R.E.P. 1961-62 No.259.

26. A.R.E.P. 1961-72, No.258

27. A.R.165/1920.

28. A.R.E.P. 1920, No.165

29. A.R.E.P. 1920 No.172.

30. பாளையப்பட்டுகளின் வம்சாவளி தொகுதி 1, பக்கம் 16

பவானி வட்டம்

வடகரை நாடென்பது இருபத்து நான்கு நாடுகளில் ஒன்று. தென்கரை நாடென்பது தாராபுரம் வட்டம் அமராவதிக் கரையைச் சேர்ந்த நிலப்பரப்பினைக் கொண்டது. இவ்விரு நாடுகளுமே நதியின் கரையைக் கொண்டு விளங்குவன. அதனால், வடகரை நாடென்றும், தென்கரை நாடென்றும் வழங்கின. வடகரை நாட்டில் இருபத்து நான்கு ஊர்கள் உள்ளன என்பதை கொங்குமண்டலச் சதகம் ஊர்த்தொகைப் பாடலால் அறியலாம்.

அந்தியூரும் பட்டிலூருங் குறிச்சி
பீலாம்பட்டி சம்பை வானி
ஆம்பக்கூடலினொடு கீழ்வானி மூங்கினக
ரான முகப்பாலூரும்
பைந்தரு விளங்கு கருவல்வாடி தன்னொடு
பகர மாப்பேட்டை பொன்னிப்
பழுநதிக்கரை நெருஞ்சிப்பேட்டை வளவயற்
பரவெண்ண மங்கலமுடன்
செந்திரு விளங்களவளர் கோட்டை பூதப்பாடி

சேருநகலூரு லகடம்
செழிய கன்னப்பிலி பருவாசி பிரமயஞ்
சீர்கட்டியின் சமுத்திரம்
வந்தனை செயும் பெரியார் தங்குபூனுச்சியுடன்
வளர்சென்னம்பட்டி யென்ன
மாகவிஞர் சாற்றுமிருபத்துநான்கூர்களும்
வடகரை நாடுதானே.

பவானி பெரியார் மாவட்டத்தில் உள்ள ஏழு வட்டங்களுள் ஒன்று. பவானி இவ்வட்டத்தின் தலைநகராகும். "மங்கலஞ்சேர் காவேரி பவானிநதி யுங்கலந்த சங்கமுகத் தீர்த்தங்கள் தானாடி" என்று இதன் பெருமை பேசப்படுகிறது.[1] திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற இத்தலம் நண்ணாவூர் எனப்பட்டது. அவர் தமது பதிகத்தல் "கேட்டார் வினை கெடுக்குஞ் திருநணா என்று குறிப்பிட்டுள்ளார். பரமசிவன் பூசனைக் கொரு தென்னிலந்தை மரங்கனியவதும் நண்ணாவூராகும்[2] இதை அருணகிரிநாதரும் பாடியுள்ளார். காவிரி, பவானி ஆகிய இரு ஆறுகள் கூடும் இடமானதால் கூடல்,பவானி கூடல்[3], கூடுதுறை, கூடல் சங்கமம்,வவ்வானி கூடல்[4] என்ற பெயர்களும் உண்டு. "கோல மிகுந்த பவானியும்,பொன்னியும் கூடுதுறை வாலிப காசி நண்ணுவூர் பயில் கொங்குமண்டலமே" என்ற பாடலும் வலியுறுத்தும்[5]. காவிரியுடன் கலக்கும் பவானி ஆறு வானி என்றும் பெயர் பெறும். இது "குடகில் வருங்காவிரி புகுவானி"[6] என்றும் "சாந்துவரு வானி நீரினும்"[7] என்றும் பேசப்பட்டது. பவானி ஆற்றில் பள்ளம் ஒன்று கலக்குமிடத்தில் ஆப்பக்கூடல்[8] என்ற ஊரும் உண்டு. இன்று இங்கு சக்தி சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது. வானி ஆற்றின் இருமருங்கும் உள்ள ஊர்கள் 'வானி' என்றே பெயர்பெற்றன. மேவானி, கீவானி என்பன.

சிவத்திருப்பிராட்டியாராகிய பார்வதி அம்மையாரின் திருப்பெயர்களுள் பவாநி என்பதும் ஒன்று. அத்திருப் பெயரே

ஊருக்கும் பெயராயிற்று. குபேரன் வழிபடுதலமானதால் "தட்சிண அளகை" எனப்பட்டது. இத்தலத்தின் தலவிருச்ச சிறப்புக் காரணமாக "தட்சிணவதரி காச்சிரமம்" எனப்பட்டது. வதரி என்ற வடசொல் இலந்தை என்று பொருள்படும். இவ்வூர் திருநணா, நண்ணாவூர், பவானி, பவானி கூடல், முக்கூடல், சங்கமசேத்திரம், பரராச சேத்திரம்,வக்கிரபுரம், பதரிவனம், வீரபுரம் என்றெல்லாம் பேசப்பெறும்[9].

1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட காவிரி வெள்ளத்தால் 500 வீடுகள் அழிந்தன. அப்போது ஊரின் வடக்கே 240 வீடுகள் கட்ட ஏற்பாடுகளைச் செய்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நினைவாக வர்ணபுரம் என்ற ஊர் ஏற்பட்டது[10]. 16,17.10.1800 இல் புக்காணன் இவ்வூரில் தங்கியுள்ளார். அவர் தம் பயணக் குறிப்பால் பாழான கோட்டையுடன் கூடிய சிற்றூராக உள்ளது என்று அவ்வூர் விரிவாக்கப் பணிகளை ஆட்சித் தலைவர் கவனித்து வருகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாளில் குறிஞ்சி வாழ்மக்கள் குறவர் எனப்பட்டனர். அவர்கள் குடியிருந்த இடம் குறிச்சி எனப்பட்டது. "குறிச்சி எங்கள் குறச்சாதி குடியிருப்பதம்மே[11]" என்ற குறவஞ்சிக் கூற்றால் அறியலாம். பவானி வட்டத்தில் உள்ள குறிச்சி "குறுச்சி[12]" என்று சாசனத் தொடரில் குறிப்பிடப்படுள்ளது. குறிஞ்சி நகர்[13]. குறிச்சி [14] என்று இலக்கியங்களில் இப்பெயர் இடம் பெற்றுள்ளது.

அந்தியூர்

அந்திமாலை நேசத்தைக் குறிக்கும். அந்தி நேரத்தில் ஆநிரைக் கூட்டங்கள் அடைக்கப்பட்டன. பின்னர் ஏற்பட்ட குடியேற்றம் அந்தியூர் எனப்பட்டது. அந்தியிளங்கீரனர் இவ்வூரினர்[15]. அவர் தமது பாடலில் "மையின் மானினம் மருவப் பையென வெந்தாறு பொன்னின் அந்திபூப்ப[16]" என்று குறிப்பிட்டுள்ளார். அந்திமலர் பூத்துக் குலுங்கிய இடமே அந்தியூர். "அந்தியூர் சீற்மை" என்பது சாசனத் தொடராகும்.

18.10.1800 ஆம் நாள் புககாணன இவவூருககு வந்துள்ளார். அந்தியூரில் கோட்டை உண்டு. பழங்காலக் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன.

பட்டிலூர்

தலைவனது புகழை எதிர்நின்று பாராட்டுவோன் பட்டன் எனப்படுவான். கட்டுக் கடங்காத கருணை மீனாட்சியம்மா, பட்டுலூர்ப் பனங்காடை பாக்கியனைக் கானீரோ[17] என்று கொடுமணல் இலக்கியங்களில் கந்தசாமி என்னும் தலைவன் பாராட்டப்படுகிறான். பழங்காலத்துத் தலைவன் புகழைப் பாராட்டிய பட்டன் பெயரே பட்டிலூர் எனப்பட்டது. சாசனத் தொடரிலும் பல பட்டனர் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.[18]

பெருந்தலையூர்

சங்கப் புலவர்களில் பெருந்தலைச் சாத்தனாரும் ஒருவர். குமணன் என்னும் வள்ளலைக் காட்டிலே கண்டு சோகம் நிறைந்த சொற்களால் அவன் உள்ளத்தை உருக்கி அவன்பால் தலைக்கொடை பெற்ற புலவர். பெருந்தலை என்னும் ஊரில் பிறந்த சாத்தனார் பெருந்தலைச் சாத்தனார் என அழைக்கப்பெற்றார். அவ்வூரே பெருந்தலை ஊராகும்[19]. உரோகடத்துச் சுந்தரத்தனார் என்ற மற்றொரு சங்கப் புலவர் வாழ்ந்திருந்த இடம் ஒலகடமாகும்.இவர் நற்றிணையில்[20] குறிஞ்சி பற்றிப் பாடியுள்ளார் உலகவிடங்கம்[21] என்று சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

'ஓரி' சிறந்த வில்லாளன்; கொடையாளன். அதனால் வல்வில் ஓரி எனப்பட்டான். பவானி வட்டத்தில் உள்ள ஓரிச்சேரி[22] இவ்வள்ளல் பெயரால் வழங்குகிறது. சாசனத் தொடர் ஓரிச்சேரி அக்கிரஹாரத்துக்கு பிரதி நாமதேயமான திருமலறாயசமுத்திரம்[23]

என்று இவ்வூர்ப் பெயரைக் குறிப்பிடுகிறது. பவானி ஆற்றின் வடகரையில் உள்ள பழமையான ஊர்.

மூகாயனூர்

மூகன் ஆயன் ஊர் எனப் பிரித்து மூகன் எனின் ஊமையன், ஆயன் எனின் இடையன், ஊர் எனும் விகுதி பெற்று மூகாயனூர் ஆயிற்று. ஊமையான இடையன் வாழ்ந்த இடமாகும். நகலூர் மரப்பெயராகும். உழவு மிகுந்து மரத்தின் பெயராக அமைந்த ஊர் ஏருலவும் ஆலத்தூர். பெரியபுரியூரில் நடுகல் உண்டு. புலியுடன் போரிட்டிறந்த இடம் புலியூர் எனப்பட்டது. ஊர் வளர்ச்சி பெற்றபோது பெரியபுலியூர் எனப் பெயர் பெற்றது. சின்னப் புலியூருக்கு வேங்கிட பத்திராயபுரம்[24] என்றும் பெயர் உண்டு. கல்பாறை என்கிற வரதநல்லூர்[25] ஊராட்சிக் கோட்டையை அடுத்துள்ளது.

மொடக்குறிச்சி என்ற ஊர் ஈரோடு வட்டத்தில் உள்ளது. மொடக்குறிச்சியிலிருந்து இடமாறிக் குடியேறியோர் வாழத் தொடங்கிய ஊர் மொடக்குறிச்சியனூர் எனப்பட்டது. இவ்வட்டத்தில் உள்ள குறிச்சியில் வாழ்ந்த முடமானவன் குடியேறி வாழத் தொடங்கிய ஊரும் ஆகலாம்.

கோட்டை,பேட்டை என்ற துணைச் சொற்கள் நகரின் ஒரு பகுதியையோ அல்லது தனி வீடுகளையோ குறிக்கும் சொல்லாகும். வனத்தைச் செடி வெட்டி வெளிபண்ணி சமைய முதலி அந்தவனத்தில் ஒரு ஊரும் நகரமும் பேட்டையும், கோட்டையும் அமைத்தான்.[26] என்ற சோழன் பூர்வபட்டயச் சொற்கள் ஆனது என அறியலாம். புறநகர்ப் பகுதி பேட்டை எனப்படும். சந்தை கூடுமிடமும், தொழில் வளம் மிகுந்த இடமும் பேட்டை என்று அழைக்கப்படும். அம்மாப்பேட்டையில் நெசவுத் தொழில் நடைபெற்றதைப் புக்காணன் தமது குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளார். பொன்னிப்பழ நதிக்கரையில் உள்ளது நெருஞ்சிப் பேட்டை, சிங்கப்பேட்டை, பிறவுட தேவராயபுரம்[27] என்று பெயரும் பெற்றது.

பவானியை அடுத்து ஊராட்சிக்கோட்டை உள்ளது. இவ்வூர் வேதகிரி என்றும் பெயர் பெற்றது. இங்கு நடுகல் உண்டு. ஊர்த்தொகைப் பாடலில் கோட்டை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வட்டத்தில் இருபது கோட்டைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சதுர்வேத மங்கலம் என்பதன் குறுக்கம் மங்கலம். பிராமணர்கள் குடியிருப்புக்காக பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பட்ட கிராமம். கேசரிமங்கலம் காவிரிக் கரையில் உள்ளது. கேசறமங்கலத்துக்கு பிரதினாமதேயமான ரகுநாத சமுத்திரம்[28] என்றும் பெயர். வைரமங்கலம் பிராமணர்களுக்குப் பிரமதேயமாக[29] வழங்கப்பட்டது. பிரமதேசம் என்ற ஊர் கொடுமணல் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய எண்ணமங்கலம் அன்று சிலம்பூர்[30] என்றே வழங்கியது.

பட்டி

திருமாலின் அவதாரம் கண்ணன். அவன் ஆயர்பாடியில் வாழ்ந்தவன். அவர் பெயரால் கண்ணப்பள்ளி பெயர் பெற்றதாகலாம். பூனாச்சி, பருவாச்சி ஆகிய ஊர்களுக்கு புக்காணன் சென்றுள்ளார். அங்கேயிருந்த ஏரி பாழ்பட்டுக் கிடந்தமையால் விவசாயம் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். பருவாச்சி அகளங்க நல்லூர்[31] என்றும் பெயர் பெற்றிருந்தது. பூணாச்சி, புண்ணாச்சி சுரினாறாயணபுரம்[32] என்றும் பெயர் பெற்றது.

கட்டி முதலியார் பரம்பரையினர் பெயர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன. கெட்டிசமுத்திரம் என்ற ஊர் இவர் பரம்பரையினரின் பெயர் பெற்றதாகும். ஆண்டிகுளம் பாளையப் பட்டுக்களின் வம்சாவளியில் தொகுதி மூன்றில் குறிப்பிட்டப்பட்ட ஊராகும். கூத்தம்பூண்டி [33] என்ற ஊர் பூர்வத்தில் குறிச்சி கிராமத்தில் சேர்ந்திருந்தது. புன்னம்[34] தென்னிந்தியக் கோயில் சாசனத்தின் குறிக்கப்பட்டுள்ள ஊர்.

அடிக்குறிப்புகள்

1. விறலி விடுதூது, பக்கம் 55
2. கொங்குமண்டலச் சதகம், பாட்டு 21, வாலசுந்தர கவிஞர்
3. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.116
4. சோழன் பூர்வ பட்டயம், பக்கம் 62
5. கொங்குமண்டலச் சதகம், பாட்டு 11, கார்மேக கவிஞர்
6. அவிநாசித் தலபுராணம்
7. பதிற்றுப்பத்துபாட்டு 86
8. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா .1173
9. பவாநி தலபுராணம்
10. Supplement to the Manual of the Coimbatore Dt.
11. மீனாட்சியம்மை குறம்
12. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா .1172
13. கொ டுமணல் இலக்கியங்கள், பக்கம் 60, புலவர் செ.இராசு
14. சங்கமேசுவரசுவாமி – விறலி விடுதூது, பக்கம் 35, பதிப்பு புலவர் வீ.சொக்கலிங்கம் .
15. கொங்குநாடு, பக்கம் 108, அ.மு.குழந்தை
16. அகநானூறு, பாட்டு 71

17. கொடுமணல் இலக்கியங்கள் பக்கம் 59, புலவர் செ.இராசு

18. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.1172

19. தமிழகம் ஊரும் பேரும், பக்கம் 138, ரா.பி.சேதுப்பிள்ளை

20. நற்றிணை பாட்டு 306

21. A.R.E.P.177/65 - 1966.

22. தமிழகம் ஊரும் பேரும், பக்கம் 126,ரா.பி.சேதுப்பிள்ளை

23. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் .சா.1173

24. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி தொகுதி 3, பக்கம் 26.

25. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.

26. சோழன் பூர்வபட்டயம், பக்கம் 70

27. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3, பக்கம் 24

28. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3, பக்கம் 22

29. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி தொகுதி 3, பக்கம் 26

30. கலைமகள் கலைக்கடம். பக்கம் 191, புலவர் செ. இராசு

31. கலைமகள் கலைக்கடம் . பக்கம் 198, புலவர் செ. இராசு

32. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3, பக்கம் 40

33. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி 3, பக்கம் 40

34. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 1173

பெருந்துறை வட்டம்

1860 ஆம் ஆண்டு பெருந்துறை தனி வட்டமாக இருந்தது. பின்னர் ஈரோடு வட்டத்துடன் இணைக்கப் பெற்றது. பின் மீண்டும் பிரிவினையானது. இது புதுமையல்ல பழமையே ஆகும். கொங்கு 24 நாடுகளில் குறுப்பு நாட்டின் பெரும்பகுதியையும், மேல்கரைப் பூந்தறை நாட்டின் ஒரு பகுதியையும், காஞ்சிக் கூவல் நாட்டின் சில ஊர்களையும் 800க்கு மேற்பட்ட சிற்றூர்களையும் கொண்டு விளங்குவதே பெருந்துறை வட்டம்.

கொங்குமண்டலச் சதகம் ஊர்த்தொகைப் பாடலில் குறிக்கப்படும் ஊர்கள் பழமையானவையாகும். பெருந்துறை, சென்னிமலை, ஈங்கூர், கொடுமணம், பொன்முடி, பிடாரியூர் ஆகிய ஊர்கள் சங்க காலச் சிறப்புடையன. சங்க காலத்திற்குப் பின்னர் கொங்கு வேளிர் வாழ்ந்த விசயமங்கலம், சிலப்பதிகார உரை ஆசிரியர் வாழ்ந்திருந்த நிரம்பை, பவனந்தி முனிவர் வாழ்ந்த சீனாபுரம் எனப் பலஊர்கள் சங்கத்திலும், சங்ககாலத்தின் பிற்காலத்திலும் பெயரும் புகழும் பெற்று விளங்கியிருந்தன.

கொங்குமண்டலச் சதகத்தில் குறிக்கப்படும் கீழ்க்கண்ட ஆதியூர், குன்னத்தூர், திங்களூர், வாய்ப்பூர், விஜயமங்கலம், நிரம்பையூர், சிறுக்களஞ்சி, செங்கப்பள்ளி, சீனாபுரம், பாலதொழு, வெள்ளிரவெளி, முகுந்தை, குரக்குத்தளி (சர்க்கார் பெரியபாளையம்), கற்றான் காணி, கொடுமணம், ஊற்றுக்குழி என்ற ஊர்கள் குறுப்பு நாட்டைச் சேர்ந்த ஊர்களாகும். " கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்" என்று 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் குறுப்ப நாட்டைக் குறித்துள்ளார்.

காஞ்சிக் கோயில் மட்டும் பெருந்துறை, ஈங்கூர், சென்னிமலை, பிடாரியூர், வெள்ளோடு ஆகிய ஊர்கள் மேல்கரைப் பூந்துறை நாட்டைச் சேர்ந்தவையாகும்.

நால்வகை நிலங்களிலும் மருத நிலமே குடியிருப்பதற்கு ஏற்றதாகும். அந்நிலத்தில் அவர்களுக்குத் தேவையான உணவும், உடையும் எளிதாகக் கிடைத்தன. இருப்பிடத்தைக் காலத்திற்கேற்ப அமைத்துக் கொண்டனர்.பெருந்துறை வட்டத்தில் அமைந்துள்ள ஊர்கள் சங்க காலத் தொடர்புடையதாயினும் வயலும், வயல் சார்ந்த நிலமாகத் தென்படா. காடும் காடுசார்ந்த முல்லை நிலமாக உள்ள இவ்வட்டத்தில் அமைந்துள்ள ஊர்கள், ஓடைகளை ஒட்டியும் குளங்களை ஒட்டியும் அமைந்தவை.

ஈங்கூர்

" பூங்கமழும் ஈங்கியூர் " என்பது ஊர்த் தொகைப் பாடல். இங்கு அருள் பாலிக்கும் அல்லான ஈசுவரனை ஈக்கள் வழிபட்டு அருள்பெற்ற காரணத்தால் ஈக்கு ஊர் – ஈங்கூர்[1] எனப்பட்டது.

ஈஞ்சை என்பது ஒருவகை மரம். இம்மரப் பெயர் வேளாளர் குடிக்குக் குலப் பெயராயிற்று. இவ்வூரைச் சுற்றி ஈஞ்சன் கட்டத்தைச் சேர்ந்த வேளாளப் பெருமக்கள் மிகுதியும் வசிக்கின்றனர். அவர்கள் வசிக்கும் ஊர் ஈங்கூர் ஆயிற்று.

ஈர்ந்தையோன் என்ற சங்க காலத் தலைவன் வாழ்ந்த ஊர் ஈங்கூர்[2]. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் புறநானூற்றில்[3] ஈர்ந்தூர் என்பது இக்காலத்தே கொங்குநாட்டில் ஈங்கூர் என வழங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் தமது பதிப்பில் ஈர்ந்தூர் என்பதைப் பாடபேதமாகக் காட்டியுள்ளார்.

குலோத்துங்கச் சோழன் காலக் (1149-1183) கல்வெட்டு "மேல்கரை நாட்டு ஈங்கையூர்[4] " என்று குறிப்பிடுகிறது.

பிடாரியூர்

புகழ்சேர் பிடாரி நகர் என ஊர்த்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளது.

" **ஆயபதி, மேயதிரு விருந்துமிக விளங்கு திருவிருந்தபுரம்**" என்றும்

"**ஏற்கும் கமலபுரம் திருவிருந்தபுரம்**"[5]

என்றும் சென்னிமலைத் தலபுராணத்தில் இவ்வூர் கமலபுரம், திருவிருந்தபுரம் எனப்படுகிறது. பூந்துறைப் புராணம்

" **ஐந்தாம் வீட்டான்பேர் பிடாரியூராம் அது காளி**
பூசித்த தலமாகும்"[6]

எனப் பிடாரியூர் குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள நத்தமேட்டில் முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு ஓடுகள் கிடைப்பதால் இவ்வூர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகும்.

ஆங்கிலேயர் காலத்தில் நிர்வாக வசதிக்காக முகாசிப் பிடாரியூர், அட்டவணைப் பிடாரியூர் எனப் பிரிக்கப்பட்டது.

வீரராசேந்திரன் காலக் (1206 - 1255) கல்வெட்டில் பிடாரியூர்[7] குறிக்கப்பட்டுள்ளது.

ஆதியூர்

குறுப்பு நாட்டு ஆதியூர், ஆதவூர், ஆதபூர் என்று வீரபாண்டிய தேவன்[8] காலத்துக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. பக்கத்தே உள்ள குன்றத்தூர் என்ற குன்னத்தூர் ஆதி குன்னத்தூர் என்று கூறப்படும் ஆதி, வேளாளர் குலப்பிரிவுகளில் ஒன்று. இப்பகுதியில் இவ்வூரே முதல் ஊராகும் என்பதைச் சுட்டிக் காட்ட இவ்வாறு கூறுகின்றனர்.

குன்னத்தூர்

“குறுப்பு நாட்டு குன்னத்தூரில் உடையார் குன்றமுடையார்க்கு”[9] - என்ற கல்வெட்டுத் தொடரில் ஊரில் “ குன்றமுடையார் ” என்பது பக்கத்தே உள்ள குன்றத்தைக் குறிப்பிடுவதாகும். இவ்வூர் குன்றால் பெயர் பெற்றது.

திங்களூர்

சந்திரனைக்குறிக்கும் தமிழ்ச் சொல் ‘திங்கள்’ என்பதாகும். சோழ நாட்டில் திருவையாற்றுக்கருகே ‘திங்களூர்’ என்ற ஊர் உண்டு. அங்குதான் அப்பூதியடிகள் என்ற திருத்தொண்டர் வாழ்ந்தார்[10]. என்பர் இரா.பி.சேதுப்பிள்ளை. பெரியார் மாவட்டத்தில் உள்ள திங்களூரில் அப்பூதியடிகள் வாழ்ந்தார்[11] என்பர் குழந்தை. குறுப்பு நாட்டுத் திங்களூர் என்பது சாசனத் தொடர்[12] வீரபாண்டியன், விக்கிரமச் சோழன் காலக் கல்வெட்டுக்கள் இவ்வூர்க் கோயிலில் கிடைத்துள்ளன. சமணத் தீர்த்தங்கரரான சந்திரப் பிரபதிர்த்தங்கரரருக்குக் கோயில் உண்டு. இதன் அடிப்படையும் காரணமாகும். “திங்களூர் நொண்டி நாடகம் “ எனும் பிரபந்த நூலும் அச்சாகாமல் உள்ளது. இவ்வூரை அடுத்து அப்பிச்சிமார் மடம் உண்டு. அப்பர் பெயரால் அமைந்த மடமே அப்பிச்சிமார் மடம் ஆயிற்று.[13]

வாய்ப்பூர்

இன்று வாய்ப்பாடி என வழங்கி வருகிறது. நடுகல் ஒன்றுண்டு. புங்கன் என்றவன் தங்கிய இடம் புங்கம்பாடி ஆனது. பாடி முல்லை நிலத்தூர்களைக் குறிப்பிடும் சொல்லாகும்.

நிரம்பையூர்

இன்று நிரம்பை என்று வழங்குகிறது. சிலப்பதிகார உரை ஆசிரியர் விசயமங்கலத்தை அடுத்த நிரம்பை என்னும் ஊரினர்.

முகந்தனூர்

இன்று சர்க்கார் பெரியபாளையம் என்று வழங்குகிறது. வீரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்கள் உண்டு. " வீரசோழ வள நாட்டு முகுந்தனூரான விக்கிரம சோழ சதுர்வேத மங்கலம்" என்றும், சமஸ்த ஜகதாதிபதி ஸ்ரீ கைலாச ஸ்ரீநிவாச சதுர் வேத மங்கலத்து முகுந்தனூர் உடையார் குரக்குத்தளி[14] முகுந்தனூர். விக்கரமச் சோழ சதுர் வேதமங்கலம் என்று வழங்கியது. சுந்தரர் காலத்தும் குரக்குத்தனி என்று பெயர் பெற்றிருந்தது.

கொடுமணல்

நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. "கொடுமணம் பட்ட விலைமான் அருங்கலம் ஒக்கலொடு பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் "[15]

" பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் " என்று கொடுமணல் என்ற ஊர் சங்க இலக்கியத்தில் மருதநிலத்து ஊராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொடுமணல் பழங்கால நகரம் என்பதற்கான சான்றுகளை ஆய்வாளர்கள்[16] ஆராய்ந்துள்ளனர். தனிப் பாடல்களும் காணிப் பாடல்களும் கொடுமணலைப் பாராட்டும் வகையில் உள்ளன.

(அருள்பரவு கொடுமணல், ஆதி கொடுமணல், கார்மேவு கொடுமணல்) இடைக்காலத்தில் கொடுமணல் ஊரில் உள்ள மக்கள் பல்வேறு இடங்களுக்குக் குடியேறினர். தாய்க் கிராமம் வடகரையில் உள்ளது. சூரிபாளையம் என்று முன்பு வழங்கப்பட்ட சிவியார் பாளையம், ஒரத்துப் பள்ளம் அருகே ஏற்பட்ட ஒருத்துப்பாளையம், குப்பம்பாளையம் என மூன்று ஊராகவும், தென்கரையில் தம்பி ரெட்டிபாளையம், தம்பிரெட்டிபாளையம் புதூர், நாமக்காரன் பாளையம், ரங்கம்பாளையம் என நான்கு ஊராகவும் பிரிந்தது.[17]

பொன்முடி

பொன்முடியார் என்ற சங்க காலப் புலவர் இங்கு வாழ்ந்தார். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பொன்முடி என்று இதை கொள்வாரும் உண்டு.[18]

பெருந்துறை

வாகைப் பெருந்துறை என்று சங்க இலக்கியத்தில் புகழப்பட்டுள்ளது. இவ்வூரில் ஒரு மண்கோட்டை உண்டு. கோட்டைப் பகுதியில் உள்ள கோயில்கள் அனைத்தும் கோட்டை ஈசுவரன் கோயில், கோட்டை பெருமாள் கோவில் என்று கூறப்படுகின்றன. கோட்டையை அடுத்துக்+குளம் ஒன்றுண்டு. அக்காலத்தில் குளத்தில் கண்ட நீர்த்துறை பெரிதாயிருந்த படியால் பெருந்துறை எனப்பட்டது.

ஊற்றுக்குழி

பக்கத்தில் கதித்தமலை, அரசண்ணா மலை ஆகிய சிறு குன்றுகள் உண்டு. மழைக்காலத்தில் ஓடிவரும் நீரின் மிகை நிலத்தில் ஊறித் தோண்டிய இடம் தோறும் நீர் ஊறச் செய்தது. ஆகையால் ஊற்றுக்குழியாயிற்று.

வெள்ளோடு

ஓடையால் பெயர் பெற்றது. வீரபாண்டியனின் சேனாபதியான காளிங்கராயன் வானியாற்றின் குறுக்கே அணை கட்டிப் பூந்துறை நாட்டைச் செழிக்கச் செய்தான். இதனை "வானிதனைக் கரைகொண்டதைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை காளிங்கனே" என்ற பாடலில் காலாலும் கோட்டாலும் நிலத்தைக் கீண்டு கண்டது நீர் வெள்ளோடை"[20] என்றும் "மேதி நறும்பாலோடு புனலோடும் வெள்ளோடு"[21] என்றும் இலக்கியங்கள் புகழ்கின்றன.

ஊரின் பக்கத்தே இரண்டு குளங்கள் உண்டு. மழைக்காலத்தில் இருகுளங்களும் நீர் நிறைந்து பெருக்கெடுத்து ஓடும். நீரோடும் ஓடைமண் வெண்ணிறமான களிமண்ணாகும். வெண்ணிறமான களிமண்ணைக் கொண்ட ஓடையின் மேல் கரையில் அமைந்தபடியால் இவ்வூர் வெள்ளோடை ஆயிற்று.

முருங்கைத்தொழு

ஆடு மாடுகள் அடைக்கப்பட்டிருந்த இடம் தொழுவம் எனப்படும். தென்முருங்கைத் தொழு என்பது காணிப்பாடல். முருங்கைப் பெருந்தொழு, தருமமிகு முருங்க நகர் என்றும் இவ்வூர் கூறப்பட்டுள்ளது. பூந்துறை நாட்டுப் பெருந்துளு[22] என்றும் சாசனத்தில் பெருந்தொழு என்றும் வழங்கப்பட்டது.

பெரியார் மாவட்டத்தில் பல மலைகள் உண்டு. மலைகள் எல்லைகளை வரையறை செய்வதற்கேற்றவையாகும். பெருந்தறை வட்டத்தில் சின்ன விலாமலை, பெரிய விலாமலை, சென்னிமலை ஆகிய மலைகளையடுத்து ஊர்கள் ஏற்பட்டபோது அம்மலையின் பெயரே ஊருக்கும் பெயராகி நின்றது. ஊர்கள் தோன்றும் அல்லது அழியும்; ஆனால் மலைகள் அழிவதில்லை.

பண்டைப்புகழ் பெற்ற மலைகளுள் சென்னிமலையும் ஒன்று. சங்க இலக்கியத்தில் சென்னிக்கோடு என்று பெயர் பெற்றிருந்தது.

"ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலை"[23] என்பது பாடல்.

சென்னி விண்ணுயர் பிறங்கல் என்று கூறப்படுவதும் உண்டு. பொன்னுலவுஞ் சென்னிகிரி,[24] சதுமா மறைசூழ் சிரகிரி[25] சிராசலம்[26] என்றும் புகழப்படுகிறது.

புக்காணன் இவ்வூரைத் தமது குறிப்பில் எழுதியுள்ளார். அக்காலத்தே இங்கு இரும்புத் தொழில் நடைபெற்றதாம். கரிகாலச் சோழன் முதலாக எல்லோரும் சென்னியங்கிரி வந்தவர் என்பது சோழன் பூர்வபட்டயமாகும்.

வெள்ளோடு, பூந்துறை, சீனாபுரம், விஜயமங்கலம் ஆகிய இடங்களில் சமணர்கள் வாழ்ந்திருந்தனர். செங்கப்பள்ளி, பனயம்பள்ளி, மூனாம்பள்ளி ஆகிய ஊர்களும் அத்தகையதே குறுப்புநாட்டு செங்கலப்பள்ளி[27] குறுப்பு நாட்டுச் செங்கப்பள்ளி[28] என்றும் வழங்கியது.

கோயில் என்பது ஈசனார்க்குரிய இடமாகும். கோயில் சுற்றி ஏற்பட்ட ஊர் கோயில் எனும் விகுதி பெற்றது. காஞ்சிக்கோயில் நாட்டுக் காஞ்சிக்கோயில்[29] அதுபோன்றதாகும். காஞ்சித் துண்டம் எனப்படுவது இன்றை காஞ்சிக் கோயிலே ஆகும். கொம்மக்கோயில் என்ற ஊரும் கோயிலால் பெயர் பெற்றதாகும்.

உலகபுரம் வெள்ளோடு கிராமத்தில் உள்ளது. வெள்ளோடு உலகுடையான்[30] என்ற தலைவன் பெயரால் உலகபுரம் உண்டானது. இப்போது சிற்றூராக உள்ளது.

நன்னூல் இயற்றிய பவனந்தி முனிவர் சீனாபுரத்தைச் சேர்ந்தவர். அவர் வழிபட்ட ஆதிநாதர் கோயில் உண்டு. இவ்வூர் 'பொன் மதில் சனகை'[31] எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரப்பு என்னும் இணைச்சொல்லானது ஆய் எனும் வள்ளல் பெயரைத் தாங்கி ஆயப்பரப்பு என நிற்கிறது. ஆய் எனும் சொல் இடைச்சாதியையும் குறிப்பிடுவதாகும். இடைச்சாதியினர் தங்கள் பசுக் கூட்டங்களைப் பரவலாக வைத்திருந்ததாகவும் கூடும். பரப்பு எனும் சொல் வீதியைக் குறிப்பிடுவதுடன், அகலம், விரிவு என்றும் பொருள்படும். ஆயர் தம் கால்நடைகளை அகலப் பராமரித்த இடம் ஆயப்பரப்பு ஆகலாம். இரண்டு ஊர்களுக்கிடையேயுள்ள எல்லையில் அமைந்த ஊர் எல்லைக் கிராமம் எனப்படும். குறிஞ்சி நில மக்கள் வாழுமிடம் குறிச்சி எனப்படும். இவ்வூர் குறிச்சிக்குளம் [32] எனவும் வழங்கியிருக்கக்கூடும்.

களஞ்சியம் என்ற சொல் தானியம் இருக்குமிடத்தைக் குறிப்பதுடன் அரசுக் கருவூலத்தையும் குறிக்கும். சிறு என்ற அடைமொழியுடன் சிறுகளஞ்சியம் என்ற சொல் சிறுக்களஞ்சி என்று வழக்காறு பெற்றது. வீரசங்கிலி என்பது வீரத்தின் சிறப்புக் காரணமாக அமைந்த பெயராகும். வீரசங்கிலி என்னும் பெயர் தனியாருக்கும் பெயராய் வழங்கி வருகின்றது.

நிறப்பெயர்களும் ஊருக்குப் பெயராயின. செம்பவளம், பெரிய செம்மண் புத்து என்ற ஊர்ப் பெயர்களில் செம்மை நிறம் சுட்டப்படுகிறது. மயில் ஆடிக்கொண்டிருந்த இடம் மயிலாடி எனப்பட்டது. காடு பிடித்தழித்துக் கொண்ட வெள்ளரிவள்ளி[33] இப்போது வெள்ளிரவெளி என வழங்கப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. கொங்கு நாடு, பக்கம் 215, முத்துசாமி கோனார்.
2. கொங்குமலர், சங்ககால ஈங்கூர், இரா.சென்னியப்பன்
3. புறநானூறு பாட்டு, 180.
4. கலைமகள் கலைக்கூடம், பக்கம் 190, புலவர் செ.இராசு.
5. சென்னிமலைத் தலபுராணம், பாட்டு 27, 39.
6. பூந்துறைப் புராணம்,
7. A.R.E.P.1905, No.557
8. படி எடுக்கப்படாத கல்வெட்டு, உதவி இரா. பூங்குன்றன்.
9. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.250
10. தமிழகம் ஊரும் பேரும், பக்கம் 267, ரா.பி. சேதுப்பிள்ளை
11. கொங்குநாடு, பக்கம் 350, அ.மு. குழந்தை
12. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.259
13. கொங்கு நாடுபக்கம் 350, அ.மு.குழந்தை
14. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் சா.264,265.
15. பதிற்றுப்பத்து, பாட்டு 67.
16. புலவர் செ.இராசு, புலவர் சு. வேலுச்சாமி
17. கொடுமணல் அருள்மிகு தங்கம்மன் வரலாறு,
புலவர் செ. இராசு.

18. கொங்குநாடு, பக்கம் 110, அ.மு.குழந்தை

19. தனிப்பாடல்

20. பூந்துறைப் புராணம், பாடல் 11, தேவர்கள் பூசைச் சருக்கம்

21. சென்னிமலைத் தலபுராணம், பாட்டு 11

22. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.255

23. நற்றிணை பாட்டு 28

24. சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ்

25. சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ் – காலப்பருவம்

26. சென்னிமலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ் – சிறுதேர்ப் பருவம்

27. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா.272

28. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், சா. 273

29. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்,

30. தனிப்பாடல்

31. நன்னூல் – சிறப்புப்பாயிரம்

32. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்,சா.250

33. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் . சா.249

முடிவுரை

இம்மாவட்டத்தின் ஊர்ப் பெயராய்வால் பண்டைய வரலாறு, பண்பாடு, பழக்க வழக்கங்கள், நடைபெற்ற போர்கள், போர் வீரர்கள் முகாமிட்ட பாசறைகள், சாதிகள், குலங்கள், அறச்செயல்கள், தொழில் வளர்ச்சி ஆகியவற்றை முழுமையாக அறிய முடியவில்லையாயினும் துண்டு, துண்டாகச் சிதறுண்ட வரலாற்றை நன்கறிந்து கொள்ளலாம். ஊர்ப் பெயர்களைக் கேட்டவுடன் தத்தம் ஊருக்குரிய சிறப்புக்களை மக்கள் தெளிவாகத் தமதூர் என்ற உள்ளுணர்வோடு வெளிப்படுத்திக் காணலாம். வாய்மொழிக் கதைகளும், தலபுராணங்களும் கூறும் கருத்துக்களில் உள்ள கற்பனை நயங்களை நீக்கி விட்டால் உண்மை வரலாறு கிடைக்கும். காங்கயம் வட்டம் பழைய கோட்டை என்றால் மன்றாடியார் பரம்பரை வரலாறு வெளிப்படும். சங்கரண்டாம் பாளையம், காடையூர், பூந்துறை, வெள்ளோடு என்ற ஊர்களை நினைக்கும் போதெல்லாம் அவ்வூர்களில் இருந்து வந்த ஒப்பற்ற அரசு முறைகள் வெளிப்படாமல் போகா. அக்காலத்தே வாழ்ந்த அரசர்கள் செய்த அறச்செயல்களின் அழியாச் சின்னங்களே பிரமியம், பிரமதேசம், மங்கலம், சூலைக்கல் காடு, தேவஸ்தானக் காடு எனக் குறிக்கப்படும் ஊர்களாகும்.

பண்டைக்கால அரசர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தே நல்லூர் பலவற்றை உண்டாக்கினார்கள். அவ்வூர்களுக்குக் கோட்டையும், பேட்டையும் அமைத்துத் தந்தார்கள். பாசன வசதிக்கான அணைகளைக் கட்டினார்கள் (காளிங்கராயன் வாய்க்கால்). கால்வாய்களை வெட்டினார்கள். இதனால் உழவுத் தொழில் வளரத் தொடங்கியது. அக்காலத்திருந்த அரசு முறை அதிகாரிகளும் தங்கள் பெயராலும் பொதுப் பெயர்களாலும் ஊரை உண்டாக்கித் தந்துள்ளனர். உண்டாக்கிய ஊர்களுக்குப் பொதுவிடம் (நத்தம்) வைக்கப்பட்டிருந்தது. மக்களுக்குத் தேவையான தண்ணீர் இயற்கையாக உள்ள ஆறுகளிலும், பாழிகளிலும் கிடைக்காத போது, குளம் தொட்டு வளம் பெருக்கினர்கள். குடிநீர் வசதி மட்டுமல்ல விவசாயமும், வளரத் தொடங்கியது. அவ்விளை பொருள்களும் ஊர்களுக்குப் பெயராயின (சோளக் காடு, எள்ளுக்காடு). வறட்சி நிலவிய காலங்களில் குடிநீர் வசதிக்காகத் தண்ணீர்ப் பந்தல்கள் வைக்கப்பட்டன. சமூக வளர்ச்சியின் சின்னங்களே ஊர்ப் பெயர்களாகும்.

பசுக்கூட்டங்களை அங்கங்கே மேய்த்துக் கிடத்திய இடங்கள் தொழு, பட்டி எனப்பட்டன. பசுக்களை மேய்த்தவர்கள் கறந்த பாலைத் தயிராக்கிய முதலாவது இடமே தயிர்ப்பாளையம். ஆடுகளை வைத்திருந்தவன் வாழுமிடம் ஆட்டுக்காரன் பாளையம், நெய்விற்றவனிருந்த இடம் நெய்க்காரன் பாளையம், பூசாரி, சேர்வகாரன், ஆண்டி ஆகிய பல்வேறு மக்கள் தாம் தம் மேற்கொண்டிருந்த தொழில்களைச் சுட்டி பெயர்கள் அமைந்து நிற்கின்றன. காடுகளும், மேடுகளும் ஊர்களாயின. பள்ளமும், குழியும் நல்ல வளமான குடியிருப்புக்களாயின. இது எதைக் காட்டுகிறது? மக்களின் நாகரிக வளர்ச்சி உழவின் அடிப்படையில் ஏற்பட்டது என்பதை அறியலாம். ஆடு, மாடுகளை மேய்த்துத் திரிந்தவர்கள் நிலையான குடியிருப்பைக் கொண்டார்கள் என்பதை அறியலாம்.

பாளையம், புதூர், வலசு என்ற விகுதிபெற்ற பெயர்களுடன் கூடிய சிறப்புப் பெயர்கள் அக்காலத்திருந்த தனி மனிதர்களின் சிறப்பை வெளிப்படுத்தும். சாதிப்பெயர்களுடன் கூடிய ஊர்கள் தத்தம் ஜாதியின் சிறப்புக்களை வெளிக்காட்டுவதுடன் அவர்களின் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தும்.

சாதிப் பெயர்கள் (கவுண்டர், வேட்டுவன்), சாதியின் உட்பிரிவுகளாகிய குலப் பெயர்கள் (கூறை, பூலுவன்) ஆகியவை சமூகத்தின் கட்டுத் திட்டங்களையும், பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தும். அம்மக்கள் கொண்டிருந்த தொழில் வளர்ச்சி முன்னேற்றம் பற்றியும் அறிவிக்கும்.

காலந்தோறும் இருந்த விலங்குகள், மரம், செடி, கொடிகள், மலைகள், ஆறுகள், இயற்கை அமைப்புகள் ஆகியவை நாட்டின் இயற்கை வளத்தை வெளிப்படுத்தும். கல், பாறை, குன்று முதலியன இந்தப் பகுதியில் காணும் இயற்கைச் சூழ்நிலைகளைச் சுட்டும். பனங்காடு (பனங்காட்டூர்) அக்காடுகளைப் பயன்படுத்தித் தொழில் நடத்தும் (சாணார்பாளையம்) மக்களும் உடன் வாழ்ந்திருந்தனர் என்பதைக் காட்டும். சமூகத்தில் காணப்படும் பல்வேறு சாதி மக்களும் தாங்கள் வாழ்ந்திருந்த ஊர்களைத் தங்கள் சாதிப் பெயர்களால் (நாசுவம்பாளையம், உப்பிலி பாளையம், நாயக்கனூர்) அமைத்துக் கொண்டனர் என்பதைக் காட்டும். சுருங்கச் சொன்னால் ஊர்ப் பெயர்கள் மக்கள் வாழ்வின் காலக் கண்ணாடி என்பது தெளிவாகும்.

பெரியார் மாவட்டம் - பொதுக்கூறுகள் - அட்டவணை

மொத்த ஊர்கள்	ஈரோடு	காங்கயம்	கோபி	சத்தி	தாராபுரம்	பவானி	பெருந்துறை	மொத்த ஊர்கள்
ஊர்கள்	726	704	467	323	605	550	818	4193
அக்ரஹாரம்	5	---	1	---	01	01	03	11
ஊர்	38	22	66	70	32	179	50	437
சுடவு	---	---	---	02	---	---	---	02
ஓரூர்	12	16	19	16	10	14	15	103
கடை	---	03	---	---	02	---	---	05
கத்தி	---	02	---	---	---	---	---	02
காடு	22	43	07	01	04	06	12	95
கோட்டை	03	02	01	1	07	20	---	34
கோயில்	1	06	02	---	10	---	02	21

கோம்பை	---	---	01	06	---	---	---	07
சிறை	---	---	---	---	---	---	02	02
சாலை	---	---	08	01	---	---	---	09
காலனி,சேரி,தெரு	53	36	05	---	25	26	30	175
சத்திரம்,சாவடி	2	01	---	---	01	---	---	04
தொழு	04	01	---	---	01	---	03	09
நகர்	---	03	---	03	---	---	02	08
நத்தம்	03	32	01	---	03	---	---	39
நீர்நிலைகள்	27	33	31	23	20	24	27	185
பட்டணம்	---	01	---	---	04	---	---	05
பட்டி	10	46	08	06	83	15	16	184
பரப்பு	03	---	---	---	---	---	---	03
பதி	01	07	05	01	---	03	14	31

பள்ளி	04	02	01	18	---	02	03	30
பாடி,வாடி	02	01	01	06	07	03	02	22
பாளையம்	338	207	248	108	208	168	440	1717
புதூர்	56	85	51	27	69	42	76	406
புரம்,புரி	16	24	03	20	22	03	12	100
பேட்டை	01	04	---	---	---	04	01	10
மங்கலம்	07	02	---	02	01	03	01	16
மலை,மேடு	14	09	---	11	---	04	09	49
வலசு	104	98	16	01	83	07	98	407
தண்டா	---	---	---	---	---	04	---	04
பல்வகை	---	---	---	---	---	22	---	22
கஸ்பா	---	---	---	---	12	---	---	12
ரோடு	02	---	---	---	---	---	---	02

பயன்பட்ட நூல்கள்

தமிழ்

அகநானூறு

அபிதான சிந்தாமணி

அவிநாசித் தலபுராணம்

ஆய்வுத்தேன்

ஆனந்தவிகடன் அகராதி

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் கருத்தரங்க நூல்கள்

இரத்திணமூர்த்தி-விறலி விடுதூது,திருப்பூர் பழனிச்சாமி புலவரின் ஏட்டுப்பிரதி

இராமய்யன் அம்மானை

இருளர்களிடையில் திரட்டிய நாடோடிக் கதைகள்

ஐங்குறு நூறு

ஓதாளர் குறவஞ்சி

கரூர் (சிறுநூல்)

கலைக் களஞ்சியம் தொகுதிகள்

கல்வெட்டியல்

கலைமகள் கலைக்கூடம்-புலவர் செ.இராசு.

கலைமகள் கலைக்கூடக் கையேடு-புலவர் செ.இராசு

காணிநூல் பாடல்கள்

காரையூர்ச் செப்பேடு

கொங்கு-மாதஇதழ்கள் தொகுதி 1971 முதல் 1977 வரை

கொங்கு நாடு அ.மு. குழந்தை

கொங்கு நாடு முத்துச்சாமி கோனார்

கொங்கு நாடு நாட்டுக் கவுண்டர்கள்

கொங்கு மண்டலச் சதகம்- கார்மேகக் கவிஞர்

கொங்குமண்டலச் சதகம் வாலசுந்தரக் கவிஞர்

கொங்குமண்டலச் சதகம் வாலசுந்தரக் கவிஞர் உரையாசிரியர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர்

கொங்குமலர்-சிறப்பிதழ்

கொங்கு வேளாளர் புராணவரலாறு

கொடுமணல் இலக்கியங்கள் பதிப்பாசிரியர் புரவர் செ.இராசு

சங்கமேசுவரசுவாமி விறலி விடுதூது பதிப்பாசிரியர் சொக்கலிங்கம்

சிவன்மலைக் குறவஞ்சி

சிவன்மலைப் புராணம்

செங்கம் நடுகற்கள்

சென்னிமலைத் தலபுராணம், சரவணையா

சோழன் பூர்வ பட்டயம்

தமிழகம் ஊரும்,பேரும் ரா.பி. சேதுப்பிள்ளை

தமிழ்நாடு சி.எம். இராமச்சந்திரன் செட்டியார்

தாரமங்கலம் (சிறுநூல்)

திருமந்திரம்

தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி 1,2,3

தேவாரம்

தேனோலை-காலாண்டிதழ் 1975 முதல் 1981 வரை தொகுப்பு

பதிற்றுப்பத்து-உரையாசிரியர் ஔவை சு.துரைசாமி

பத்துப்பாட்டு

பவாநிதல புராணம்

பாளையப் பட்டுக்களின் வம்சாவளி தொகுதி1,2,3,4

பிங்கல நிகண்டு

புறநானூறு, சாமிநாதையர் பதிப்பு

பூந்துறைப் புராணம், காவியண்ண புலவர்

பெரியபுராணம்

மக்கள் மாண்பு

மீனாட்சியம்மை குறம்

முதலிக் காமிண்டன் முடிசூட்டுப் படலம்
(கொங்குமண்டலச் சதகம் குறிப்பு)

மூலனூர் வரலாற்றுப் பாமாலை

மூலனூர் அருள்மிகு வஞ்சியம்மன் கோயில் குடமுழுக்குப்
பெருவிழா மலர்

மேழி விளக்கம்-சரவணையா,
பதிப்பாசிரியர் கே.ரா.தெய்வசிகாமணிக்கவுண்டர்

வேள்விக் குடிச்செப்பேடு

ENGLISH

A.R.E.P.1910,1905,1920,1960-61,1965-66

Ancient Geography of Kongu Country K.S. Vaithianathan

Coimbatore District Mannual, Vol.II (1898)

Caste and Tribes of South India,Vol.III,IV &V.

Epigraphia Indica,Vol.XVII,XVIII,XXX.

Historical Sketches of Deccan, Vol.II

Indian Antiquie, Vol.XXII

Indian Archaology Review 1961-62,1960-61,1962-63

LexiconVol.II

Peasant State and Society in Medieval South India

Regional Perspectives

South Indian Inscription Vol.v

System in Thondaimandalam

Supplement to the Mannual of the Coimbatore District

The Cholas

The Hindu May 1979

The Kongu Country, Dr.Arokiasamy

பிற்சேர்க்கை

ஊர்ப் பெயர் - அகரநிரல்

குறிப்பு

1. ஒவ்வொரு வட்டத்தின் தாய்க் கிராமங்களையும்,அகர நிரலாக்கி வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்துள்ள எண் அத்தாய்க் கிராமத்தின் அளவை எண் ஆகும். தாய்க் கிராமத்தின் அகர நிரல் ஒவ்வொரு வட்டத்தின் ஊர்ப் பெயர் அகராதிக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிற்றூரும் எந்தக் தாய்க் கிராமத்தில் உள்ளது என்பதை அறிய முதலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டு, அதற்கு அடுத்து உள்ள கிராம அளவை எண்ணோடு கூடிய தாய்க்கிராமம் அச்சிற்றூரின் தாய்க் கிராமம் ஆகும்.

2. ஒவ்வொரு ஊர்ப் பெயரிலும் அமைந்துள்ள சிறப்புக் கூறும் ஊர்ப் பெயரின் முடிவில் சுருக்க முறையில் கூறப்பட்டுள்ளது. சான்றாக அ.பெ. என்பது அரசுமுறைப் பெயராக அமைந்துள்ளது என்று கூறலாம்.

3.ஒரு பொதுச் சொல் ஒரு ஊருக்கு மட்டும் அமையப் பெற்றுள்ள ஊர்கள் ஒரு தனிச் சொல்லாக அமையும் ஊர்ப்பெயர்கள் “ஓரூர்” என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புக் கூறுகளின் சுருக்க விளக்கம்
ஊர்ப் பெயர்கள்

அரசு முறைப் பெயர்	அ.பெ.
அணிகலன்கள்	அ.க.
ஆடையின் பெயர்	ஆ.பெ.
ஆயுதப் பெயர்	ஆயு.
இடப்பெயர்	இ.பெ.
உலோகத்தின் பெயர்	உ.பெ.
எண்ணுப்பெயர்	எ.பெ.
கருவிப் பெயர்	க.பெ.
காரணப்பெயர்(அ) காலப்பெயர்	கா.பெ.
குலப்பெயர் (அ)குணப்பெயர்	கு.பெ.
சாதிப்பெயர்	சா.பெ.
சாதிப் பெயருடன் சாதிப் பெயர்	சா.சா.
சினைப் பெயர்	சி.பெ.
செடி,கொடிப் பெயர்	செ.பெ.
தனிப்பெயர்	த.பெ.
தனிப்பெயர் சாதி	த.சா.
திசைப்பெயர்	தி.பெ.
துணைச்சொல் (விகுப் பெயர்)	து.சொ.
தெய்வத்தின் பெயர்	தெ.பெ.
தொழில்முறைப் பெருக்கம்	தொ.பெ.
நிர்வாக முறைப் பெயர்	நி.பெ.
நீர் நிலைப் பெயர்	நீ.பெ.
பட்டப்பெயர்	பட்.பெ.
பறவைப் பெயர்	ப.பெ.
பாசன முறைப் பெயர்	பா.மு.
பிராணிகளின் பெயர்	பி.பெ.
பிறமொழிப் பெயர்	பி.மொ.
பொருள் பெயர்	பொ.பெ.
மரப் பெயர்	ம.பெ.

முறைப் பெயர்	மு.பெ.
விலங்கின் பெயர்	வி.பெ.
வினைபொருள் (அ) வியாபாரப் பொருள்	வி.பொ.

ஈரோடு வட்டம்
பொதுக்கூறு அகர நிரல்

	மொத்த எண்ணிக்கை	பக்கம்
அக்ரஹாரம்	5	171
ஊர்	38	171
ஓரூர்	12	173
காடு,காட்டூர்	22	173
கோட்டை	03	174
சத்திரம்	02	174
சேரி	05	174
தெரு	50	174
தொழு	04	177
தோட்டம்,பாடி,நல்லி	11	177
நத்தம்	03	177
நீர்நிலைகள்	20	177
பட்டி	10	178
பரப்பு	03	179
பள்ளி	04	179
பாளையம்	338	179
புதூர்	56	191
புரம்	16	193
மங்கலம்	08	193
மலை, மலைச்சார்ந்தன	14	194
வலசு	104	194
மொத்த ஊர்கள்	728	

தாய்க் கிராமம் - அகரநிரல்

வ.எண்.	கிராம அளவை எண்	தாய்க் கிராமம்
1.	183	அஞ்சூர்
2.	93	அட்டவணை அனுமன்பள்ளி
3.	65	அணைநாசுவன்பாளையம்
4.	205	அய்யம்பாளையம்
5.	179	அறச்சலூர்
6.	90	அவல்பூந்துறை
7.	52	ஆட்டையாம்பாளையம்
8.	209	ஆவுடையாபாறை
9.	212	இச்சிப்பாளையம்
10.	192	ஈஞ்சம்பள்ளி
11.	73	ஈரோடு
12.	201	ஊஞ்சலூர், ஏ.
13.	54	எலவமலை
14.	188	எல்லைக்காடு
15.	50	எல்லைப்பாளையம்
16.	206	எழுநூத்திமங்கலம்
17.	87	எழுமாத்தூர் (எழுமாதை)
18.	51	கங்காபுரம்
19.	44	கதிரம்பட்டி
20.	63	கரை எல்லப்பாளையம்
21.	97	கனகபுரம்
22.	188	காகம்
23.	83	காங்கயம்பாளையம்
24.	60	குமிளம்பரப்பு
25.	84	குருக்கப்பாளையம்

26.	190	குலவிளக்கு
27.	40	கரபாளையம்
28.	180	கொங்குடையாம்பாளையம்
29.	203	கொடுமுடி
30.	185	கொந்தளம்
31.	181	கொல்லன்கோவில்
32.	201	கொளத்துப்பாளையம் , பி.
33.	82	சாத்தம்பூர்
34.	53	சாமிக்கவுண்டம்பாளையம்
35.	58	சித்தோடு
36.	186	சிவகிரி
37.	75	சூரம்பட்டி
38.	61	சூரியம்பாளையம்
39.	208	சென்னசமுத்திரம்
40.	55	தயிர்பாளையம்
41.	193	தானத்தாம்பாளையம்
42.	76	திண்டல்
43.	47	திண்டல்மலை
44.	92	துய்யம் பூந்துறை
45.	207	தேவகியம்மாபுரம்
46.	46	தோட்டாணி
47.	49	நசியனூர்
48.	46	நஞ்சனாபுரம்
49.	59	நல்லாக்கவுண்டன் பாளையம்
50.	85	நன்செய் ஊத்துக்குனி
51.	195	நன்செய் காளமங்கலம்
52.	198	நன்செய் கிளாம்பாடி
53.	199	நன்செய் குளாநல்லி
54.	59	நன்செய் தளவாய்ப் பாளையம்
55.	81	நன்செய் லக்காபுரம்

56.	210	நாகமநாய்க்கன் பாளையம்
57.	56	நொச்சிப் பாளையம்
58	45	பவளத்தான் பாளையம்
59	191	பழமங்கலம்
60.	196	பாசூர்
61.	68	பி.பெ.அக்ரஹாரம்
62.	72	பி.எஸ். அக்ரஹாரம்
63.	74	பீளமேடு
64.	78	புதூர்
65.	194	புன்செய் காளமங்கலம்
66.	197	புன்செய் கிளாம்பாடி
67.	197	புன்செய் கிளாம்பாடி
68.	200	புன்செய் குளாநல்லி
69.	79	புன்செய் லக்காபுரம்
70.	89	பூந்துறை சேமூர்
71.	67	பெரிய சேமூர்
72.	57	பேரோடு
73.	94	முகாசி அனமன்பள்ளி
74.	77	முத்தம்பாளையம்
75.	183	முருங்கியாம்பாளைம்
76.	42	மூலக்கரை
77.	62	மேட்டுநாசுவம்பாளைம்
78.	86	மொடக்குறிச்சி
79.	91	மொடவாண்டி சத்தியமங்கலம்
80.	43	ராயபாளையம்
81.	204	வடிவுள்ள மங்கலம்
82.	184	வள்ளிபுரம்
83.	48	வில்லரசம்பட்டி
84.	187	விளக்கேத்தி
85.	202	வெங்கம்பூர்

86.	80	வெண்டிபாளையம்
87.	54	வேட்டைபெரியாம்பாளையம்
88.	105	வேப்பம்பாளையம்
89.	88	வேலம்பாளையம்
90.	96	வேலம்பாளையம்
91.	70	வைராபாளையம்
92.	66	எஸ்.பி. அக்ரஹாரம்
93.	71	எஸ்.எஸ்.அக்ரஹாரம்

ஊர்ப் பெயர்கள்

அக்ரஹாரம்

61	68	பி.பெ. அக்ரஹாரம்,நி.பெ.
71	67	பிராமண பெரியஅக்ரஹாரம்
62	72	பி.எஸ்.அக்ரஹாரம்
92	66	எஸ்.பி. அக்ரஹாரம் நி.பெ.
93	71	எஸ்.எஸ். அக்ரஹாரம் நி.பெ.

ஊர்

1	183	அஞ்சூர்,பொ.பெ.
5	179	அறச்சலூர்,பொ.பெ.
17	87	அவலூர்,பொ.பெ.
12	201	ஊஞ்சலூர்,ம.பெ.
85	202	எலையனூர்,பொ.பெ.
85	202	எல்லையூர்,க.பெ.
17	87	எழுமாத்தூர், கா.பெ.
53	199	கரத்தூர்,கா.பெ.
12	201	குப்பிச்சிக்கவுண்டலூர் (அ) குட்டை மணியக்காரனூர், த.சா.

6	90	குளூர்,பொ.பெ.
30	184	கூத்தக்கவுண்டலூர்,த.சா.
13	54	கோமாளிநாய்க்கனூர்,த.சா.
33	82	சாத்தம்பூர்,த.பெ.
29	203	சின்னக்கவுண்டனூர்,த.சா.
71	67	சின்னசேமூர்,நி.பெ.
12	201	செட்டியூர்,சா.பெ.
12	201	செட்டிக்கவுண்டனூர்,சா.சா.
13	54	சென்னநாய்க்கனூர்,த.சா.
45	207	தெக்கலூர்,தி.பெ.
83	48	தோட்டத்தூர்,பா.மு.
47	49	நசியலூர்,பொ.பெ.
68	200	நாய்க்கவடுகனூர், சா.சா.
29	203	பள்ளக்காட்டூர்,இ.பெ.
60	196	பாசூர், ம.பெ.
70	89	பூந்துறைசேமூர்,க.பெ.
71	67	பெரியசேமூர்,நி.பெ.
68	200	பெரியூர்,கா.பெ.
36	186	மசக்கவுண்டலூர்,த.சா.
78	86	மாலூர்,வி.பெ.
6	90	முத்தூர்,த.பெ.
26	190	மொசுவண்ணகவுண்டனூர் (அ) மொசக்காரனூர்,த.சா.
29	203	ராசாக்கவுண்டனூர்,த.சா.
68	200	வரகனூர்,த.பெ.
45	207	வியலிங்கம்பூர்,கா.பெ.
36	61	வீரநல்லூர்,த.சா.
36	61	வீரப்பநாயுடூர், த.சா.
85	202	வெங்கம்பூர்,கா.பெ.
29	203	வெள்ளியங்காட்டூர்.இ.பெ

ஓரூர்

5	179	ஓடா நிலை,கா.பெ.
22	188	காகம்,ப.பெ.
26	190	குலவிளக்கு,கா.பெ.
30	184	கொந்தளம்,பொ.பெ.
31	184	கொல்லன்கோவில்,இ.பெ.
28	180	சானார்பதி,சா.பெ.
17	87	செல்வநகர், (செல்லக்குட்டி), த.பெ.
39	208	பரிவட்டம்,பொ.பெ.
79	91	பேட்டை,து.சொ.
78	86	மொடக்குறிச்சி, கா.பெ.
84	187	விளக்கேத்தி,கா.பெ.
30	184	வீரசங்கிலி,கா.பெ.

காடு, காட்டூர்

68	200	அலக்காரன் காட்டூர்,த.பெ.
5	179	ஊதங்காட்டூர்,த.பெ.
14	189	எல்லைக்காடு,கா.பெ.
12	201	கள்ளிமார் காட்டூர்,செ.பெ.
68	200	கனதியம்காட்டூர், பொ.பெ.
66	194	காட்டூர்,இ.பெ.
12	201	காட்டூர்,இ.பெ.
1	183	காட்டூர்.இ.பெ.
82	185	காரக்காட்டூர்,செ.பெ.
78	86	கொரிகால்காடு,கா.பெ.
68	200	திட்டக்காட்டூர்.கா.பெ.
68	200	துடுர் காட்டூர், கா.பெ.
68	200	நத்தக் காட்டூர், கா.பெ.

12	201	நெய்க்காரன் காட்டூர்,கா.பெ.
21	97	பள்ளக்காடு,இ.பெ.
90	96	பள்ளக்காடு,இ.பெ.
36	186	பெரியகாட்டூர்,கா.பெ.
30	184	பொன்னான் காட்டூர்,த.பெ.
36	186	மாரன் காட்டூர்,த.பெ.
12	201	மூக்கன் காட்டூர்,த.பெ.
68	200	வீரப்பகவுண்டன் காட்டூர், த.சா.
89	88	வேலாங்காடு,ம.பெ.

கோட்டை

36	186	அண்ணாமலைக்கோட்டை, கா.பெ.
30	184	கள்ளபுரம்கோட்டை,கா.பெ.
9	212	வளந்தான்கோட்டை,கா.பெ.

சத்திரம்

67	197	மலையம்பாளையம் சத்திரம், கா.பெ.
11	73	வீரப்பன்சத்திரம்,த.பெ.

சேரி

78	86	ஆலுத்திப்பாளையம் சக்கிலிச்சேரி, கா.பெ.
78	86	சாமிநாதபுரம் சக்கிலிச்சேரி, கா.பெ.
36	186	தலையநல்லூர் பரச்சேரி, கா.பெ.
83	48	பறையன்சேரி,கா.பெ.
67	197	புதுப்பாளையம் பரச்சேரி. கா.பெ.

தெரு

29	203	அரசம்பாளையம் பரத்தெரு, சா.பெ.

64	78	ஆலசாம்பாளையம் சக்கிலித் தெரு,சா.பெ.
13	54	எலவமலைபரத் தெரு, சா.பெ.
66	194	கண்ணுடையாம் பாளையம் பரத் தெரு, சா.பெ.
73	94	கள்ளகவுண்டன் பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
79	91	காளிகவுண்டன் பாளையம் பரத் தெரு, சா.பெ.
11	73	கிருஷ்ணம்பாளையம் பரத் தெரு, சா.பெ.
26	190	குலவிளக்கு பரத்தெரு,சா.பெ.
68	200	குள்ளகவுண்டம்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
28	180	கொல்லன் வலசு சக்கிலித் தெரு, சா.பெ.
26	190	கோவில்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
59	191	கோவில் பாளையம் சக்கிலியர் தெரு, சா.பெ.
38	61	சக்கிலியர் தெரு,சா.பெ.
68	200	சக்கிலியர் தெரு,சா.பெ.
10	192	சக்கிலித் தெரு,சா.பெ.
22	188	சாணார்பாளையம் பரத்தெரு,சா.பெ.
24	60	சாணார்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
68	200	சாம்புதூர் சக்கிலித் தெரு, சா.பெ.
39	208	சிட்டபுல்லாம்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
5	179	செல்லப்பன் பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
70	89	சேமூர் சாணார் தெரு, சா.பெ.
70	89	சேமூர் பரத் தெரு,சா.பெ.
70	89	சேமூர் சக்கிலித் தெரு, சா.பெ.

38	61	சொட்டயம்பாளையம் பரத் தெரு, சா.பெ
39	208	சோளங்காளிபாளையம் சங்கிலித் தெரு, சா.பெ.
78	86	தூரபாளையம் சக்கிலித் தெரு,
68	200	தேவப்பாளையம் சக்கிலித்தெரு, சா.பெ.
73	94	தோப்பனங்காட்டு சக்கிலித் தெரு, சா.பெ.
78	86	நடுப்பாளையம் சக்கிலியர் தெரு, சா.பெ.
37	75	நச்சப்பகவுண்டன் வலசு சக்கிலித் தெரு, சா.பெ.
29	203	நல்லியம்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
64	78	நொச்சிக்காட்டு வலசு பரத் தெரு, சா.பெ.
49	59	பசுவபட்டி சக்கிலித் தெரு,சா.பெ.
49	59	பசுவபட்டி தெற்கு சக்கிலியர் தெரு.சா.பெ.
12	201	பல்லத்தெரு, சா.பெ.
79	91	பல்லபாளையம் பரத் தெரு, சா.பெ.
59	191	பரத்தெரு, சா.பெ.
29	203	பரத்தெரு,சா.பெ.
67	197	புதுப்பாளையம் சக்கிலித்தெரு, சா.பெ.
69	79	புன்செய் லக்காரபுரம் பரத்தெரு, சா.பெ.
26	190	பூசாரிபாளையம் சக்கிலித்தெரு, சா.பெ.
68	200	பெரியூர் பரத்தெரு, சா.பெ.
70	89	பெருமாபாளையம் சக்கிலித்தெரு, சா.பெ.
10	192	முத்துக்கவுண்டம்பாளையம் சக்கிலித் தெரு , சா.பெ.
31	181	மேட்டுப் பரத் தெரு, சா.பெ.
11	73	மோலக்கவுண்டன்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
2	93	வேமாண்டம்பாளையம் சக்கிலித் தெரு, சா.பெ.
78	86	வேலம்பாளையம் சக்கிலியர் தெரு, சா.பெ.

தொழு

79	91	நல்லான்தொழு,கா.பெ.
2	93	புதுத் தொழு, கா.பெ.
2	93	போலத தொழு, கா.பெ.
2	93	முருங்கைத் தொழு, கா.பெ.

தோட்டம்பாடி நல்லி

21	97	அத்திமரத் தோட்டம்,பா.மு.
31	181	அம்மன்கோவில் தோட்டம், பா.மு.
36	61	அய்யங்காட்டுத் தோட்டம்,பா.மு.
46	46	தோட்டாணி,பா.மு.
52	198	நன்செய்கிளாம்பாடி, பா.செ.,நி.பெ.
53	199	நன்செய் குளா நல்லி,பா.மு., நி.பெ.
68	200	புன்செய் குளா நல்லி, பா.மு., நி.பெ.
67	197	புன்செய் கிளாம்பாடி, பா.மு., நி.பெ.
70	89	முரனை காட்டுத்தோட்டம்,பா.மு.
36	186	வாழத்தோட்டம், பா.மு.
82	185	வாழைத்தோட்டம், பா.மு.

நத்தம்

31	181	எலவ நத்தம், ம.பெ.
78	86	பல்லா நத்தம்,சா.ப.
85	202	பூச்சக்காட்டு நத்தம், இ.பெ.

நீர்நிலைகள்

6	90	அவல்பூந்துறை,நி.பெ.

11	73	ஈரோடு
10	192	கிராமடை, நீ.பெ.
11	73	குமலாங்குட்டை, நீ.பெ.
6	90	கொள்ளிமடை, நீ.பெ.
38	58	சித்தோடு,நீ.பெ.
39	208	சென்னசமுத்திரம்,நீ.பெ.
44	92	துய்யம்பூந்துறை,நி.பெ.
50	85	நன்செய் ஊத்துக்குளி, நி.பெ.
77	62	பச்சப்பாவி,நீ.பெ.
6	90	பள்ளியூத்து,நீ.பெ.
72	57	பேரோடு,நீ.பெ.
76	42	மூலக்கரை,பா.பெ.
37	75	மூலக்கரை,பா.பெ.
85	202	மேட்டுக் கொளத்தூர்,பா.பெ.
39	208	ரங்கசமுத்திரம், நீ.பெ.
36	186	ரங்கசமுத்திரம்,நீ.பெ.
85	202	வாக்க்கால் மேட்டூர்,பா.பெ.
45	207	வேலாங்குட்டை,ம.பெ.

பட்டி

19	44	கதிரம்பட்டி,ம.பெ.
72	57	கம்பிளியம்பட்டி,ஆ.பெ.
45	207	கிளியம்பட்டி,ப.பெ.
79	81	கிளியம்பட்டி,ப.பெ.
53	199	சத்திரப்பட்டி,து.கொ.
28	180	சாணார்பட்டி,சா.பெ.
37	75	சூரம்பட்டி,த.பெ.
15	50	தொட்டம்பட்டி,இ.பெ.
49	59	பசுவபட்டி,கா.பெ.

83	48	வில்லரசம்பட்டி,த.பெ.

பரப்பு

24	60	குமிளம் பரப்பி,இ.பெ.
30	184	பெரும் பரப்பு,இ.பெ.
68	200	வெள்ளோட்டம் பரப்பு,இ.பெ.

பள்ளி

2	93	அட்டவணை அனுமன்பள்ளி,நி.பெ.
10	192	ஈஞ்சம்பள்ளி,ம.பெ.
17	87	கட்டப்பள்ளி,கா.பெ.
73	94	முகாசி அனுமன்பள்ளி,நி.பெ.

பாளையம்

5	179	அழக்கவுண்டம்பாளையம்,த.சா.
2	93	அஞ்சுராம்பாளையம்,இ.பெ.
73	94	அஞ்சுராம்பாளையம்,இ.பெ.
3	65	அணைநாசுவம்பாளையம்,த.பெ.
84	187	அத்தப்பம்பாளையம்,த.பெ.
2	93	அமராவதிபாளையம்,த.பெ.
4	205	அய்யம்பாளையம்,த.பெ.
66	194	அய்யக்கவுண்டம்பாளையம்,த.சா.
17	87	அய்யக்கவுண்டம்பாளையம்,த.சா.
29	203	அரசம்பாளையம்,ம.பெ.
7	52	ஆட்டையாம்பாளையம்,கா.பெ.
30	184	ஆண்டாகாட்டுப்பாளையம்,இ.பெ.
45	207	ஆண்டன் முத்தம்பாளையம்,த.பெ.

78	86	ஆலுத்திப்பாளையம்,ம.பெ.
40	55	ஆல்சாம்பாளையம், ம.பெ.
50	85	ஆல்சாம்பாளையம்,ம.பெ.
64	78	ஆல்சாம்பாளையம்,ம.பெ.
79	91	ஆல்சாம்பாளையம்,ம.பெ.
78	86	ஆனந்தம்பாளையம்,த.பெ.
17	87	ஆனந்தம்பாளையம்,த.பெ.
64	78	ஆணைக்கல்பாளையம்,இ.பெ.
6	90	இராடசெட்டிபாளையம், சா.பெ.
9	212	இச்சிப்பாளையம்,ம.பெ.
6	90	இராசாம்பாளையம்,த.பெ.
36	186	இலவம்பாளையம்,ம.பெ.
6	90	உடுப்பாறை வெள்ளியம்பாளையம், இ.பெ.
6	90	இராடசெட்டிபாளையம்,த.சா.
66	194	உத்திண்டிபாளையம்,கா.பெ.
21	97	உப்பிலிபாளையம்,சா.பெ.
5	179	ஊசிப்பாளையம்,க.பெ.
78	86	ஊஞ்சப்பாளையம்,ம.பெ.
2	93	ஊஞ்சப்பாளையம்,ம.பெ.
67	197	எண்ணம்பாளையம்,பொ.பெ.
6	90	எரப்பம்பாளையம்,பொ.பெ.
79	91	எலயாம்பாளையம்,பொ.பெ.
29	203	எல்லையூர் (அ) சூலைக்கல் பாளையம். கா.பெ.
22	188	எல்லப்பாளையம்.கா.பெ.
15	50	எல்லப்பாளையம்.கா.பெ.
36	186	எல்லப்பாளையம், கா.பெ.
13	54	ஐயம்பாளையம்.த.பெ.
47	49	ஒண்டிக்காரன்பாளையம்.பொ.பெ.

83	48	ஒண்டிக்காரன்பாளையம்,பொ.பெ.
78	86	ஓலப்பாளையம்,இ.பெ.
84	187	ஓலப்பாளையம்,இ.பெ.
70	89	கணபதிபாளையம்,த.பெ.
66	194	கணபதிபாளையம்,த.பெ.
29	203	கணபதிபாளையம்,த.பெ.
66	194	கண்ணுடையாம்பாளையம், சி.பெ.
6	90	கந்தசாமிபாளையம்,த.பெ
31	181	கந்தசாமிபாளையம்,த.பெ.
72	57	கரட்டுப்பாளையம்,இ.பெ.
85	202	காட்டுப்பாளையம்,கா.பெ.
82	185	கருங்கம்பாளையம்,கா.பெ.
64	78	கருக்கம்பாளையம்,தெ.பெ.
31	181	கருக்கம்பாளையம்,த.பெ.
62	72	கருங்கல்பாளையம்,கு.பெ.
50	85	கருந்தேவன்பாளையம்,த.பெ.
88	105	கருப்பம்பாளையம்,த.பெ.
67	197	கருமகவுண்டபாளையம்,த.பெ.
2	93	கருமந்தியாம்பாளையம்,கு.பெ.
89	88	கருமாண்டபாளையம்,த.பெ.
6	90	கரும்புளியாம்பாளையம்,கு.பெ.
53	199	கருவேலம்பாளையம்,ம.பெ.
20	63	கரைஎல்லப்பாளையம்,கா.பெ.
85	202	கல்வெட்டுப்பாளையம்,கா.பெ.
44	92	கவுண்டச்சிப்பாளையம்,சா.பெ.
36	186	கவுண்டம்பாளையம்,சா.பெ.
73	94	கள்ளகவுண்டபாளையம்,த.சா.
23	83	காங்கயம்பாளையம்,கா.பெ.
11	73	காசிபாளையம்.
28	180	காசிபாளையம்,த.பெ.

85	202	காசிபாளையம்,த.பெ.
78	86	காட்டுப்பாளையம்,இ.பெ.
22	188	காணியாம்பாளையம்,த.பெ.
